www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

පක්කම் 20 ரூபா 11/00

දිනමුරසු වාරමලර් மே 17–23,1998

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 257

# அந்தரங்கச் சதி

## "சர்வதேச கரும் புலிகள்" உண்மை என்ன?



## எக்ஸ்ரே ரிப்போர்ட்

## தங்கமாலை பரிசுப் போட்டி ஆரம்பம்

சூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## அன்றும் – இன்றும்

அன்புள்ள உங்களுக்கு
வணக்கம்.

தேசிய இனப்பிரச்சனை
முதற்கொண்டு,
வேலை நிறுத்தப் பிரச்சனை
வரை-சகல பிரச்சனைகளும்
ஊதிப் பெரிதாக்கப்படுவதே
இங்கு வாடிக்கையாகிவிட்டது!

பொதுப் பிரச்சனைகளை
பொறுப்புணர்ச்சியுடன்
அணுகும் துணிவும், உறுதியும்
அரசியல் தலைவர்களிடம்
இல்லாமல் போயிருக்கிறது!

ஆட்சியில் இருக்கையில்
ஒரு பேச்சு,
எதிரணியாக இருக்கையில்
இன்னொரு பேச்சு,
இங்கு சகஜம்!

இனப்பிரச்சனையையும்
அதன் விளைவான
ஆயுதப் போராட்டத்தையும்
அன்று நியாயப்படுத்தியவர்
இன்றைய ஜனாதிபதி!

பிரபாகரனை
நெல்சன் மண்டேலாவுடனும்
யாசீர் அரபாத்துடனும்
ஒப்பிட்டுப் புகழ்ந்தவரும்
இன்றைய ஜனாதிபதிதான்!

இப்போது, அவரே
புலிகளை
'பயங்கரவாதிகள்' என்று
பறைசாற்றி வருகிறார்!

கடந்த ஆட்சிக்காலத்தில்
வேலை நிறுத்தம் செய்தவர்களை
ஊக்குவித்தவர்கள்தான்
இன்றைய ஆட்சியில்
வீற்றிருக்கின்றனர்!

வேலை நிறுத்தக்காரர்களை
அன்று தங்கள் தோழர்களாக
உரிமை பாராட்டினார்கள்!

இன்று, ஜனாதிபதியே
வேலை நிறுத்தம் செய்வது
'தேசத்துரோகம்'
என்று கூறியிருக்கிறார்!

பயங்கரவாதத்தைவிட
மிக மோசமானது
தேசத்துரோகம்!

மிகக் கடுமையான
வார்த்தைப் பிரயோகத்தை
வெளியிடும் அளவுக்கு
ஜனாதிபதி சந்திரிக்கா
சீற்றம் கொண்டுள்ளார்!

தன்னைப் பற்றிய
முன்னைய தோற்றப்பாடுகளை
தக்கவைக்க முடியாதளவுக்கு
ஜனாதிபதி சந்திரிக்கா
பொறுமை இழந்துள்ளார்!

இராணுவத் தீர்வில்
பாரிய நம்பிக்கை கொண்டு
போட்ட கணக்குகள்
தப்புக் கணக்குகளாகியுள்ளன!

தென்னிலங்கையில்
அரசியல் வெற்றிகளை குவிக்க
நம்பகமான மூலதனமாக
எதிர்பார்த்திருந்த
இராணுவ வெற்றி
கைக்கெட்டாமல் உள்ளது!

அரைகுறையான தமது
தீர்வுப் பொதியை
தமிழ்பேசும் தரப்பிடம் திணித்து,
சமாதான அரசாக புன்னகைத்து
உலகில் நிதி வளம்பெறும்
கனவும் கைகூடவில்லை.

இவ்வாறான காரணங்களால்
ஜனாதிபதி பொறுமையிழப்பது
தவிர்க்கமுடியாததே!

வண்டிக்கு முன்பாக
குதிரையை பூட்டுவதற்குப் பதிலாக
வண்டிக்குப் பின்னால்
குதிரையைப் பூட்டிவிட்டு
பயணத்தைத் தொடங்கியதன்
பலா பலன்களை
இன்றைய ஆட்சியாளர்கள்
அனுபவிக்கத் தொடங்கியுள்ளனர்!

இனப்பிரச்சனைக்கு
இராணுவத் தீர்வு காணும்
முனைப்பும், நம்பிக்கையும்
மீள முடியாத நெருக்கடிக்குள்
நாட்டை இழுத்துவிட்டுள்ளது!

அதனைப் புரிந்துகொள்ளாது
பொறுமையிழப்பதாலோ,
போராடுவோருக்கு
பட்டங்கள் சூட்டுவதாலோ
யாதொரு புண்ணியமுமில்லை.

போர் வெற்றி பற்றிய
பொய்த்துப் போகும்
காலவரையறைகள்
சிங்கள மக்களின் கண்களையும்
திறக்கச் செய்கின்றன!

இந்த உண்மை நடப்புக்களை
உணராமல்- தாம்
பிடித்த முயலுக்கு மூன்றுகால்
என்று அரசு
பிடிவாதம் பிடிப்பது,
நாட்டின் நலனுக்கே சேதம்!

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## ஈஸ்வர தியானம்

உள்ளமானது கடிவாளமில்லாத குதிரையைப் போன்றது: கட்டுப்பாடற்று அங்குமிங்கும் குதித்துப் பாய்ந்து செல்லக்கூடியது. உள்ளத்தில் உதிக்கும் எண்ணங்களை அளவிட முடியாது. அது செல்லும் வேகத்தில் நவீனமயமான செயற்கைக் கோள்களும் செல்ல முடியாது. ஒரே கணத்தில் உலகம் முழுவதையும் வலம் வந்துவிடும். அடுத்த கணத்தில் அண்டசராசரங்கள் அனைத்தையும் கடந்து சென்று அதே வேகத்தில் மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்துவிடும்.

இத்தனை சக்தி படைத்த உள்ளத்தின் வேகத்தை அடக்கி ஒடுக்கி ஒரு நிலைப்படுத்தினால் அதன் மூலம் ஒப்பற்ற சக்தி பிறக்கிறது. அச்சக்தியை ஆதாரமாக வைத்து அளப்பரிய சாதனைகளைப் படைக்க முடியும்.

கடிவாளமில்லாமல் இலக்கற்றுப் பாயும் குதிரையைக் கடிவாளமிட்டு அடக்கி, குறிப்பிட்ட இலக்கை விரைந்து சென்று அடைய வைக்க முயலுகிறோம்: வெற்றியும் காண்கிறோம். அதை போல் இலக்கின்றி அங்குமிங்கும் அலையும் எண்ண அலைகளை உருவாக்கும் உள்ளத்தை அடக்குவதற்கு ஒரே வழி ஈஸ்வர தியானம். ஐம்புலன்களையும் அடக்கி ஒரு நிலைப்படுத்தி ஒளிமயமான சிவத்தின் மீது பாய்ச்சுவோமானால் அதிலிருந்து பிறக்கும் சக்தியே மகத்தானது.

இறைவனைத் தியானிப்பது ஒன்றும் கடுமையான காரியமல்ல. மலையடிவாரம், மனித சஞ்சாரமற்ற காடுபோன்ற தனிமையான ஓரிடத்தில் தனித்திருந்துதான் தியானிக்க வேண்டும் என்பதில்லை. சனசந்தடி மிக்க சந்தைக் கூட்டத்தின் மத்தியிலும் கடவுளைத் தியானிக்கலாம். வருடக்கணக்கோ, மாதக் கணக்கோ-ஏன் மணிக்கணக்கோ செலவிட்டுத் தியானம் பண்ண வேண்டியதும் அவசியமில்லை. நிற்கும் போதும், நடக்கும்போதும்- வேறு எத்தகைய பணியிலீடுபட்டிருக்கும்போது கூட இறைவனை ஒரு துளி நேரம் மட்டும் புலனடக்கித் தியானித்தால் போதுமானது.

ஞானேந்திரன்.

## அல்குர்ஆனின் அழகிய போதனைகள்

* எனதடியார்களே! அக்கிரமம் செய்வதை எனக்கு நானே ஹறாமாக்கிக் கொண்டேன். அதை (அனைவருக்கும்) ஹறாமாக்கப்பட்டதாக ஆக்கியுள்ளேன். நீங்கள் அக்கிரமம் புரியாதீர்கள்!

* எனதடியார்களே! உங்களில் எவர்களை நான் நேர்வழிப்படுத்தினேனோ அவர்களைத் தவிர அனைவரும் வழிதவறியவர்களே. நேர் வழி காட்டுமாறு என்னை வேண்டுங்கள். நான் உங்களை நேர்வழிப்படுத்துவேன்.

* எனதடியார்களே! நிச்சயமாக உங்கள் மனைவியரிலும் உங்கள் மக்களிலும் உங்களுக்கு விரோதிகள் இருக்கின்றனர்: எனவே அவர்களைப் பற்றி நீங்கள் எச்சரிக்கையாக இருங்கள். அன்றியும் அவர்களின் குற்றம் குறைகளை மன்னித்தும், அவற்றைப் பொருட்படுத்தாமலும், சகித்துக் கொண்டும் இருப்பீர்களாயின் நிச்சயமாக நீங்களே வெற்றியாளர்கள்.

* எவன் எனது வலீ (நேசன்) ஒருவனைப் பகைக்கிறானோ அவனை என்னுடன் போருக்கு வருமாறு நான் பிரகடனம் செய்கிறேன். நான் அவன்மீது கடமையாக்கியவைகளைக் கொண்டு அவன் ஒருபோதும் என்னை நெருங்குவதில்லை. எனதடியானை நான் நேசிக்கின்ற வரை அவன் நபிலான (உபரியான) வணக்கங்களைக் கொண்டு என்னை நெருங்கிக்கொண்டே இருப்பான். நான் அவனை நேசித்துவிட்டாலோ அவன் செவியேற்கக்கூடிய செவியாவேன்: அவன் பார்க்கக்கூடிய கண்ணாவேன்: அவன் பிடிக்கக் கூடிய கையாவேன். அவன் என்னைக் கேட்டால் அவனுக்குக் கொடுப்பேன். அவன் என்னிடம் பாதுகாப்புத் தேடினால் நான் அவனைப் பாதுகாப்பேன். என்னை அவன் ஒரு சாண் நெருங்கினால் நான் அவனிடம் ஒரு முழம் நெருங்குவேன். அவன் என்னிடம் ஒரு முழம் நெருங்கினால் நான் ஒரு பாகம் நெருங்குவேன். அவன் என்னிடம் நடந்து வந்தால் நான் அவனிடம் ஓடோடிச் செல்லுவேன் என்று அல்லாஹ் கூறுவதாக நபி (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள். நூல்: புகாரி.

தொகுப்பு: வை.எம். தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.254

### பரிசுக்குரிய கவிதை

### தடை



ஷெல் வந்த பூமி
இது!
செல்வந்த பூமியல்ல!
நீருக்கும்
தடை வரலாம்
நம்மை-
நிமிராமல் தடுப்பதற்கு!

அ. முகுந்தன்- காரைதீவு.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:

**அவசரம்**

அறம் இல்லா
மண்ணில்
வானம் பொய்க்கும்.
தண்ணீரும் பஞ்சமாகும்
அதற்குள்
நீராடியாக வேண்டும்!

அ. மோகன்ராஜ்- பண்டாரவளை.

**பருவகாலம்**

இன்று
புனல் மழை!
நாளை
ஷெல் மழை!
மாறும் பருவம்
அறியாத
பிள்ளை!

வை. சித்திகிருஷ்ணா- பாண்டிருப்பு-01.

**போரும் நானும்**

போரில்லாமல்
நாள் இல்லை!
நீரில்லாமல்
நான் இல்லை!
போருக்கு
இரத்தம் வேண்டும்
எனக்கு
சுத்தம் வேண்டும்!

ந. அழகராசா- கலைப்பீடம், பேராதனை ப.க.

**அவதானம்**

குளிக்கும் போதும்
குழந்தைக்கு
குண்டோசை
அவதானம்!

ஆ. ஆனந்தி- வீரமுனை

**ஷெல் மழை**

ஷெல் மழை
ஓயும் வரை,
சிந்தும் நீரில்
நீராடியும்
மகிழ்ச்சியில்லை!

யாழ். பாரதி.

## கவிதைப் போட்டி இல.257



(படப்பிடிப்பு:- கொட்டராமுல்லை பாருக்)

கவனியுங்கள்! எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்பட வேண்டிய கடைசித் திகதி:- 23.05.1998

முகவரி: கவிதைப் போட்டி இல.257, தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**சலுகைகள்**

குழாயை திருத்தித்தாருங்கள்
நன்றி சொல்வோம்!
அதற்காக-
போராட்டம் நடப்பது
இதற்காகத்தானென்று
எண்ணுதல் ஆகாது!!

எஸ். பிரபா- பதுளை.

**எப்போது?**

குழாய் நீரிலும்
கந்தக வாசனை!
போருக்குள் வாழ்க்கை
பொழுது புலர்வதெப்போ?

ப. புனிதம்- அகதிமுகாம், கோழிக்கூடு/வவு.

**துரோகி**

நீயும்
வேலை நிறுத்தம்
செய்து விடாதே!
செய்யின் நீயும்
தேசத் துரோகியாவாய்!

எம்.என். நவ்ஷாத்- நிந்தவூர்.

**ஜாக்கிரதை!**

மேகம் கறுத்திடும் நேரமதில்
மேனி குளிர்ந்திட நீ நினைப்பாய்
போர் சத்தம் கேட்டிடுமோ
இந்த நீர்ச்சத்தம் இடையிலே!

தெ. லோஜனா- கொழும்பு-15.






# வாசக(ர்)சாலை

## சபாஷ் அமீன்!

இடி அமீனின் அட்டகாசம் தாங்க முடியவில்லை. உகண்டா என்ன பாடுபடப் போகிறதோ? டயானாவின் கதையில் ஏராளமான திரைமறைவுத் தகவல்களைத் தருகிறார் புவனா. பாராட்டு!

கே. பிரேமா, கொழும்பு-10.

## ஐக்கிய வெட்கம்

தமிழ்க் கட்சிகளின் ஐக்கியம் மெய்சிலிர்க்க வைக்கிறது. மட்டக்களப்பில் மூன்று கட்சி கூட்டாக மேதினம். யாழ்ப்பாணத்தில் இரண்டு கட்சி கூட்டாக மேதினம். பிராந்திய ரீதியான கொள்கை(?) முரண்பாடோ? தாங்களும் குழம்பி, மக்களையும் குழப்புகிறார்களே!

வி.சி. சிவகுமாரன், பட்டிருப்பு.

## சாக்கடை குளிப்பு

த. கட்சிகளுக்கு காதிலை பூ கந்தசாமியார் கொடுத்தது தர்ம அடி. ஆனாலும் அவர்கள் திருந்தப்போவதில்லை. முக்காலும் சாக்கடையில் நனைந்துவிட்டனர். இனி பாதியில் திரும்பமாட்டார்கள். முழுவதும் நனையவே விரும்புவர்.

தி. சபாரத்னம், மட்டக்களப்பு.

## யாரும் இல்லை

கிழக்கில், குறிப்பாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விசேஷ அதிரடிப் படையினரின் தொல்லைகள் எல்லை மீறுகின்றன. 'அம்பாறையை காப்பாற்றுவோம்' என்று நீலிக்கண்ணீர் வடிக்கும் அரசியல்வாதிகள் எங்கே போனார்கள்? காரைதீவு, கல்முனை பகுதிகளில் மர்மக் கொலைகள் தொடருகின்றன. சுட்டிக்காட்டி நீதி கேட்க யாரும் இல்லை இங்கே.

பி. கோபாலன், கல்முனை.

தமிழக அரசியலின் சீரழிவையும் நகைச்சுவையாக குத்திக் காட்டுகிறார் காதிலை பூ கந்தசாமியார். கலைஞர்மீது தீராக் கோபமோ?

எல். வசந்தகுமார், சிலாபம்.

கொழும்பில் பாதுகாப்பு கெடுபிடிகள் உச்ச நிலை அடைந்து, தமிழரின் தன்மானத்திற்கு களங்கம் கற்பிப்பதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் தமிழ் கட்சிகள் 'யாம் இருக்கப் பயமேன்' என்று கூறுவதும், உரிமை பற்றி வாய் கிழிய பேசுவதும், 'கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவன் 'வானம் ஏறி வைகுண்டம் போவேன்' என்று சொன்னதற்கு ஒப்பானதாகவே இருக்கும்.

ஈ.எம். அருமைதாசன், கொம்பனித்தெரு.

## தொழில்

அன்பு முரசே!

கூட்டணியினர் விவாதம் என்ற பெயரில் பொல்லைக் கொடுத்து தமிழ் மக்களுக்கு அடிவாங்கித் தந்ததை நக்கீரன் அம்பலப்படுத்தி இருந்தார். தங்களுக்கு விளம்பரம் தேடுவதற்காக அரசுக்கு இலாபம் பெற்றுக் கொடுப்பதே இக்கட்சிகளின் தொழிலாச்சு.

எம். லீனஸ், மட்டக்குளி.

## மாபெரும் அநீதியும் மூடிமறைப்பும்

முரசுக்கு;

யாழ் குடாநாட்டில் காணாமல் போனோர் விவகாரத்தில் ஆரம்பம் முதலே 'முரசு' தெளிவான கருத்துக்களை முன்வைத்து வந்தது. காணாமல் போனோரின் உறவினர்களது தார்மீக கோபத்தை கட்சிகள் தங்கள் சுயநலன்களுக்காக பயன்படுத்திவிட்டு, இறுதியில் புஸ்வாணமாக்கப்போகிறார்கள் என்ற எச்சரிக்கையும் முரசின் கருத்துக்களில் ஒலித்தன. பலியானோரில் 16 பேர் மட்டுமே பலியானதாக கதையை முடித்துள்ளது அரசாங்கம். எந்த தமிழ்க் கட்சியாவது எதிர்ப்புக் குரல் கொடுத்ததா? தங்கள் ஆட்சேபனையைத் தெரிவித்தனவா?

'காணாமல் போனோர் சங்கம்' என்னும் அமைப்புக்கூட பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. அதற்குள் உள்ளோர் சிலருக்கு ஜனாதிபதியை காணக்கிடைத்ததே பெரும் பாக்கியம் என்ற நினைப்புப்போலும்.

மாபெரும் அநீதி ஒன்றை மாபெரும் புத்திசாலித்தனத்தோடும், தமிழ்க் கட்சிகளின் கையாலாகத்தனத்தின் காரணமாகவும் அரசு மூடி மறைத்து விட்டது.

வி. கந்தவேள், சுன்னாகம்.

## சிந்தை இரங்காதவர்

முரசே!

இங்கு கைதாகி கொல்லப்பட்ட அறுநூறுக்கு மேற்பட்டோருக்காக அம்மையாருடன் சேர்ந்து தமிழ்க் கட்சிகள் இறுதிக்கிரியை நடத்திவிட்டன. "சொந்த சகோதரர்கள் துன்பத்தில் சாதல் கண்டும் சிந்தை இரங்காரடி கிளியே, வாய்ச் சொல்லில் வீரரடி" எனப் பாரதியார் அன்றே பாடிவைத்தான். அது இவர்களுக்காகத்தான்.

சி. ஜெயதேவன், கொக்குவில்.

## உள்ளூராட்சித் தேர்தல் வரை விளையாட்டு

ஆசிரியருக்கு;

முரசின் பெருமையும், நேர்மையும் எமக்கும் புரிந்தது. பெயர் வெளியிட விரும்பவில்லை. யாழில் காணாமல் போனவர்களில் எனது மச்சினரும் ஒருவர். "கண்டுபிடிச்சுத் தருகிறோம்!" என்றும், "அந்த முகாமில் இருக்கிறார்", "இந்த முகாமில் இருக்கக்கூடும்" என்றெல்லாம் உள்ளூராட்சித் தேர்தல்வரை சில கட்சிப் பிரமுகர்கள் கூறியதை நம்பினோம்.

எங்கள் உறவினர்கள் உயிரோடு இல்லை என்று தேர்தலுக்கு முன்பாகத் தெரிந்துபோனால், அரசோடு நிற்கும் தங்களுக்கு வாக்குகள் விழாது எனக் கருதியே திட்டமிட்டு ஏமாற்றி இருக்கிறார்கள்.

இவர்களும் ஒரு காலத்தில் ஆயுதம் ஏந்திய இயக்கங்கள்தானே, இந்த அவலத்தில் விளையாட மாட்டார்கள் என்று நினைத்தோம். 'முரசு' வெளியிட்ட தகவல்களைக்கூட நம்பாதிருந்தோம்.

இப்போது எங்கள் பிள்ளைகள் பல நூறுபேரை பலிகொடுத்து நாம் தவிக்க, 16 பேர் மட்டும் பலியானதாக முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைத்துள்ளனர். இந்த அநியாயத்தை எதிர்த்துப் பேச தெம்பு இல்லாமல் தங்கள் சுயரூபத்தைக் காண்பித்துவிட்டன தமிழ்க் கட்சிகள். இக் கட்சிகள் எமக்கு ஏன்?

ஏ.எஸ். யாழ்ப்பாணம்.

## என்ன நோக்கம்?

திருகோணமலை மாவட்டத்தில் சொந்தமண்ணை விழுங்க இனவாத முதலைகள் கங்கணம் கட்டி நிற்கின்றன. உப்பாறு மக்களுக்காக, பகிரங்கமாக நின்று போராட பா.உ சம்பந்தன்கூட முன்வரவில்லை. வேறு தமிழ்க் கட்சித் தலைவர்களும் தலை காட்டவில்லை. உண்மையாகத்தான் கேட்கிறேன், இக் கட்சிகளின் நோக்கம் என்ன? எல்லாம் பறிபோகும்வரை பார்த்துக்கொண்டு இருந்துவிட்டு எப்போது 'வீரம்' காட்ட உத்தேசமாம்?

க. கிருஷ்ணமூர்த்தி, திருமலை.

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.

மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர், த.பெ.இல:- 1772, கொழும்பு.



படிப்பகம்

www.padippakam.com

## 'சைபர் தாக்குதல்' வெறும் புரளி!

### புலிகள் வட்டாரம் அலட்சியம்

(நமது நிருபர்)

**க**ம்பியூட்டர் தகவல் தொடர்பு செயற்பாட்டில் புலிகள் 'சைபர் தாக்குதல்' நடத்தியதாக வெளியான செய்திகளை புலிகளின் சர்வதேச தலைமையக வட்டாரங்கள் நிராகரித்துள்ளன.

உத்தியோகபூர்வமற்ற முறையில் யாரோ சில அதிகாரிகள் கூறியதாக வெளியான செய்தியை தாம் ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை எனவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கம்பியூட்டர் வலைப்பின்னல்களைத் தகர்ப்பது என்பதும், அதுவும் அமெரிக்காவின் கம்பியூட்டர் தகவல் தொடர்பை தகர்க்க திட்டமிடுவது என்பதும் சாதாரணமான விடயங்கள் அல்ல. அவ்வாறு நடந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் அமெரிக்க அரசு உத்தியோகபூர்வமாக அதனை அறிவித்திருக்கும்.

யாரும் தம்மை உத்தியோகபூர்வமாக இனம் காட்டி பொறுப்பேற்க முன்வராத தகவலாகவே அச் செய்தி வெளியாகியுள்ளது.

பொய்யென்று நிருபிக்கப்பட்டால்கூட தப்பிக்கொள்ள வசதியாகவே இவ்வாறான செய்திகள்-யாருடைய பெயரும் குறிப்பிடப் படாமல்-வெளியிடப்படுவது வழக்கமாகும்.

## உள் சதியா? வெளிச்சதியா?

### தொலைத் தொடர்பு குண்டு வெடிப்புக்கள்

களுத்துறை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையக் குண்டுவெடிப்பு, குளியாப்பிட்டி தொலைத் தொடர்பு நிலையக் குண்டு வெடிப்பு ஆகியவை பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளன.

தனியார் தொலைத் தொடர்பு நிறுவனம் ஒன்றுக்கும் களுத்துறை குண்டுவெடிப்புக்கும் இடையே தொடர்பு இருப்பதாகவும் சில தகவல்கள் வெளியாகி இருந்தன.

தமிழ்ப் பொறியியலாளர் ஒருவர் களுத்துறை தொலைத் தொடர்பு நிலையத்திற்கு யாருடைய அழைப்பும் இன்றி சென்று வந்ததாக சில செய்தி நிறுவனங்கள் அப்போது கூறியிருந்தன. அது முற்றிலும் தவறான தகவல் என்று தெரியவந்துள்ளது.

தொழில்நுட்ப உதவியாளரான தமிழர் ஒருவரே, திருத்த வேலைக்கு அழைக்கப்பட்டு சென்று வந்திருந்தார். அவர் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு எவ்வித சந்தேகமும் இல்லையென விடுதலையாகியுள்ளார். அதேபோல் சிங்கள தொழில்நுட்பவியலாளர் ஒருவரும் விசாரிக்கப்பட்டு விடுதலையானார்.

புலிகளுக்கோ, ஜே.வி.பி.யினருக்கோ அக் குண்டுவெடிப்பில் தொடர்பு இல்லை என்றே தெரியவந்துள்ளது.

இந்நிலையில் குளியாப்பிட்டி தொலைத் தொடர்பு நிலையத்தில் குண்டு வெடித்துள்ளது. மிகக் குறைந்தளவான வெடிமருந்துகளைப் பாவித்தே இரு குண்டு வெடிப்புக்களும் நடத்தப்பட்டுள்ளன.

தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலைய முட்கம்பிகள் வெட்டப்பட்டிருந்தன. அதுவும்கூட உள்ளிருந்தே நடைபெற்ற வேலையாக இருக்கலாம் என்றும், உள்ளே இருப்பவர்களின் வேலை என்பதால்தான் சந்தேகம் வராமல் இருக்கவே அப்படிச் செய்யப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப் படுகிறது. வர்த்தகப் போட்டியா? அல்லது ஜே.வி.பி.யின் வேலையா? இல்லையெனில் அரசு-எதிர்க்கட்சி அரசியல் மோதலின் எதிரொலிகளா? என்று பலவாறான சந்தேகங்கள் எழுந்துள்ளன.

# 'வடக்கு–கிழக்கில் காணாமல்போனோர் விவகாரம்'

## சிறிதாகக் காட்டவே பொதுவான ஆணைக்குழு!

**நா**டெங்கும் காணாமல் போனோரைக் கண்டுபிடிக்க விசாரணைக் கமிஷன் ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

யாழ் குடாநாட்டில் காணாமல் போன அறுநூற்றுக்கு மேற்பட்டவர்களின் கதி அறிய தனியான விசாரணைக் கமிஷன் அமைக்கப்படும் என்று ஜனாதிபதி கூறியதாக ஈ.பி.டி.பி., கூட்டணி ஆகிய கட்சிகள் கூறியிருந்தன.

அவ்வாறு தனியான கமிஷன் எதுவும் நியமிக்கப்படமாட்டாது என்பது இப்போது தெளிவாகிவிட்டது.

### அரசு தயக்கம்

யாழ் குடாநாட்டில் காணமல் போனோர் பற்றி மட்டுமே ஆராயக் கமிஷன் நியமித்தால் படையினர் மத்தியில் அதிருப்திகள் தோன்றும் என அரசு கருதுவதாகத் தெரிகிறது. தவிர, யாழ் குடாநாட்டில் காணாமல்போன சம்பவங்கள் தமது ஆட்சிக் காலத்திலேயே நடைபெற்றமையால்– சாட்சியங்கள் மூலம் அவை மட்டும் தனியாக வெளியானால் தமது 'இமேஜ்' பாதிக்கப்படும் என்ற அச்சமும் அரசுக்கு இருக்கிறது.

அதேசமயம் யாழ் குடாநாட்டில் காணாமல்போனோர் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சமீபத்தில் சர்வதேச மன்னிப்புச் சபை இலங்கை அரசை கோரியுள்ளது.

இவ்வாறான நிர்ப்பந்தம் காரணமாகவே நாடெங்கும் காணாமல் போனோர் பற்றிய விசாரணை ஆணைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக அரசு அறிவித்துள்ளது.

தென்னிலங்கையில் கடந்த ஆட்சிக் காலத்தில் காணாமல் போனோர் பற்றி ஆராய ஏற்கனவே பல விசாரணைக் கமிஷன்கள் நியமிக்கப்பட்டன.

ஓய்வுபெற்ற நீதியரசர் பாலகிட்ணர் தலைமையில் இயங்கிய ஆணைக்குழு முன்பாக கிழக்கில் கைதாகி கொல்லப்பட்டோரின் உறவினர்கள் கண்ணீர்க் கதைகளைக் கூறியிருந்தனர். அந்த அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் மீண்டும் ஒருதடவை அந்த உறவினர்களை அழவைத்து சாட்சியம் பெற்று காலத்தை இழுத்தடிக்கப் போகிறார்களா? என்றும் கேட்கப்படுகிறது.

### அம்பலப்படுத்தலாம்

"யாழ் குடாநாட்டில் சூரியக்கதிர் நடவடிக்கைக்குப் பின்னர் காணாமல் போனார் பற்றி ஆராய மட்டுமே இதுவரை விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்படவில்லை. விசாரணை ஆணைக்குழு நியமிப்பதால் மட்டும் உரிய நடவடிக்கை எடுக்கப்படப் போவதில்லை. ஆனால், காணாமல் போன சம்பவங்களை சாட்சியங்கள் மூலம் அம்பலப் படுத்த சந்தர்ப்பம் கிடைக்கும்.

அதற்கான வாய்ப்பை வழங்கி தன் பெயரைக் கெடுத்துக்கொள்ள அரசு முன்வராது என்பது எதிர்பார்க்கப்பட்டதே!" என்று மனித உரிமை அமைப்பு ஒன்றின் பிரதிநிதி கூறினார்.

ஐ.தே.கட்சி ஆட்சிக் காலத்தில் தென்னிலங்கையில் காணாமல் போனோரின் தொகையுடன் ஒப்பிட்டால், யாழ் குடாநாட்டில் தமது ஆட்சிக்காலத்தில் காணாமல்போனோர் தொகை மிகச் சொற்பம் என்று காட்டுவதற்கு அரசு முற்படுகிறது. அதற்காகவே பொதுவாக ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளது. ஆனால் சனத்தொகை விகிதாசாரப்படி பார்த்தால் இன்றைய ஆட்சியில் வடக்கில் காணாமல் போனோர் தொகை தென்னிலங்கையில் காணாமல் போனோர் தொகைக்கு குறைவானதல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

### ஏன் தயக்கம்?

வடக்கு-கிழக்கில் காணாமல் போனோர் பிரச்சனையை சிறிதாக்கிக் காட்டுவதற்கு வழிவகுக்கக்கூடிய விசாரணை ஆணைக்குழு ஒன்று தற்போது நியமிக்கப்பட்டுள்ளது. இதனைச் சுட்டிக்காட்ட எந்தவொரு தமிழ்க் கட்சியும் முன்வராதது ஏன்? அக் கட்சிகளும் இந்த விசாரணைக் குழுவைக்காட்டி தமது மக்களை நம்பவைக்கப்போகிறார்களா? என்றும் அந்தப் பிரதிநிதி கேள்வி எழுப்பியுள்ளார்.

"தற்போதைய விசாரணைக்குழு தன் விசாரணைகளை முடிக்கும்போது இன்றைய அரசின் பதவிக்காலம்கூட முடிந்துவிடுகிறதோ தெரியவில்லை," என்றும் அவர் கூறினார்.

## அட்டன் மின்மாற்றி தகர்ப்பு

### விடுதலைப் புலிகளே பொறுப்பு

**ம**லையகத்தில் அட்டன் பகுதியில் மே முதலாம் திகதி மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதற்கு புலிகளே காரணம் என்று தெரிகிறது.

மலையகத்தில் பெருந்தோட்ட தொழிற்துறை மூலம் அரசுக்கு பெரும் வருமானம் கிடைத்து வருகிறது.

மலையகப் பகுதிகளில் மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டால் அவற்றை மீண்டும் நிறுவியே தீர வேண்டும். இல்லையெனில் தோட்டத் தொழிற்துறை பாதிக்கப்படும். ஆகவேதான் மலையகப் பகுதிகளில் உள்ள மின்மாற்றிகளை புலிகள் குறிவைத்துள்ளனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் ரத்வத்தையே மின்சார அமைச்சராகவும் இருப்பதால், மின்மாற்றிகள் மீதான தாக்குதல்கள் அதிகமாகியுள்ளன.

வடக்கு-கிழக்கு, மலையகம் மற்றும் வடக்கு-கிழக்கு எல்லைப் பகுதிகளில் புலிகளால் இதுவரை தகர்க்கப்பட்ட மின்மாற்றிகளின் பெறுமதி பல கோடிகளைத் தாண்டியுள்ளது.

மின்மாற்றித் தகர்ப்புக்கள் குறித்து புலிகள் சூசகமாக கருத்துக்கள் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

மலையகத்தில் இருந்து பெருமளவான இளைஞர்கள் புலிகள் அமைப்பில் இணைந்து வருகின்றனர்.

'ஜயசிக்குறுய்' படைகளுக்கு எதிரான சமரில் மலையக இளைஞர்கள் சிலரும் பலியாகி உள்ளனர்.

## பாடசாலையில் ஆட்திரட்டும் திட்டம்

### செய்தி பொய்யல்ல என்று தெரிவிப்பு

"பாடசாலை மாணவர்களை படையில் சேர்க்கும் யோசனை அரசுக்கு இல்லை. அவ்வாறான செய்திகள் திட்டமிட்ட பொய்ப் பிரசாரமே" என்று அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருந்தமை தெரிந்ததே.

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகை தவறான செய்தியை வெளியிட்டதாகவும் அமைச்சர் குற்றம்சாட்டியிருந்தார்.

ஆனால் 'சண்டே ரைம்ஸ்'-அமைச்சரின் கூற்றை மறுதலித்து, தனது செய்தி சரியானதே என்று மீண்டும் தெரிவித்துள்ளது.

"படைகளை விட்டுச் சென்றவர்கள் மீண்டும் வந்து சேராத பட்சத்தில், பாடசாலைகளுக்கு சென்று படைக்கு ஆள் திரட்டுவோம்" என்று ஜெனரல் அநுருத்த ரத்வத்தை கூறினார்.

இராணுவத் தளபதி ரோகான் டி.எஸ். தலுவத்த மேலும் ஒருபடி மேலே போய், பள்ளிக்கூடங்களில் மட்டுமல்ல, சமுர்த்திப் பணியாளர்களிடமும், நாடு தழுவியரீதியில் மக்களிடமும் சென்று படைக்கு ஆள் திரட்டுவோம்!" என்று செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

ஐ.நா.வுக்கான சிறுவர் விவகாரங்களைக் கையாள்வதற்குப் பொறுப்பாளரான ஒலரா ஒட்டுனு இங்கு வரும்போது மேற்கண்ட செய்திகள் வெளியானதாலேயே அமைச்சர் மங்கள சமரவீர மறுப்புத் தெரிவித்திருக்கிறார் என்று 'சண்டே ரைம்ஸ்' தெரிவித்துள்ளது.

## போர்முனை நிலவரம் கவலைக்கிடம் – "போதிய ஓய்வும் உறக்கமும் இல்லை!"

**இ**ராணுவத்திலிருந்து ஆயிரக்கணக்கில் துருப்புகள் வெளியேறுவதற்கு உயிரைப் பாதுகாத்துக் கொள்வது மட்டும்தான் காரணமல்ல. வேறு பல காரணங்களும் படைவிலகலுக்கு துருப்புக்களைத் தூண்டுகின்றன என்று 'ஐலண்ட்' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் தீட்டியுள்ளது. அக்காரணங்கள் 'ஐலண்ட்'டில் பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ளன:

"போர்முனைக்குச் செல்பவர்கள் போதுமான ஓய்வு- உறக்கம் போஷாக்குணவு மற்றும் வசதிகள் எதுவுமின்றி பல வாரங்கள் காடுகளில் இருக்கவேண்டியிருப்பதனால் விரக்தியடைந்து விடுகிறார்கள்.

சில காலத்துக்கு முன்னர் வடகிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா அவர்கள் போர்முனைக்குச் சென்று, அங்கிருந்த படையினரின் துன்பதுயரங்களைக் கேட்டறிந்துள்ளார்.

அவர்களில் பலர், பலமாதங்களாக தங்களுடைய உள்ளாடைகளையே மாற்ற வசதியில்லாமல் துன்பப்படுவதாகக் கூறியுள்ளனராம்.

முன்னரங்க அணிகளில் உள்ளவர்களுக்கு விடுமுறைகள் வழங்கப்படுவதில்லை. அவ்வாறு விடுமுறை அளிக்கப்பட்டாலும் தங்களுடைய குடும்பத்தவர்களிடம் வந்து சேர்வதற்கான போக்குவரத்து வசதிகள் கிடைப்பதில்லை.

படைகளை விட்டு வெளியேறுபவர்களில் பெரும்பாலானோர், போர்முனையில் மாதக் கணக்கில் பலதரப்பட்ட துன்பங்களை அனுபவித்து விட்டு வீடு திரும்பியதும், மீண்டும் அந்த நரக வாழ்க்கையை நினைத்துக்கூடப் பார்க்க விரும்புவதில்லை," என்று 'ஐலண்ட்' ஆசிரியர் தலையங்கத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## புளொட் மீதான தாக்குதல்

**வ**வுனியாவில் 12.05.97 அன்று புளொட் இயக்கத்தினர்மீது நடைபெற்ற தாக்குதலுக்கும் புலிகளுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று நம்பகமாகத் தெரியவந்துள்ளது.

புளொட் உப தலைவர் மாணிக்கம் தாசனை குறிவைத்தே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சமீபத்தில்தான் யாழில் இருந்த மாணிக்கம்தாசன் வவுனியா சென்றிருந்தார். மாணிக்கம்தாசனின் நடமாட்டங்கள் பகிரங்கமாக இருப்பதில்லை. அதனால் அவரது நடமாட்டங்கள் பற்றி உள்ளிருந்து தகவல்கள் இல்லாமல் மேற்கண்ட தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்க முடியாது.

சம்பவத்தின்போது மாணிக்கம்தாசன் சென்ற வேன்தான் முன்னால் சென்றுகொண்டிருந்தது. பின்னால் சின்னதாசன் ஒருவேனில் சென்றார். திடீரென்று சின்னதாசனின் வேன் மாணிக்கம்தாசனின் வேனை முந்திக்கொண்டு முன்னால் சென்றதாம்.

வேன் இரண்டும் புறப்பட்டபோது தமக்கு கிடைத்த தகவல்படியே தாக்குதல் நடத்தியவர்கள் செயற்பட்டுள்ளனர். இடை வழியில் ஏற்பட்ட மாற்றத்தை அவர்கள் அறிந்திருக்கவில்லை. அதனால் மாணிக்கம் தாசனுக்கு வைத்த குறியில், அவரது வலதுகரமான சின்னதாசன் சிக்கியுள்ளார்.

மாணிக்கம்தாசன் புறப்பட்ட இடத்தில் இருந்து தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திற்கு தகவல் சென்றுள்ளது. தம்மை இனம் காட்ட விரும்பாதோர் தாக்குதல் நடத்தும் முறையிலேயே தாக்குதல் இடம்பெற்றுள்ளதையும் அவதானிக்க முடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் வவுனியா நகரில் புளொட், ரெலோ இயக்கத்தினர் மோதிக்கொண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர்

### பிரபாவுக்கு புகழாரம்

"இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழனுடன் இலங்கை அரசு பேச்சு நடத்த வேண்டும்!" இவ்வாறு ரெலோ இயக்கத்தின் முக்கிய பிரமுகரான என். சிறீகந்தா தெரிவித்துள்ளார்.

ரெலோ இயக்கத் தலைவர் சிறி சபாரத்தினம் நினைவு தினக் கூட்டம் யாழ்ப்பாணம் நல்லூரில் நடைபெற்றது. அக் கூட்டத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

"சிறி சபாரத்தினத்தை கொன்றவர்கள் யார் என்பது எமக்குத் தெரியும். நாம்தான் கூறுகிறோம், இலங்கை அரசு இனப் பிரச்சனையைத் தீர்க்க வேண்டுமானால் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தமிழனான பிரபாகரனுடன் பேசவேண்டும்!" என்று அவர் கூறினார்.

"தமிழினம் ஒரு கொடியின்கீழ் ஒரே தலைமையின்கீழ் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும். அதற்கான காலகட்டமே இது வாகும்!" என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கடும் வெப்பத் தாக்குதல்

### பயிற்சி முகாம்கள் மூடப்பட்டன!

**நா**ட்டில் குறிப்பாக வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் அகோர வெய்யிலின் கொடூரத்திற்குத் தாக்குப்பிடிக்க முடியாததால் கிழக்கில் பல இராணுவப் பயிற்சிப் பாசறைகள் மூடப்பட்டுள்ளன.

மாதுறு ஓயாவிலுள்ள படைப் பயிற்சிப் பாடசாலை மூடப்பட்டுவிட்டது. இந்த முகாமில் பயிற்சி பெற்ற ஒருவர் தற்சமயம் பரவியுள்ள வைரஸ் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு பொலன்னறுவை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது. மேலும் இம்முகாமில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த 32பேர் கால்கள் கூனிக் குறுகியதால் ஊனமடைந்துள்ளனர். மின்னேரியாவில் இடம்பெறும் படையினரின் பயிற்சியும் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

மணலாற்றில் உள்ள படைப்பயிற்சி முகாமும் அதி கொடூர உஷ்ணத்தின் காரணமாக விரைவில் மூடப்படலாம் என்று கூறப்பட்டிருக்கிறது.

இதனிடையே கடும் வரட்சியினாலும் புற்றரைகளும், காட்டு மரங்களும் கருகி மடிந்துள்ளன. இதனால் எளிதில் தீப்பற்றிக் கொள்கிறது. ஆங்காங்கே இடம் பெறும் தீவைப்புச் சம்பவங்களுக்குப் புலிகள்தான் காரணமென்று படையினரும், படையினரே காரணமென்று புலிகளும் பரஸ்பரம் குற்றஞ் சாட்டி வருகின்றனர்.

## புலிகளுக்கு மோட்டார் சைக்கிள்

### பிரதியமைச்சர் அன்பளிப்பு?

**பி**ரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் தனது வாகனத்தில் கடந்த 09.05.98 அன்று கொழும்பு- மட்டக்களப்பு வீதி வழியாகக் கொழும்பிலிருந்து மட்டக்களப்பை வந்தடைந்தார். வடக்கு-கிழக்குப் பகுதிகளில் வழக்கமாக முக்கிய பிரமுகர்களும், படையினரின் வாகனத் தொடரணிகளும் வீதிப் பாதுகாப்பை உறுதிப்படுத்தி வீதியில் ஆங்காங்கே படையினர் நிறுத்தப்பட்ட பின்னர்தான் பயணம் செய்ய அனுமதிக்கப்படுவதுண்டு.

பிரதியமைச்சர் விஜயம் செய்த அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு வெலிக்கந்தையில் வைத்து 'வீதிப்பாதுகாப்பு இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை' என்று பிரதியமைச்சரிடம் படையினர் கூறியும் அவர் அதைப் பொருட்படுத்தாது மட்டக்களப்புக்கு வந்துவிட்டாராம். இந்தச் சம்பவம் படையினர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியிருப்பதாகத் தகவல்கள் கசிகின்றன. ஏற்கனவே மட்டக்களப்பில் புலிகள் இயக்கத்தினரின் வசமுள்ள பகுதிகளுக்குப் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுத்தாகவும், புலிகள் இயக்கத்தினருக்கு அவர் 25 மோட்டர் சைக்கிள்களை இரகசியமாக வழங்கியிருப்பதாகவும் அதிருப்திப் பேச்சுக்களில் பரவலாக அடிபட்டது என்று விஷயமறிந்த படை அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

பிரதியமைச்சர் விடுதலைப் புலிகளுக்கு மோட்டார் சைக்கிள்களை வழங்கியமை கசியத் தொடங்கிய பிறகு அதைச் சமாளிப்பதற்காகவும், படையினரின் வெறுப்பைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் பிரதியமைச்சர் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு படைமுகாம்களுக்கு அடிக்கடி விஜயம் செய்தார் என்றும் கூறப்படுகிறது.

புலிகள் இயக்கத்தினர் தன்மீது எதிர்ப்புக் காட்டுகிறார்கள் என்று காட்டிக்கொள்வதற்காக பிரதியமைச்சரின் ஏற்பாட்டில், பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்ட காத்தான்குடியில் சில மின்மாற்றிகள் தகர்க்கப்பட்டதாகவும் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றன.

மட்டக்களப்பில் நடைபெறவிருந்த சுதந்திரப் பொன்விழா நிகழ்ச்சியில் பிரதியமைச்சர் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள இருந்தார். எனினும் அதற்கு முதல்நாளே யாருக்கும் தெரியாமல் அமைச்சர் திடீரென காத்தான்குடியிலிருந்து கொழும்பு புறப்பட்டுவிட்டார்.

மறுநாள் சுதந்திரப் பொன்விழாக் கொடி ஏற்றப்படவிருந்த கச்சேரிக்கு புலிகள் மோட்டார்களை ஏவினார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. விசயம் முன்கூட்டியே தெரிந்தே அமைச்சர் நிகழ்ச்சியில் கலந்து கொள்ளாது கொழும்பு சென்றாரோ? என்றும் படையினரால் அலசப்பட்டதாம்.

## கிழக்கில் புலிகள் அணி திரள்வு!

**ம**ட்டக்களப்பு மாவட்டத்தில் புலி இயக்கத்தினரின் வசமுள்ள பகுதியில் அவர்களது பயிற்சி முகாம்களிலிருந்து புறப்பட்ட ஏராளமான புலி இயக்க உறுப்பினர்கள் தாக்குதல் நடவடிக்கைக்கு ஒன்று குவிவதாகத் தெரிவிக்கப்படுகிறது. எத்தகைய தாக்குதல் திட்டத்தை வகுத்து அவர்கள் அணி திரள்கிறார்கள் என்ற விபரத்தை அறிய முடியாமலுள்ளது. தமது தாக்குதல் திட்டம் கசியாதிருக்கப் பொதுமக்களுக்குப் போக்குக்காட்டி விட்டு வேறொரு பகுதிக்கே அவர்களது தாக்குதல் அணி விரைவது புலிகளின் வழக்கமான பாணியாகும்.

மட்டக்களப்பு- பதுளை வீதியில் பல உழவு இயந்திரங்களில் சென்று நூற்றுக்கதிகமானோர் ஒன்று குவிக்கப்பட்டதாக பொதுமக்கள் தெரிவிக்கிறார்கள். இத்தகவல்கள் படையினருக்கும் கிட்டியுள்ளதால் எல்லைப் பகுதிகள் உஷார் படுத்தப்பட்டுள்ளன.

## "தகிக்கும் வெய்யிலில் நடக்க வைக்காதீர்!"

### பயணிகள் படையினரிடம் கோரிக்கை!

(மட்டக்களப்பு நிருபர்)

**த**ற்போது நிலவிவரும் அகோர வெப்பத்தாலும், வரட்சியினாலும் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதோடு பல வகையான நோய்களும் படு வேகமாகப் பீடித்து வருகின்றன.

திருமலை, மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் தாங்கவொண்ணாத அதிகூடிய வெப்பமும் வரட்சியும் நிலவுவதால் இந்தப் பகுதிகளில் குடிநீருக்குப் பெரும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதோடு, விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. பலர் தொற்றுநோய்களால் இறந்துள்ளார்கள். பாடசாலை மாணவர்களின் வரவில் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது. கால்நடைகளும் இறந்துள்ளன.

கொடூரமான வெய்யிலின் விளைவால் இத்தகைய இழப்புக்கள் ஏற்பட்டுள்ள போதும், பாதுகாப்புக் கெடுபிடிகள் குறைந்தபாடில்லை. சோதனைகளுக்காக வாகனங்களில் இருந்து இறக்கப்படும் பயணிகள் தகிக்கும் வெய்யிலில் மிக நீண்டதூரம்-சில இடங்களில் 300 மீட்டர் வரை-நடந்து செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயற்கையின் சீற்றத்தையும் பொருட்படுத்தாது பயணிகளை மனிதாபிமானமற்ற ரீதியில் நடக்க வைக்காது, வாகனத்திலிருந்து இறங்குமிடத்திலேயே சோதனை முடித்து அவ்விடத்திலேயே வைத்து ஏறிச் செல்ல ஆவன செய்யுமாறு பயணிகள் கேட்கின்றனர். இவ்விடயத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் கவனத்திலெடுக்க வேண்டுமென்றும் மக்கள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அஞ்சலக அதிகாரிகளின் அசிரத்தை!

## திறந்த நிலையில் தபால் பெட்டி

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு- செங்கலடி பிரதம அஞ்சலகத்தின் கீழ்வரும் இலக்கம் C.N. கொண்ட ஏறாவூர் வம்மியடியிலுள்ள தபால் பெட்டியில் அப்பகுதி மக்கள் தமது அஞ்சல்களைச் சேர்ப்பிக்கிறார்கள். ஆனால் இத்தபால் பெட்டி பூட்டப்படாத நிலையிலுள்ளதால் சிறுவர்கள் இதனை விளையாட்டுக்குரியதாக நினைத்து அதில் சேர்ந்து கிடக்கும் தபால்களை அள்ளிச் சென்று விடுகிறார்கள். இதுபோன்ற சம்பவங்கள் இத்தபால் பெட்டியில் அஞ்சல்களைச் சேர்ப்போருக்குப் பலமுறை நடந்துள்ளதாகப் பொதுமக்கள் புகார் தெரிவிக்கிறார்கள். தாம் பலமுறை நேரில் கண்டு சிறுவர்களின் இத்தகைய நடவடிக்கைகளைத் தடுத்ததாகவும் கூறுகிறார்கள். அதிகாரிகள் கவனத்திலெடுக்க வேண்டும். இத்தபால் பெட்டியைப் பாவனைக்கு உதவாதது என்று அஞ்சலகம் அறிவிக்க வேண்டும். அன்றேல் பாதுகாப்பான தபால் பெட்டியாக இதைப் பூட்டி வைக்க வேண்டும். தபால் சேவையின் மகத்துவத்தை இழிவு படுத்தும் வகையிலும் பொதுமக்களை ஏமாற்றும் வகையிலும் இது போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்க தபால் திணைக்கள அதிகாரிகள் இடமளிக்கக்கூடாது என்று பொதுமக்கள் கோருகிறார்கள்.

இதேவேளை மட்டக்களப்பு- திருப்பெருந்துறை, சுமார் 350 குடும்பங்களைச் சேர்ந்த 1500 பேரைக் கொண்ட ஒரு மீள் குடியமர்வு மாதிரிக் கிராமமாகும். பல்வேறு இடங்களிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் இங்கு மீள் குடியமர்த்தப் பட்டிருக்கிறார்கள். எனினும் பல அடிப்படை வசதிகள் அங்கு நிறைவேற்றப் படவில்லை. பிரதானமாக இங்குள்ள மக்கள் தமது தபால், தந்தி, தொலைபேசி, காசுக்கட்டளை, பக்ஸ், தபால் முத்திரைகள்,பொதுசன உதவிப் பணம், வானொலி தொலைக்காட்சி அனுமதிப்பத்திரம் என்பனவற்றைப் பெறுவதற்காக போக்குவரத்து வசதிகள் கூட இல்லாத இக் கிராமத்திலிருந்து 4 மைல் தொலைவிலுள்ள மட்டக்களப்புக்குச் செல்ல வேண்டியுள்ளது. இக்கிராம மக்களின் நன்மை கருதி இங்கு ஒரு உப தபாலகம் அமைக்க ஆவன செய்யுமாறு சம்பந்தப்பட்ட சகலரையும் அவ்வூர் மக்கள் கேட்கிறார்கள். ■

# வடி சாராயத்தைத் தடுப்பதில் எதிர்ப்பு!

## பெண்கள் நடத்திய தாக்குதல்

(மட்டக்களப்பு நிருபர்)

வடிசாராயம் மற்றும் போதைப் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்வதைத் தடுக்கும் நடவடிக்கையில்? இந்த விவகாரங்களில் சம்பந்தப்பட்டோரிடமிருந்து பல எதிர்ப்புக்களைச் சந்திக்க வேண்டியிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கிறார்கள்.

சம்பத்தில் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் வடிசாராயம் தயாரிப்போரைக் கண்டு பிடித்துத் தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்ட கிராம சேவகர் தலைமையிலான குழுவினர் கடும் எதிர்ப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். வடி சாராயம் தயாரிப்பதில் ஈடுபட்ட ஒரு பெண்- தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட கிராமசேவகரைத் தாக்கியுள்ளார். இவ்வாறான இரு வேறு சம்பவங்கள் ஏறாவூர்ப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவில் இடம்பெற்றுள்ளன.

சமூக நல விரோதிகளான ஒரு சிலரின் செல்வாக்குகளால் இத்தகைய சமூகச் சீரமைப்புக் காரியங்களில் ஈடுபடுவதில் ஏற்படும் எதிர்ப்புக்களால் பல பின்னடைவுகளைச் சந்திக்க வேண்டியிருப்பதாக அதிகாரிகள் மேலும் தெரிவித்தார்கள். இத்தகைய சமூகச் சீர்கேடுகளைக் களைவதில் சமுதாய நலனில் அக்கறை கொண்ட சகலரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென்று தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்ட அதிகாரிகள் வேண்டுகோள் விடுக்கிறார்கள்.

இதனிடையே மட்டக்களப்பு- திருப்பெருந்துறைக் கிராமத்தில் வடிசாராயம் காய்ச்சி விற்பதில் ஈடுபட்டுவந்த சுமார் 30 குடும்பங்களை அந்த நடவடிக்கையிலிருந்து விலக்கி சமுதாய நீரோட்டத்தில் ஆக்கபூர்வ செயற்பாடுகளில் மாற்றியிருப்பதாக அப்பகுதிச் சுபீட்சத் (சமூர்த்தி) திட்ட ஊக்குவிப்பாளர்கள் தெரிவித்தார்கள். கடுமையான நடவடிக்கைகள் ஏதுமின்றி விழிப்புணர்வை ஊட்டியே அவர்களை சமூக நலச் செயற்பாடுகளில் இணையச் செய்ததாக அவர்கள் மேலும் தெரிவித்தார்கள். ■

# பாதி வீதி திறக்கப்படும்

மட்டக்களப்பு- ஏறாவூர் பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் பொதுப் போக்குவரத்திற்கு மூடப்பட்டிருக்கும் கொழும்பு- மட்டக்களப்பு பிரதான நெடுஞ்சாலையில் பாதி வீதியைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இதற்காக வீதியின் அரைவாசிப் பகுதிக்கு பெரிய இரும்புக் கேடர்கள் நடப்பட்டு உயர்ந்த மதில் அமைக்கப்பட்டு வருகிறது.

இது ஒரு புறமிருக்க, பொலிஸில் அதிகாரத் தரப்பிலுள்ளோர், இவ்வீதியை உபயோகிக்கும் வாகனக்காரரிடம் ஒரு லொறிக்கு 300/ ரூபா விகிதமும், ஒரு உழவு இயந்திரத்திற்கு இருநூறு ரூபா விகிதமும் பணம் வசூலித்தனராம்.

இத் தொகைகளைத் தாம் பெற்று வீதியின் அரைப் பகுதியை மறைத்து மதில் அமைத்தவுடன் மூடப்பட்டிருக்கும் பிரதான நெடுஞ்சாலையைத் திறந்து விடலாம். வாகனக்காரர்களின் சொகுசுக்காகவே இந்தவித நடவடிக்கை என்று கூறியே நிதி வசூலிக்கப்பட்டதாம்.

நிதி கைக்குக் கிடைத்தவுடன் நிதி பெற்றுக் கொண்டமைக்காக அடையாளம் காணப்பட முடியாத பற்றுச் சீட்டும் வழங்கப்பட்டதாக பொலிஸார் சிலர் தெரிவித்தனர். ஆனால் மதில் அமைப்பதற்கு பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டிலிருந்தே பணம் பெறப்படுகிறது. ●

# பாதாள உலகக் கோஷ்டிகளுக்கும்

## பொலிஸ் அதிகாரிகளுக்கும் தொடர்பு

சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டிருக்கும் பாதாள உலகக் குழுவினருக்கு படைகளுக்குரிய துப்பாக்கிகள், ரவைகள் போன்றவற்றை விற்றார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேடப்பட்டு வந்த இரு பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர்களில் ஒருவர் அண்மையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு பௌத்தலோக மாவத்தையிலுள்ள அதிரடிப் படை முகாம் தலைமைக் காரியாலயத்தில் வைத்தே இவர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

பாதாள உலகத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கருதப்படும் 11 பேர் வரை இதுவரை கைது செய்யப்பட்டு பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் கொடுத்த தகவலின் அடிப்படையில்தான் களுத்துறை வாசியான பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டார். இந்த பொலிஸ் உத்தியோகத்தர் பாதாள உலகைச் சேர்ந்தவர் என்று கைது செய்யப்பட்ட சுரேஷ் என்பவருக்கு ஒரு கைத்துப்பாக்கியை ரூபா 45 ஆயிரத்துக்கு விற்றுள்ளாராம்.

களனி பொலிசார் நடத்திய விசாரணையின்போது, மேற்கூறப்பட்ட பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் இருவரும் 9எம்.எம். பிஸ்டல்கள், 38ரக ரிவோல்வர்கள், இவற்றுக்கு வேண்டிய ரவைகள் ஆகியவற்றையும் விற்பனை செய்துள்ளனர் என்று தெரியவந்துள்ளது. மருதானை பொலிஸ் பிரிவினரும் களனி பொலிசைச் சேர்ந்த சிறப்பு விசாரணைப் பிரிவினரும் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

பயங்கரக் குற்றச் செயல்களிலீடுபட்டு வருவோர் பலர் ஆளும் கட்சியைச் சேர்ந்த அமைச்சர்களுடனும் நெருக்கமான உறவு வைத்திருப்பது வெளிப்படையாகத் தெரிந்துள்ளது.

தங்கள் குட்டு வெளிப்பட்டுவிடுமோ என்று சில அரசியல் பிரமுகர்கள் அச்சங் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது. ■

# நீரில் மூழ்கிவரும் மன்னார்த் தீவு!

## மணல் கொள்ளையின் எதிரொலி!

மன்னார் நிருபர்

இலங்கையின் வட மேற்குப் பகுதியில் அமைந்திருக்கும் மன்னார்த் தீவு இன்னும் சில வருடங்களில் நீரில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இத்தீவின் கரையோரப்பகுதிகளில் அளவுக்கதிகமாக மண் அகழ்ந்தெடுக்கப்படுவதே இதற்கான காரணமாகும்.

தினமும் நூற்றுக்கணக்கான கியூப் மணல் இப்பகுதியிலிருந்து அகழ்ந்தெடுக்கப்படுகிறது. அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டே சில விஷமிகள் இவ்வேலையைச் செய்து வருகின்றனர்.

மன்னார் பிரதேச செயலாளர் செல்வி எஸ். கணபதிப்பிள்ளை கடந்த வருடம் மேற்படி மணல் அகழ்ந்தெடுக்கும் விடயம் தொடர்பாக கிராம அதிகாரிகளின் உதவியுடன் நடவடிக்கை எடுத்திருந்தார். இது தற்போது அமுல் நடத்தப்படுவதாக தெரியவில்லை.

மன்னார் தீவு ஏறத்தாழ 25 கிலோ மீற்றர் நீளமும் 5கிலோ மீற்றர் அகலமும் கொண்டதாகும். தற்போதுள்ள நிலைமையின் படி மணல் அகழ்தல் தொடருமானால் இவ்வருடம் டிசம்பர் மாதமளவில் மன்னார் பாரிய வெள்ளப் பெருக்கை எதிர் நோக்கும் அபாயம் உள்ளது. மன்னார் - தலைமன்னார் வீதியில் கூடுதலாக மணல் எடுக்கப்படுகிறது. இவ்வீதியில் 2 கிலோ மீற்றர் தூரம் வரை காடுகளும் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் உடனடியாக மணல் அகழ்ந்தெடுக்கப்படுவது தடுக்கப்படாவிட்டால் மன்னார் தீவு இலங்கை வரைப்படத்திலிருந்தே காணமல் போய்விடக்கூடும். ●

# சிங்களத்தில் பதிவுப் பத்திரம்

சமூகநல தொண்டர் ஸ்தாபனங்களினால் கிராமங்களிலும் நகரங்களிலும் உருவாக்கப்படும் சங்கங்களை பதிவு செய்வதற்காக பிரதேச செயலகங்களினால் வழங்கப்படும் பூரணப்படுத்தப்பட வேண்டிய மூலப்பதிவு பத்திரம் தனிச் சிங்களத்தில் வழங்கப்படுகிறது.

இதனால் கிழக்கு மாகாணத்தில் கடமையில் ஈடுபடும் சமூக நல அலுவலரினால் கிராமங்களில் உருவாக்கப்படும் குழுக்களை ஒரு சங்கமாக பதிவு செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றனர்.

பிரதேச வாழ் மக்களுக்காக இயங்கும் பிரதேச செயலகங்கள் மக்களுக்குச் செய்யும் உதவிகள் இவைகள் தானா?

எல்லா மூலப்பத்திரங்களும் தமிழில் வரும்போது இது மட்டும் ஏன் சிங்களத்தில் வருகிறது?. இவை தமிழ்த்தேசியத்தின் அழிவின் துளிகளா?. யோ. முத்துக்கிருஸ்ணா. மட்டக்களப்பு.

விளம்பரப் பகுதி


மனோதத்துவ வைத்தியம்
கொழும்பு விலாசம் மட்டும் மாற்றப்பட்டுள்ளது
பிரபல மனோதத்துவ நிபுணர் ஆறுமுகம் அவர்களை
வவுனியாவில்
மே 16, 17, 18 ஆம் திகதிகளில்
(2ம் குறுக்குத் தெரு) ஞானவைரவர் கோவில் ஒழுங்கை
VANNI INN இல் சந்திக்கலாம்
T.P. 024 - 22074 இல் முன்கூட்டியே பதிவு செய்யவும்.
கொழும்பில்
மே 23 முதல் 31 வரை
DR. P. ARUMUGAM,
BEAUTY LODGE
(ஐந்துலாம்பு சந்தியிலிருந்து 100 யார் தூரத்தில் உள்ளது)
67, A Wolfendhal Street. Colombo - 13
Tel: 338165 - 338166 Fax - 338161
கொழும்பு நாட்களில் மட்டும்செல்டெல் No. 072-609388
கொழும்பில் முன்கூட்டியே பதிவு செய்யவும்,
மட்டக்களப்பு விலாசத்துக்கு மட்டும் கடித தொடர்பு வைக்கவும்

மிகவும் குறைந்த விலையில்
தொலைபேசி
சுவிஸிலிருந்து வெளிநாடுகளுக்கு பேசுவதற்கு
சுவிஸிலேயே மிகவும் குறைந்த கட்டணத்தில்
தொலைபேசி அட்டைகள்
Global line, Tele line
CHF 20, 30, 50, 100, 200 (vip card)
பெறுமதியான அட்டைகளை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
மேலும் மொத்தமாகவும். சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
மொத்தமாக பெறுபவர்களுக்கு
விசேட கழிவு உண்டு
தொடர்புகளுக்கு
S.KUMAR - BERN - SWISS
Tele Phone No : 031 - 992 47 36
Mobile (Natel) : 079 - 304 81 70

கொழும்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதில் முன்னோடி.....
நாகூர் டிரவல்ஸ் & டுவர்ஸ்
★ குவைத் ★ டுபாய் ★ சவூதி அரேபியா ★ ஜோர்தான்
★ சிங்கப்பூர் நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்கும்
ஏராளமான வேலைவாய்ப்புக்கள் - இன்றே நாடுங்கள்
NAGOOR Travels & Tours
33 DIAS PLACE, GUNASINGHEPURA, COLOMBO - 12.
அங்கீகார இல: 1094
☎ 439392
Royal - 071-35132

மலையாள மாந்திரிகம்


மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார், காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டி தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

"சுவிட்ஸர்லாந்து நாட்டில் ஹோட்டல் முகாமைத்துவ கற்கை நெறி"
சுவிற்ஸர்லாந்து நாட்டில் ஹோட்டல் முகாமைத்துவம் (Hotel Management) தொடர்பான டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பமாகவுள்ளது. இதற்கான நேர்முகப் பரீட்சை தினமும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை கீழ் காணப்படும் முகவரியில் நடாத்தப்படுகின்றது
பாடத்திட்டத்துக்கான கல்வித் தகைமை:
க.பொ.த. (சாதாரணம்) ஆங்கிலம் உட்பட சித்தியடைந்த, 18 வயதிற்கு மேற்பட்டோர்.
Daluwatta & Jaffe Associates
LG 15, Peoples Park, Bodhiraja Mawatha, Pettah, Colombo-11.
Tel: 075-336437

வகுப்பு
Chinese Cookery,
Fabric Painting, indian Cutting - தையல்
Panclay & Costume Jewellerysets
General cookery கற்பிக்கப்படும்
Zulfikah Hameed
176, Weluvena Rd, Dematagoda, Col-09.
Tel- 683005

பாஸ்மதி அரிசி

பாகிஸ்தானிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பிரிமியர் பிராண்ட்
பாஸ்மதி அரிசி
மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு.
ஞானம் இம்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்,
இல. 79, 5 ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு - 11. T. P. 449255

சித்தர் மாந்திரீகம்
அதிஷ்டகரமான வாழ்க்கை அமைய வேண்டுமா? காதல் விவகாரம் கைகூட வேண்டுமா? தொழில் சிறந்திட வேண்டுமா? இல்லற வாழ்வு இனித்திட வேண்டுமா? இவ்விதமாக உங்கள் பிரச்சனைகள் எதுவாயினும் உடனடியாக பூரணவெற்றி பெற்றிட ஒரு தடவை மட்டக்களப்பு கோளாவில் மணி மாந்திரீகச் சித்தர் "சக்திசரவணா"வுடன் தொடர்பு கொள்ளுங்கள். சங்கடங்கள் தீர சக்தி சரவணாவை நாடுங்கள். சோதிட ரீதியாக உத்தரவாதமான எதிர்காலப்பலன்கள் எம்மிடம் அறியலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கான சிறந்த துரித விசேட சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. உங்கள் வெற்றியும், திருப்தியும் எமது குறிக்கோளாகும்.
1ந் திகதி முதல் 25ந் திகதி வரை
SHAKTHY SARAVANA, 30/16, MALLIKA LANE, WELLAWATTA, COLOMBO-06. TELE PHONE: 500067.
25ந் திகதி முதல் 30ந் திகதி வரை
SHAKTHY SARAVANA, 82, MANIKKAVASAGAR ROAD, TRINCOMALEE. TELE PHONE: 026-20347
வியாழன் விடுமுறை

ரிஷி அஜமாமிச லேகியம்
(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)

இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.
விலை ரூபாய் 250/=,150/=
தங்க பஸ்பம் கலந்தது 1125/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 1025=
ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு, கொழும்பு 11,
போன்: 421398




படிப்பகம்

www.padippakam.com

# பூச்சாண்டி காட்டும் சி.ஐ.ஏ. சதி வேலைக்கான முன்னோட்டமா?

அமெரிக்காவை 'சர்வதேசப் பயங்கரவாத நாடு' என்றே புரட்சிகர இயக்கங்களும், சக்திகளும் விபரித்தன; விபரிக்கின்றன.

தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட எத்தகைய பழிவாங்கலுக்கும் அஞ்சாத நாடு அமெரிக்கா.

அமெரிக்காவின் நலனுக்காக சதி நாசவேலைகளில் ஈடுபடுவதுதான் அந்த நாட்டு புலனாய்வு நிறுவனங்களின் தலையாய கடமை.

**அமெரிக்க மத்திய புலனாய்வுப் பிரிவு சி.ஐ.ஏ. என்று அழைக்கப்படுகிறது. பொய், புரட்டு, சதி, படுகொலைகள் என்று அதன் பணிகள் அத்தனையும் நாசகாரமானவையே.**

இந்திரா காந்தி கொலை உட்பட உலகின் முக்கிய தலைவர்களைத் தீர்த்துக் கட்டியதில் சி.ஐ.ஏ. தான் பிரதான பாத்திரம் வகித்தது. இதன் சின்னம் கழுகு.

அமெரிக்கா கண்வைக்கும் பிராந்தியங்களில் உள்ள நாடுகளது அரசியல் தலைவர்கள், புத்திஜீவிகள், தொண்டர் நிறுவனங்கள், பத்திரிகை முதலாளிகள், பத்திரிகையாளர்கள் போன்றோரில் விலைக்கு வாங்கக்கூடியவர்களை வாங்கி அமெரிக்க சார்புப் பிரசாரங்களை மேற்கொள்வதும், குறிப்பிட்ட நாடுகளில் அமெரிக்கத் தலைமீட்டுக்கு எதிர்ப்பு இல்லாத சூழலைத் தோற்றுவிப்பதும் சி.ஐ.ஏ.யின் பணிகளில் ஒன்று.

**ஒவ்வொரு நாட்டிலும் உள்ள தூதரகங்களில் சி.ஐ.ஏ.யின் ஏஜெண்டுகள் இராஜதந்திரிகள் என்ற போர்வையில் பணியாற்றுவர். சில சமயம் தூதர் கூட சி.ஐ.ஏ.உளவாளியாக இருக்கலாம். அல்லது அரசியல் துறை செயலர் சி.ஐ.ஏ.க்காரராக இருக்கலாம்.**

**புலிகள் உரிமை கோரியதாகக் கூறி மாட்டிக் கொண்டது சி.ஐ.ஏ.**

ஏதாவது விழாவையோ, அல்லது முக்கிய பிரமுகர்களது வருகைகளையோ சாட்டாக வைத்து அமெரிக்கத் தூதரகங்களில் விருந்துபசாரங்கள் நடைபெறுவது வழக்கம்.

**அந்த விருந்துபசாரங்களுக்கு அரசியல் தலைவர்கள், பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் அழைக்கப்படுவர். அதன் மூலம் படிப்படியாக அவர்களுடன் உறவு ஏற்படுத்திக் கொள்ளப்படும்.**

மது, மாது, பணம் மூன்றுக்கும் மயங்காதவர்கள் கிடையாது. அதுதான் சி.ஐ.ஏ.யின் வலை வீசும் நம்பிக்கைக்கு அடிப்படை.

அரசியல் கட்சிகளுக்கு தேர்தல் காலங்களில் நிதி உதவி தாராளமாகக் கிடைக்கும். கட்சிக்குத் தெரியாமல் தலைவர்கள் அதனைச் சுருட்டிக்கொண்டாலும், அமெரிக்க சார்பு புராணம் பாடுவதை வைத்து உண்மையை அறிந்து கொள்ளலாம்.

அமெரிக்காவை எதிர்ப்பதுபோல காட்டிக்கொண்டு, தகுந்த நேரத்தில் அமெரிக்க சி.ஐ.ஏ.யின் சதிச் செயல்களை மூடிமறைக்க உதவுகிறவர்களும் உள்ளனர்.

சி.ஐ.ஏ.யின் சில பிரசாரங்களை உண்மை என்று நம்பவைக்கும் பொறுப்பு இவர்களுடையது.

1983க்கு பின்னர் அமெரிக்க சி.ஐ.ஏ. இலங்கை அரசுக்குச் சார்பாக தலையிட்டும், ஆலோசனை கூறியும் வருகிறது.

இராணுவரீதியாக மட்டுமே ஆலோசனை கூறுவதுடன் நிறுத்திவிடாமல், பிரசாரரீதியாகவும் சி.ஐ.ஏ. தலையிட்டது.


**இந்தியாவில் உள்ள தமிழ்நாட்டையும் உள்ளடக்கியதே தமிழ் ஈழம் என்று வரைபடம் ஒன்றை முன்னர் வெளியிட்டதும் இதே சி.ஐ.ஏ.தான். 'அகண்ட ஈழம்' என்ற பெயரில் அந்த வரைபடம் வெளியாகி பெரும் சர்ச்சையைக் கிளப்பியது.**

இந்திய அரசுக்கும் ஈழப் போராளிகளுக்கும் இடையே விரிசலை ஏற்படுத்த சி.ஐ.ஏ. விரித்த வலைதான் 'அகண்ட ஈழ' வரைபடம்.

அமெரிக்காவில் இருந்த சில தமிழர்களை விலைக்கு வாங்கி, உலகத் தமிழர்களின் அபிலாசை போன்று காண்பித்தே 'அகண்ட ஈழ' வரைபடம் வெளியாகியிருந்தது.

**அகண்ட ஈழ வரைபடத்தை முதலில் வெளியிடுவது, பின்னர் அதனை வரவேற்றும், அல்லது வியந்து பாராட்டியும் எழுதவைப்பது, அப்படியே அது ஒரு உண்மையான விஷயம்தான் என்ற மாயையை ஏற்படுத்துவது என்பதே சி.ஐ.ஏ.யின் திட்டம்.**

ஆனால் அத்திட்டம் பிசுபிசுத்துவிட்டது. இந்திய உளவுப் பிரிவுகள் மணந்து பிடித்து,



சி.ஐ.ஏ யின் குழப்பல் வேலை என்று அறிந்து கொண்டன.

**இப்போது மற்றொரு புரளியைக் கிளப்பி விட்டுள்ளது சி.ஐ.ஏ.. ஆனால் இம்முறை துணிச்சலாக அமெரிக்கப் புலனாய்வுத் துறையின் கண்டுபிடிப்பு என்ற பெயரில் பகிரங்கமாக தன்னை இனம் காட்டிக்கொண்டுதான் புரளி கிளப்பியுள்ளது.**

கம்பியூட்டர் வலைபின்னல்களுக்குள் 'சைபர்' தாக்குதலை புலிகள் நடத்திவருவதாகவும், அதனை அமெரிக்க புலனாய்வுத் துறை கண்டுபிடித்துள்ளதாகவும் வெளியாகியுள்ள செய்திகள்தான் அந்தப் புரளி.

**அடிப்படையிலேயே மிகப் பலவீனமான அத் தகவலை சில செய்தி நிறுவனங்கள் ஊடாக சர்வதேச அளவில் வெளியாகச் செய்துள்ளது சி.ஐ.ஏ.**

சர்வதேச அளவில் செய்தி நிறுவனங்களுக்குள் இருக்கும் தனது ஆட்கள் ஊடாக புரளிகளை மெய்போல பிரசாரப்படுத்தும் கலை சி.ஐ.ஏ.க்கு கைவந்த கலை. அதற்காகவே சி.ஐ.ஏ.யின் இரகசியக் கணக்கில் மாதாந்தம் பெரிய தொகை ஒதுக்கப்பட்டுவருகிறது.

**ஆனால், சி.ஐ.ஏ.யின் குற்றச்சாட்டு மிகப் பலவீனமாக உள்ளது. மேலோட்டமாகவும், உள்நோக்கம் புரியாமலும் பார்த்தால் புலிகள் பெரும் சாதனையைச் செய்துவிட்டனர் என்று பாராட்டத் தோன்றும். ஆனால், உற்று நோக்கினால் அச் செய்தியின் அபாயம் புரியும்; பொய்களும் தெரியும்.**

'சைபர்' தாக்குதல் மூலம் இலங்கைத் தூதரகங்களுக்கான கம்யூட்டர் தகவல் தொடர்புகளை புலிகள் தகர்த்தனராம். கடந்தவருடம் ஆகஸ்ட் மாதம் இது நடைபெற்றதாம். இக் குற்றச்சாட்டு பல கேள்விகளை எழுப்பியுள்ளது.

இலங்கைத் தூதரகங்களுக்கான கம்பியூட்டர் தகவல் தொடர்புகள் சீர்குலைக்கப் பட்டதை இலங்கை அரசு ஏன் வெளியிடவில்லை?

கேள்வி இரண்டு: இலங்கை அரசு சார்பாக தகவல் வெளியிடும் உரிமையை சி.ஐ.ஏ. அதிகாரிகள் எப்போது பெற்றனர்?

கேள்வி மூன்று: புலிகளை தடைசெய்யுமாறு தான் போகும் நாடெங்கும் கோரிக்கை விடுத்துவரும் இலங்கை வெளிநாட்டமைச்சருக்குக் கூட இத் தகவல் இதுவரை தெரியாதா? தெரிந் திருந்தால் புலிகளை சர்வதேசப் பயங்கரவாதிகள் என்று குற்றம் சாட்ட கிடைத்த மிகப் பெரும் சாதகத்தை தூக்கிப் பிடிக்காமல் இருந்திருக்கமாட்டாரே!

கேள்வி இலக்கம் நாலு: இலங்கை அரசு தனது உளவுப்பிரிவில் நம்பிக்கை இழந்து அமெரிக்க உளவுப் பிரிவின் உதவியை நாடியதா? அப்படியான உறவு நிலவுவதை இரு அரசுகளும் இது வரை ஒப்புக்கொண்டதில்லையே?

**மிக முக்கியமான கேள்வி இதுதான்: இன்னொரு நாட்டு உளவுப் பிரிவை நம்பி தன் கம்பியூட்டர் வலைப் பின்னல் இரகசியங்களை இலங்கை அரசு வழங்கி, அவற்றின் மீதான தாக்குதலை ஆராய அனுமதித்ததா?**

அடுத்த குற்றச்சாட்டு 'ஈ மெயில் குண்டுகளுக்கான' பொறுப்பை 'சர்வதேச கரும் புலிகள்' என்ற பெயரில் புலிகள் ஏற்றிருந்தனராம். சி.ஐ.ஏ. அதிகாரிகள் கூறியுள்ளனர்.

**இங்கேதான் சி.ஐ.ஏ. மாட்டிக்கொண்டது. கம்பியூட்டர்வலைப்பின்னல்மீது புலிகள் தாக்குதல் நடத்தியது உண்மை என்றே வைத்துக் கொண்டால்கூட அதற்கு உரிமை கோரவே மாட்டார்கள்.**

சிம்பாப்வேயில் இருந்து மோட்டார் குண்டுகளுடன் வந்த கப்பல் காணாமல் போனதற்கும் தமக்கும் தொடர்பில்லை என்று புலிகள் மறுத்திருந்தனர்.

சர்வதேச கடற்பரப்பில் நடைபெற்ற அவ் விவகாரத்தில் மறுப்பு தெரிவிக்காமல் இருந்தால், 'சர்வதேசக் கடற்கொள்ளையர்' என்றும், 'சர்வதேசப் பயங்கரவாதிகள்' என்றும் முத்திரை குத்தப்படலாம் என்று கருதியே மறுத்திருந்தனர்.

**அதேபோன்ற ஒரு விடயம்தான் கம்பியூட்டர் வலைப்பின்னல்களை தகர்ப்பதுமாகும். சர்வதேசப் பயங்கரவாத நடவடிக்கைகள் என்ற பட்டியலுக்குள் உள்ளடக்கப்படக் கூடிய பிரதான குற்றச் செயலாகவே அது கருதப்படும்.**

இன்று உலகில் கம்பியூட்டர் மூலமான தகவல் தொடர்புத்துறை முக்கிய இடம் பிடித்திருக்கிறது.

**இந்நிலையில் கம்பியூட்டர் தகவல் தொடர்புகளில் புலிகள் குறுக்கிடுவதாகவோ, சதி செய்வதாகவோ தெரிந்தால் உலகெங்கும் புலிகளுக்கு எதிர்ப்புத் தோன்றும்.**

பிரிட்டன், ஃபிரான்ஸ், கனடா போன்ற பல முன்னேறிய நாடுகள் அமெரிக்காவை பின்பற்றி புலிகளைத் தடை செய்யும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அவ்வாறு நடக்கவில்லை. பிரிட்டனும், ஃபிரான்சும் திட்டவட்டமாக தமது மறுப்பை இலங்கை அரசுக்குக் கூறிவிட்டன.

மேற்கண்ட நாடுகள் கம்பியூட்டர் துறையில் மிக முன்னேறிய நாடுகளாகும். கம்பியூட்டர் தகவல் தொடர்புகள் பாதிக்கப்படுமானால் பெரும் நஷ்டம் ஏற்படக்கூடிய நாடுகளாகும்.

மேற்கண்ட நாடுகளில் உள்ள பெரும் தொழிலதிபர்கள், வெகுஜனத் தொடர்பு அமைப்புக்கள் போன்றவை கம்பியூட்டர் தொழில் நுட்பத்தையும், அதன் ஊடான சர்வதேச தொடர்புகளையுமே இன்று பெரிதும் சார்ந்துள்ளனர்.

புலிகள் கம்பியூட்டர் தகவல் பரிமாற்றத்திற்கு அச்சுறுத்தலான இயக்கம் என்று தெரிந்தால், அந்தத் தொழிலதிபர்கள் தங்கள் அரசுகளின் கழுத்தைப் பிடித்து புலிகளை தடை செய்யுமாறு நிர்ப்பந்திக்கத் தொடங்கி விடுவர்.

**எனவே, சர்வதேச ரீதியாக புலிகளைத் தனிமைப்படுத்தவும், இலங்கை அரசை குளிர்விக்கவும் 'சைபர்' தாக்குதல் புரளியை சி.ஐ.ஏ. கிளப்பிவிட்டிருக்கிறது.**

இன்னொரு காரணமும் இருக்கிறது; அமெரிக்க நீதிமன்றத்தில் புலிகள் வழக்குத் தொடுத்துள்ளனர். அமெரிக்காவுக்குள் அதன் சட்ட திட்டங்களுக்குப் புறம்பாக புலிகள் இயக்கம் செயற்பட்டதில்லை. அமெரிக்காவுக்கு எதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. பின்னர் ஏன், எதற்காக புலிகள் இயக்கத்தைத் தடைசெய்தீர்கள்? என்ற கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

**எச்சரிக்கை**

**"இந்தியாவின் கம்பியூட்டர் தகவல் பரிமாற்றத்தை சீர்குலைக்கும் சதித்திட்டத்தின் முன்னோட்டமாகவும் இருக்கக்கூடும்...."**

**புலிகள் இலங்கையில் மட்டுமன்றி சர்வதேசரீதியாகவும் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபடுகிறார்கள் என்று காண்பிப்பதன் மூலம்தான் மேற்கண்ட கேள்வியை வலுவிழக்கச் செய்யலாம்.**

சர்வதேசப் பயங்கரவாதிகள் என்று காண்பிக்க சாட்சியத்துடன் ஆதாரம் தேவை. அதனால்தான் இலங்கை தூதரகங்களின் கம்பியூட்டர் தகவல் தொடர்புகளை சீர்குலைத்ததாகக் குற்றம் சாட்டி, இலங்கை அரசை சாட்சியாக வைத்துக்கொண்டுள்ளது சி.ஐ.ஏ.

**அமெரிக்காவுக்கும் அச்சுறுத்தல் இருக்கிறது என்று காண்பிக்கத்தக்கதாக, அமெரிக்காவின் கம்பியூட்டர் செயற்பாடுகளை தகர்க்கவும் புலிகள் குறிவைத்துள்ளதாக சி.ஐ.ஏ. குற்றம் சாட்டியுள்ளது.**

இதைவிட வேடிக்கை வேறு எதுவும்

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

கிடையாது. குறிவைத்தபடி காத்திருந்து தாக்க இது என்ன சினைப்பர் தாக்குதலா?

**அமெரிக்கக் கம்பியூட்டர் செயற்பாட்டை குழப்ப நினைத்தால் இலங்கைத் தூதரக கம்பியூட்டர் செயற்பாட்டை தாக்க முன்னரே, அதனைத்தான் செய்து முடித்திருப்பார்கள்.**

ஏனென்னில், இலங்கைத் தூதரகங்களுக்கு இடையிலான கம்பியூட்டர் தகவல் பரிமாற்றம் என்பது இலங்கை அரசுக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றல்ல. அந்தளவு பெரிய இரகசியத் தகவல்கள் பரிமாறும் அளவுக்கு இலங்கை பெரிய வல்லரசு நாடும் அல்ல.

கம்பியூட்டர் மயப்படுத்தல் என்பதில் இலங்கை மிகவும் பின்தங்கியே உள்ளது. அரசுத்துறை, பாதுகாப்புத்துறை போன்றவையும் கம்பியூட்டர் மயப்படுத்தலுக்கு முழுதாக உட்படவில்லை.

மிகப் பழைய ஃபக்ஸ் முறைதான் அரசுக்கும் தூதரகங்களுக்கும் இடையேயும்கூட கடிதத் தகவல் பரிமாற்ற முறைகளாக உள்ளன.

**எனவே, இலங்கைத் தூதரகங்களுக்கு இடையேயான கம்பியூட்டர் தகவல் பரிமாற்றத்தில் புலிகள் குறுக்கிடும் அவசியமோ, அவ்வாறு குறுக்கிட்டால் அரசுக்குப் பாரிய பிரச்சனையோ ஏற்படப் போவதில்லை.**

உண்மையில் அவ்வாறு செய்வதாக இருந்தால், தூங்கிவழியும் இலங்கைத் தூதரகங்களுக்கு இடையிலான தகவல் தொடர்பு பரிமாற்றங்களில் குறுக்கிடுவதைவிட இலங்கைக்குள் கம்பியூட்டர் தகவல் பரிமாற்றங்களை சார்ந்துள்ள வங்கிகள், மற்றும் பொருளாதாரம் சார்ந்த நிறுவனங்களின் கம்பியூட்டர் தகவல் பரிமாற்றங்களையே தகர்த்திருப்பர். பாரிய சீர்குலைவு ஏற்பட்டிருக்கும்.

அமெரிக்காவின் கம்பியூட்டர் செயற்பாட்டை சீர்குலைப்பதால் புலிகளுக்கு எவ்வித இலாபமும் கிடையாது.

**அமெரிக்காவை எதிர்த்து செயற்படுவது என்பது புலிகளின் நோக்கம் என்றால், அமெரிக்கத் தடையை எதிர்த்து வழக்குத் தொடுத்திருக்கமாட்டார்கள். வழக்கும் தொடுத்தபடி வழக்கை முறியடிக்கக் கூடியதும், அமெரிக்க மக்களிடமும் எதிர்ப்பை கிளறக்கூடியதுமான தாக்குதல் நடத்தும் அவசியம் புலிகளுக்கு ஏன் வரப்போகிறது?!**

உலகளாவிய ரீதியில் அமெரிக்காவுக்கு உள்ள அக்கறையை அச்சுறுத்த கெரில்லா இயக்கங்கள் அவ்வாறு செய்யும் என்று சி.ஐ.ஏ. அதிகாரிகள் விளக்கம் கூறியுள்ளனர்.

அந்த விளக்கம் ஒன்றே போதும்- புரளியின் உள்நோக்கத்தை அறிந்துகொள்ளலாம்.

**'உலகளாவிய ரீதியில் அமெரிக்காவின் அக்கறை' என்ற கூற்று எத்தனை மோசடியானதோ, அதே போன்றதே 'சைபர் தாக்குதல்' கண்டுபிடிப்பு பற்றிய சி.ஐ.ஏ.யின் புரளியுமாகும்.**

**இன்னொரு பலத்த சந்தேகமும் எழுந்திருக்கிறது. 'புலிகளின் சைபர் தாக்குதல்' என்ற பெயரில் இந்தியா போன்ற நாடுகளின் கம்பியூட்டர் தகவல் தொடர்புகளைச் சீர்குலைக்கவும், தகர்க்கவும் சி.ஐ.ஏ. சதித்திட்டம் தீட்டியுள்ளதா?**

அதற்கு முன்னோட்டமாகவே இந்தத் தகவல்-குறிப்பிட்ட செய்தி நிறுவனங்கள் ஊடாக- பரப்பப்பட்டு வருகிறதா, என்பதே அந்தச் சந்தேகமாகும்!

தென்னாசியப் பிராந்தியத்தில் அமெரிக்காவுக்கு உள்ள அக்கறையும், இப் பிராந்தியத்தில் இலங்கை அரசை தனது உற்ற நண்பனாக்கிக் கொள்ள அது காட்டும் தீவிரத்தையுமே 'சைபர் தாக்குதல் பற்றி சி.ஐ.ஏ.யின் பிரசாரம் முக்கியமாக வெளிப்படுத்துகிறது.

**எனவே, புலிகளின் பெயரால் தனது வழக்கமான பயங்கரவாத சதி நடவடிக்கைகளை இப்பிராந்தியத்தில் சி.ஐ.ஏ. கட்டவிழ்த்துவிடும் அபாயமும் உள்ளது.** ■

நாரதர்

## அதிரடி அய்யாத்துரை



***யாழ்ப்பாணத்தில்*** சீருடை அதிகாரிகளுக்கும் தமிழ்க் கட்சிப் பிரமுகர்களுக்கும் இடையே பலத்த போட்டி. வேலை வாய்ப்புக்களை வாங்கிக் கொடுப்பதில் கில்லாடிகள் யார் என்பதும், சனத்தின் சப்போர்ட் யாருக்கு என்பதிலும்தான் போட்டி. தற் போதைய நிலவரப்படி சீருடையினரே முன்னணியில் நிற்கின்றனர். கழகம் நடத்திய இசை நிகழ்ச்சிக்கு 5 ஆயிரம் சனம். சீருடையினர் நடத்திய இசை நிகழ்ச்சிக்கு பத்தாயிரத்திற்கு மேற்பட்ட சனம். ஐயாயிரம் அதிகப்படி சனத்தால் முன்னணியில் நிற்கினம் சீருடைத்தரப்பார்.

***தமிழ்க்கட்சி*** ஒன்று வழங்கிய வேலை வாய்ப்பை யாழ்ப்பாண நிலக் கட்சியினர் ஆட்களைத் தூண்டிவிட்டு குழப்பிப் போட்டினம். பிரச்சனை நடந்த இடத்திற்கு சீருடை அதிகாரி சென்றாராம். வேலை கிடைத்தவையையும், வேலை கிடைக்கவில்லை என்று துடித்தவையையும் ஒன்றாக அழைத்து, "உங்கள் அனைவருக்கும் வேலை பெற்றுத் தருவது என் பொறுப்பு, அமைதியாகச் செல்லுங்கள்!" என்றாராம். சுட்டுவிரல் அசைவுக்கு சனம் கட்டுப்பட்டதாம். சுட்டுவிடுவார் என்று பயமோ?!

***ரெண்டு எழுத்துத்*** தலைவரின் பெயரை நேரடியாகக் கூறாமல், 'வேலுப்பிள்ளையாரின் மகன்' என்றுதான் யாழில் அழைக்கினமாம். இன்று யாழில் நடக்கும் சீரழிவுகளைப் பார்த்து சனம் வெறுத்துப் போச்சு. துரையப்பா அரங்க இசை நிகழ்ச்சிக்கு பின்னர், சதைப் பசி ஆறிய சம்பவங்கள் அரங்கிலேயே நடந்தனவாம். வெறுத்துப்போன சனம் பரவலாகக் கேட்கும் ஒரே கேள்வி: "வேலுப்பிள்ளையரின் மகன் இருந்தால் இப்படியெல்லாம் நடக்குமோ?"

***சிறுவர் விவகாரம்*** பற்றி ஆராய வந்தவர், மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் பற்றிப் பேசுமளவுக்கு பிரச்சனையின் தீவிரத்தை உணர்ந்திருக்கிறார். வன்னியில் சனத்தின் நிலை கண்டு கண்கள் கலங்கி நின்றாராம். ரெண்டு எழுத்தாரைப் பற்றி தன்னிடம் சொல்லப்பட்ட கதைகளுக்கு முரணான காட்சிகளையே கண்ணாரக் கண்டதாகவும் கூறினாராம். எங்கிருந்தோ வந்தவருக்கு உண்மை தெரியுது; உள்ளம் பதறுது. இங்கிருக்கும் 'டமிலர்' சிலருக்கு எதுவும் புரியவில்லையே! என்ன செய்வது? அவை பிரபலம் வளர்க்கினம்; பந்தா வளர்க்கினம்; அடுத்த தேர்தலில் வெற்றி பெறும் ஆசை வளர்க்கினம்: தமிழ் உணர்வை வளர்க்கலையே....!

***அயலவர்*** 'ஜா' கூறியதை வெளிவிவகாரங்களுக்குப் பொறுப்பானவர் ஆட்சேபிக்கிறார். நீதிக்குப் பொறுப்பானவர் 'தப்பில்லை' என்கிறார். அதிகாரத்தரப்பாருக்கு எத்தனை முகம்? எத்தனை நாக்கு? ஒருவர் அடிப்பார். இன்னொருவர் நோகாமல் தடவ, பொதுஜனம் ஒன்றுமே புரியாமல் குழம்பவேண்டியதுதான். "வடக்கு-கிழக்கு இணைப்புக்கு எதிர்ப்பில்லை, ஆனாலும் அப்படியே இணைக்க ஆதரவு காட்ட மாட்டோம்" என்றும் நீதிக்குப் பொறுப்பானவர் கூறியுள்ளார். இது 'ஒப்பரேஷன் சரியாத்தான் நடக்கும் ஆள் மட்டும் தப்பமாட்டார்' என்று சொல்லுறமாதிரியல்லோ இருக்குது? அவரது கூற்று காதில் விழுந்தமாதிரி தமிழ்க் கட்சிகள் காட்டவில்லைப் பார்த்தியளோ? கோவணம் போவதும் தெரியாதளவுக்கு பிஸியிலை இருக்கினம்போல கிடக்கு.

***தினமும் ஐந்துபேர்*** வீதம் ரெண்டு எழுத்தார் வீழ்த்தப்படுவதாக ஸ்கோர் சொல்லுகினம். தரையில் விழுந்து படுத்து நிலை எடுப்பதையும், ஒரேயடியாக விழுந்ததாக கணக்கில் சேர்க்கினமோ தெரியேல்லை.

***அதிரடி மன்னரின்*** திருமண வீட்டில் அம்மையாரும், எதிரணித் தலைவரும் எதிரும் புதிருமாகச் சந்தித்தனர். தீப்பொறிகள் பறக்கவில்லை. இடி முழக்கம் கேட்கவில்லை. புன்னகை மின்னல்கள் பளிச்சிட்டன. வாய்விட்டுச் சிரித்தனர். எதிரணித் தலைவர், 'தேசத்துரோகி' என்று அதற்கு முன்தினம்தான் வசைபாடப்பட்டது. தேசத்துரோகியுடனும் சேர்ந்து சிரிக்கலாமோ? எக்கச்சக்கமாய்த்தான் குழப்புகினம்.

***அயலகத் தூதரின்*** யாழ் விஜயம் காரணகாரியத்தோடுதானாம். எங்கோ இருக்கும் நாடுகளின் தூதர்கள் எல்லாம் யாழ் சென்று வந்துபோட்டினம். தாமும் செல்லாவிட்டால் பிடியை விட்டது போலாகிவிடும் என்றுதான் திக் விஜயம் செய்திருக்கிறார். மற்றப்படி வேறெந்த முக்கியத்துவமும் கிடையாதாம்.

**இவ்வாரப் பொன்மொழி:** உபயம்: வலம்புரிஜான்.

**"ஈட்டி பிடித்தவனின்**
**கையில் வடு**
**மறைந்துவிடும்.**
**குத்தப்பட்ட**
**இதயத்தில்தான்**
**இரத்தம்**
**கொட்டிக்கொண்டிருக்கும்!"** ■


படிப்பகம்

www.padippakam.com



# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

ஏப்ரல் முதலாம் திகதி யாழ்ப் பாணத்தில் புலிகளின் பத்திரிகையாளர் மாநாடு.

ஏப்ரல் முதலாம் திகதி முட்டாள்கள் தினம். அதனால் பத்திரிகையாளர்களுக்கு சந்தேகம் ஒருபுறம், பிரபாகரன் வருவாரா? என்று எதிர்பார்ப்பு மறுபுறம்.

**10.30 மணிக்கு மண்டபத்தில் பரபரப்பு. ஆயுதம் ஏந்திய பாதுகாவலர்களுடன் பிரபாகரன், பத்திரிகையாளர்களைப் பார்த்து சிரித்தபடியே வருகிறார்.**

இவர் பிரபாகரன்தானா? நாங்கள் காண்பது பிரபாகரனேதானா? பத்திரிகையாளர்கள் கண்களைக் கசக்கிக் கொண்டு பார்க்கிறார்கள்.

**இதே பத்திரிகையாளர்களுக்குத்தான் பிரபாகரன் இறந்துவிட்டதாகவும், அவரது உடல் வடமராட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்ததாகவும் வரதராஜப் பெருமாள் கூறியிருந்தார்.**

பிரபாகரனின் உடலின் நெற்றியில் அவரது துணைவியார் குங்குமம் இட்டார் என்றும்கூட பெருமாள் அண்டப்புளுகுகளை அவிழ்த்து விட்டிருந்தார் அல்லவா.

'இது ஏப்ரல் பூல் அல்லவே?' என்றும் சில பத்திரிகையாளர்கள் தங்களுக்குள் மெதுவாகப் பேசிக் கொண்டனர்.

இன்னொரு ஆச்சரியம் என்ன தெரியுமா? பிரபாகரனை வரவேற்று அழைத்து வந்தவர் மாத்தையா.

இந்தியாவின் இராணுவத் தலையீடும், அதன் விளைவாக ஏற்பட்ட பேரழிவுகளும் தமிழீழ மக்களுக்கு ஒரு நல்ல பாடத்தைப் புகட்டியிருக்கிறது.

**எந்த அந்நிய சக்தியிலும் தங்கியிராது, எமது உரிமைகளை நாமே போராடி வென்றெடுக்க வேண்டும் என்பதுதான் அந்தப்பாடம்.**

நாம் இந்திய அரசுக்கோ, இந்திய மக்களுக்கோ விரோதிகளல்ல, முந்திய இந்திய அரசின் தவறான கொள்கையையும், இராணுவத் தலையீட்டையுமே நாம் எதிர்த்தோம்.

**எமது பிரச்சனையில இந்திய அரசு இராணுவரீதியாகவோ, அரசியல் ரீதியாகவோ தலையிடுவதை நாம் விரும்பவில்லை. எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டம், இந்தியாவின் அரசியல் பூகோள நலன்களுக்கோ, அல்லது உள்நாட்டு ஸ்திர நிலைக்கோ பங்கம் விளைவிக்காது என்பதை டில்லி ஆட்சிபீடம் உணர வேண்டும்.**

இந்தப் புரிந்துணர்வின் அடிப்படையில் புதிய இந்திய அரசு எமது இயக்கத்துடன்

இந்தியப் படை இருந்தபோதும், அதனுடன் சேர்ந்த இயக்கங்கள் இருந்தபோதும் மாலை ஆறுமணிக்குப் பின்னர் தெருவில் நடமாடவே மக்கள் அஞ்சினர்.

பெண்கள் வீடுகளுக்குள் அடைந்து கிடந்தனர். இரவில் வீட்டுக் கதவு தட்டப் பட்டால் பயத்தில் தவித்தனர்.

**இந்தியச் சிப்பாய்களின் கேலிகளும், காமப் பார்வைகளும் தெருவில் பகலில் நடமாடக்கூட கூச்சத்தை ஏற்படுத்தியது. போதாக்குறைக்கு இயக்கங்கள் என தம்மை அழைத்துக் கோள்வோர் பலரும் 'பெண் பொறுக்கிகள்' என்று அழைக்கப்படத்தக்க பார்வைகளுடனும், தோற்றங்களுடனுமே வீதிகளில் அலைந்தனர்.**

திருவிழாக்களுக்கு சென்றால் பெண்கள் நிம்மதியாக நடமாடமுடியாது. சேஷ்டைகளும், கேலிகளும், சமூகவிரோதிகளின் தொல்லைகளுமாக அவதிப்படவேண்டும்.

இந்திய இராணுவத்தினதும், அதன் கூட்டாளிகளாக செயற்பட்ட சமூகப் பொறுப்பற்ற இயக்கங்களதும் பிடியில் இருந்தபோதுதான் விடுதலைப் புலிகளின் அருமை பெருமைகளை வடக்கு-கிழக்கு மக்கள் உணர்ந்து கொண்டனர்.

அதிலும், புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் இருந்த யாழ் குடாநாட்டு மக்கள், புலிகளது சில கட்டுப்பாடுகள் தமது தனிப்பட்ட சுதந்திரத்தில் தலையிடுவதாக அதிருப்தியோடு இருந்தனர்.

**"இந்தியப்படைகளின் பிடியில் இருந்தபோது அந்த அதிருப்திகளும் மறைந்து,**

முன்னறிவிப்புடன் சிறு கருத்தரங்கு நடத்தினால்கூட குறைந்தது ஐநூறுபேராவது திரள்வார்கள். தமிழ்க் கட்சிகள்மீது மக்கள் கொண்டுள்ள வெறுப்பையும், நம்பிக்கையீனங்களையும் இவ்வருட மேதின கூட்ட தோல்விகள் எடுத்துக்காட்டியுள்ளன.

புலிகளின் மேதின கூட்டத்தில் மாத்தையா, அன்ரன் பாலசிங்கம், யோகி உட்பட பலர் உரையாற்றினர்.

மட்டக்களப்பு நகரிலும் புலிகளின் மேதினக் கூட்டம் பெரியளவில் நடைபெற்றது. மகர தோரணங்களாலும், புலிக்கொடிகளாலும் மட்டக்களப்பு நகரம் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

நகரின் பல பகுதிகளில் இருந்து புறப்பட்ட பேரணிகள் மாலை 4 மணியளவில் கூட்டம் நடைபெற்ற இடத்தை சென்றடைந்தன.

காந்தி சிலையின் முன்பாக நடைபெற்ற

ஹெலிகொப்டர் ஒன்று மோட்டார் ஷெல்களை வீசியவண்ணம் நாவற்குழி முகாமுக்குள் தரையிறங்கமுற்பட்டது.

அப்பகுதியில் இருந்த புலிகளது காவல் அரண்கள்மீதும் தாக்குதல்கள் நடந்தன.

**அவ்வாறு இருந்தும் சோதியா தலைமையிலான பெண்கள் அணியின் தாக்குதலால் முகாமுக்குள் தரையிறங்கும் முயற்சியைக் கைவிட்டு ஹெலி திரும்பிச் சென்றது.**

அதே மார்ச் மாதம் 27ம் திகதி நாவற் குழி இராணுவ முகாமிலிருந்து மீண்டும் ஒரு பாரிய முன்னேற்ற முயற்சி நடந்தது.

சீ பிளேன் தாழப் பறந்து புலிகள் எங்கெங்கு நிலைகொண்டிருக்கிறார்கள் என்று உளவறிந்து பொம்பருக்கு தகவல் கொடுக்கும்.

பொம்பர் குறிப்பிட்ட பகுதிகளை நோக்கி குண்டுகளை வீசும். சீ பிளேனை 'கோள் மூட்டி' என்று புலிகள் அழைப்பார்கள். (தற்போது ஆளில்லாத உளவு விமானத்தை ஆட்காட்டி என்று அழைக்கிறன்றனர்)

## 'மாண்டவர்' மீண்ட அதிசயம்!

எந்த மாத்தையா குழுவினரால் பிரபாகரன் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று வரதராஜப்பெருமாள் கூறினாரோ அதே மாத்தையா.

புலிகளின் யாழ் மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் பானு, யாழ் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் டொமினிக் ஆகியோரும் பிரபாகரனை வரவேற்று அழைத்து வந்தனர்.

### பிரபா பேச்சு

**காண்பதெல்லாம் கனவா, நனவா என்று பத்திரிகையாளர்கள் உறைந்து போயிருக்க, பிரபாகரன் அவர்களது சந்தேகத்தை போக்கும் விதமாக, "இன்று ஏப்ரல் முதலாம் திகதி என்பதால், உங்கள் முன்னால் இருப்பது பிரபாகரனா இல்லையா? என்ற சந்தேகம் உங்களுக்கு வரலாம்.**

**அப்படிச் சந்தேகம் இருந்தால் என்னைத் தொட்டுப் பார்த்துக் கொள்ளலாம்," என்று சிரித்தார். பத்திரிகையாளர்களும் இறுக்கம் தளர்ந்து சிரித்தனர்.**

"வதந்திகள் பயங்கரமானவை, எனக்கே நான் உயிரோடுதான் இருக்கிறேனா? என்று சந்தேகம் வந்துவிட்டது. என்னை நானே கிள்ளிப்பார்த்துக் கொண்டேன்.

என் மகள் துவாரகா இறந்துவிட்டதாக பரவிய வதந்தி எனக்கே சந்தேகத்தை ஏற்படுத்தியது.

என்னைப் பற்றிய வதந்திகளுக்கு முடிவு கட்டவே, இன்று உங்கள் முன் தோன்றியுள்ளேன். உண்மைகளை வெளிப்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களையே சேரும்" என்று கூறினார் பிரபாகரன்.

**அதன்பின்னர் அறிக்கை ஒன்றை வாசித்தார் பிரபாகரன். இலங்கை அரசுடன் நடத்திய தந்திரோபாயமான பேச்சுக்குப் பாதகம் இல்லாதவகையிலும், அதே சமயம் அரசுமீது அல்லாமல் புலிகள்மீதே தமிழ் மக்கள் நம்பிக்கை கொள்ளத்தக்க வகையிலும் அறிக்கை தயார் செய்யப்பட்டிருந்தது.**

அந்த அறிக்கையின் முக்கிய பகுதிகள் பின்வருமாறு:

'விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டுமென சிங்கள இனவாதப் பத்திரிகைகள் குரல் எழுப்பி வருகின்றனர்.

**ஆயுதங்களை கையளிக்கவேண்டும் என்று குரல் எழுப்புதற்குப் பதிலாக, எதற்காக எமது இயக்கம் ஆயுதங்களை ஏந்தியது, எதற்காக நாம் பதினைந்து ஆண்டுகளுக்கு ஆயுதப் போராட்டத்தை நடத்தினோம், இதற்கான காரணிகள் என்ன என்பதை சிங்கள மக்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.**

ஆயுதப் போராட்டம் தோன்றி வளர்ந்த யதார்த்த நிலைகளை ஆராய்ந்து பார்த்து, அதன் காரணிகளை நீக்கிவிட உருப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டால், ஆயுதப் பிரச்சனை தானாகத் தீர்ந்துவிடும்.

### இந்தியத் தலையீடு

இந்திய இராணுவத் தலையீட்டை நாம் வெற்றிகரமாக முறியடித்துள்ளோம். இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது தாயக மண்ணிலிருந்து முற்றாக வெளியேறிவிட்டது.

**இந்திய வல்லாதிக்கத் தலையீட்டிற்கு முடிவு காணப்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்திற்கு கிட்டிய ஒரு மகத்தான வெற்றியாகும்.**



பத்திரிகையாளர் மாநாட்டுக்கு பிரபா வரும் காட்சி

நல்லுறவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

எமது மக்களின் நியாயபூர்வமான போராட்டத்திற்கு இந்திய அரசும், இந்திய மக்களும் ஆதரவையும், அங்கீகாரத்தையும் வழங்கவேண்டும் என்பதே எமது விருப்பம்.

### பேசுவார்த்தை

கிட்டத்தட்ட ஒரு வருட காலமாக சிறீலங்கா அரசுடன் நாம் சமாதானப் பேச்சுக்களை நடத்தி வருகிறோம்.

இந்தச் சமாதானப் பேச்சுக்களின் பயனாக இன்று தமிழீழத்தில் அமைதியும் சகஜ நிலையும் தோன்றியிருக்கிறது.

இந்த அமைதிநிலை நீடித்து எமது மக்கள் சுதந்திரமாக, கௌரவமா, பாதுகாப்பாக வாழ வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

இது சிங்கள அரசியற் தலைவர்களதும், சிங்கள மக்களதும் பார்வையையும், அணுகு முறையையும் பொறுத்திருக்கிறது.

வரலாற்றுரீதியாக எமது மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய அநீதிகளையும், தவறுகளையும் நன்குணர்ந்து மனித நீதி, மனித தர்மம் என்பவற்றின் அடிப்படையில் தீர்வு காண முயற்சிக்க வேண்டும்.

**எமது மக்களுக்கு நீதி வழங்க மறுத்து, மீண்டும் எம்மீது அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்படுமானால், நாம் எமது மக்களின்**

என்னதான் இருந்தாலும் அவர்கள் எங்கள் பிள்ளைகள். அவர்கள் இருந்தால் எங்கள் பெண் பிள்ளைகள் பயமே இல்லாமல் மானத்தோடு வாழ முடிந்தது." என்று பரவலாகவே பேச ஆரம்பித்தனர்.

இந்தியப் படையோடு நட்பாக இருந்த இயக்கங்கள் என்றாலும், தமிழர் என்ற உணர்வோடு தங்களுக்கு உதவக் கூடும். அத்துமீறல்களை தடுக்க முயலக்கூடும் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

பாலியல் வல்லுறவுகள், மற்றும் அன்றாட அவஸ்தைகளை இயக்கங்கள் வேடிக்கை பார்த்தன.

'பெண்கள்தான் இதற்கெல்லாம் காரணம், மினுக்கிக் கொண்டு திரிந்தால் கையை போடுவாங்கள் தானே' என்று நாக்கூசாமல், தங்கள் கோழைத்தனத்திற்கு பெண்கள்மீதே பழி போட்ட இயக்கப் பிரமுகர்களும் இருந்தனர்.

### மேதினம்

புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் மறுபடி

மேதினத்தில் புலிகள் சார்பாக கருணா, கரிகாலன், தினேஷ் உட்பட பலர் உரையாற்றினார்கள்.

யாழ் முற்றவெளிக் கூட்டத்தில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் முக்கியமான கேள்வி ஒன்றை எழுப்பியிருந்தார்.

**"சிங்கள மக்கள் முப்படைகளையும் கொண்ட எழுபதினாயிரம் ஆயுதம் தாங்கிய ஓர் இராணுவ இயந்திரத்தை வைத்துள்ளார்கள். ஆகவே, தமிழ் மக்களுக்கு என்று ஒரு பாதுகாப்புப் படையை நாம் ஏன் வைத்திருக்கக் கூடாது? இதன் காரணமாகவே எக் கட்டத்திலும் நாம் ஆயுதங்களைக் கைவிடோம்" என்று கூறுகிறோம் என்றும் பாலசிங்கம் தெரிவித்தார்.**

### சோதியா மரணம்

விடுதலைப் புலிகளின் மகளிர் படையணிப் பொறுப்பாளர்

**"வடக்கு கிழக்கு மாகாணம் இணைந்திருப்பதா இல்லையா? என்று கருத்துக் கணிப்பு நடத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை. நாங்கள் அதை ஒத்துக்கொள்ளப் போவதும் இல்லை. எங்கள் தாயக மண்ணை நாங்கள் பிரித்துப் பார்த்து எப்பொழுதும் எண்ணுவதும் இல்லை!"**

***—ஏப்ரல் 1.1990இல் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பிரபாகரன்***



மேஜர் சோதியா 11.01.90ல் மரணமானார்.

இவரது சொந்தப் பெயர் மரியா மைக்கல் வசந்தி. கரவெட்டி மேற்கு நெல்லியடியைச் சேர்ந்தவர்.

மன்னாரில் விக்டர் தலைமையில் நடைபெற்ற தாக்குதல், மாந்தையில் புலிகளின் முகாமை சுற்றிவளைத்த படையின

சீ பிளேன் தகவல் கொடுத்தும்கூட பொம்பர் இலக்குத் தவறியே குண்டுகளைப் போட்டது. கைதடி வயோதிபர் இல்லமும், அநாதைச் சிறுவர் இல்லமும் பலத்த சேத முற்றன.

**சோதியா தலைமையிலான அணியினரின் தாக்குதலால் சீ பிளேன் சேதமடைந்தது. நாவற்குழி முகாமுக்கு அருகே உடனடியாக தரையிறங்கியது. மூன்று தினங்கள் திருத்த வேலைகள் நடைபெற்ற பின்னரே எடுத்துச் செல்லப் பட்டது.**

இம் மோதல்களில் சோதியா தலைமையிலான அணிக்கும், படையினருக்கும் இடையே 25-30 யார் இடைவெளி தூரம் தான் இருந்தது.

1987 ஜூன் மாதம் யாழ் தொலைத் தொடர்பு நிலையம்மீதான தாக்குதலிலும் சோதியாவும், பெண்கள் அணியும் பங்கு கொண்டன.

'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கை பதிலடியாக இத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது.

### இந்தியப் படையுடன்

யாழ்ப்பாண குடாநாட்டில் இந்தியப் படையினருடனான மோதலில் பெண்கள் அணி காட்டிய தீவிரம் இந்தியப் படையினரையே கிலி கொள்ள வைத்தது.

யாழ்ப்பாணத்தில் கல்லுண்டாய்



சோதியா

## பெண்கள் அணியின் தாக்குதல்

**சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் நிலைநாட்ட ஆயுதம் ஏந்திப் போராடுவதற்கு சிறிதேனும் தயங்கமாட்டோம்.**

எமது மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்வது எமது இயக்கம்தான். எமது இயக்கத்தை பலம் பொருந்திய தேசியசக்தியாக கட்டி எழுப்புவதற்கு தமிழ், முஸ்லிம் மக்கள் எமது இயக்கத்தின் பின்னால் அணிதிரள வேண்டும்"

பிரபாவின் அறிக்கையின் சில பகுதிகள் மட்டுமே மேலே இடம்பெற்றுள்ளன. அறிக்கையைத் தொடர்ந்து பத்திரிகையாளர்களது கேள்விகளுக்கு பதிலளித்தார்.

### புலிகளின் நிர்வாகம்

பிரபாகரனின் பத்திரிகையாளர் மாநாட்டை அடுத்து, மக்களிடையே இருந்த சந்தேகங்களும் முற்றாக விலகின.

வடக்கு-கிழக்கு புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருந்தது.

யாழ் குடாநாட்டில் கோயில் திருவிழாக்கள் போன்றவற்றிலும் புலிகள் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.

யாழ் குடாநாடு வந்ததும் பெரும்பாலான மக்களுக்கு மேற்கண்ட நரகத்தில் இருந்து மீட்சி கிடைத்தது.

மே 1, 1990ல் யாழ் நகரில் புலிகள் நடத்திய மேதினத்தில் மக்கள் தன்னிச்சையாக கூடினர்.

**யாழ் முற்றவெளி மைதானம் நிரம்பி வழிந்தது. கரவெட்டி, காங்கேசன்துறை, நெல்லியடி, கைதடி, தெல்லிப்பழை போன்ற பல பகுதிகளில் இருந்து பேரணிகள் புறப்பட்டு வந்து யாழ் முற்றவெளி மைதானத்தை அடைந்தன.**

இத் தொடரை எழுதும்போது வடக்கு-கிழக்கில் இம்முறை (1998)தமிழ்க் கட்சிகள் நடத்திய மேதினம் நினைவுக்கு வருகிறது.

இசை நிகழ்ச்சியுடன் நடத்தப்பட்ட புளொட் மேதினம் தவிர்ந்த ஏனைய கட்சிகளது மேதினத்தில் நூற்றுக்கணக்கானோரே சமூகமளித்தனர். யாழில் சில பகுதிகளில் நடைபெற்ற கூட்டங்களில் 50 பேர்கூட கலந்து கொள்ளவில்லை என்றால் நம்புவீர்களா? உண்மை அதுதான்.

முன்னர் ஒரு காலத்தில் குறுகிய

ருடனான மோதல், அடம்பன், நாவற்குளம் மோதல் ஆகியவற்றில் சோதியா தலைமையில் பெண்கள் அணி பங்கு பெற்றியது.

**இலங்கையின் போர் வரலாற்றில் பெண்கள் அணி சண்டையில் நேரடியாக ஈடுபட்ட ஆரம்பகால களங்களாக அவை அமைந்தன.**

தள்ளாடி இராணுவ முகாமில் இருந்து புறப்பட்ட படையினருடன் பெண் புலிகள் அணி கடுமையாகப் போரிட்டது. இம் மோதலில் பெண்கள் அணிக்கு சோதியாவே தலைமை தாங்கினார்.

1987ம் ஆண்டு மார்ச் மாதம் முதல் சோதியா தலைமையிலான பெண் போராளிகள் யாழ்ப்பாண குடாநாட்டிற்குள் இருந்த நாவற்குழி முகாம், யாழ்கோட்டை இராணுவ முகாம் ஆகியவற்றில் இருந்து இராணுவத்தினர் வெறியேறாமல் தடுப்பதில் ஈடுபட்டனர்.

1987 மார்ச் மாதம் நாவற்குழிப் பகுதியில் புலிகளுக்கும், படையினருக்கும் இடையே நான்கு மணிநேர மோதல் இடம்பெற்றது.

வெளியில் 1987 ஒக்டோபர் மாதம் இந்தியப் படையினருக்கும், புலிகளுக்கும் இடையே ஒருநாள் முழுக்க கடும் சண்டை நடந்தது.

கவச வாகனங்கள், செயின் புளக்குகள் சகிதம், மேஜர் சங்கர சர்மா தலைமையில் இந்தியப் படையினர் சண்டையில் ஈடுபட்டனர்.

**புலிகளின் ஆர்.பி.ஜி. தாக்குதலிலும், கண்ணிவெடியிலும் சிக்கி ஒரு கவசவாகனமும், ட்றக்கும் தடம்புரண்டு அராலிப் பாலத்திற்குள் விழுந்தன.**

இரண்டு இந்திய சிப்பாய்கள் இச் சண்டையில் புலிகளால் சிறைப்பிடிக்கப் பட்டனர். இச் சண்டையில் மகளிர் அணியும் சோதியா தலைமையில் பெரும் பங்கு வகித்தது.

சோதியா தலைமையில் புலிகளின் மகளிர் படையணி மட்டுமே பங்கு கொண்ட துணிச்சலான தாக்குதல்களில் சில வற்றை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# ஒட்டுணுவின் வன்னி விஜயம்

அலசுவது- இராஜதந்திரி

ஐக்கிய நாடுகள் சபை செயலாளர் நாயகத்தின் விசேட தூதர் ஒலரா ஒட்டுணுவின் இலங்கை விஜயம் பற்றியே கடந்த வாரம் முழுவதும் செய்திகள் வெளியாகியிருந்தன.

யுத்தத்தில் சிறுவர்களை ஈடுபடுத்துதல் தொடர்பாக ஆராய்வதற்காகவே அவர் இங்கு விஜயம் செய்திருந்தார்.

**இன்று உலகில் யுத்தம் நடைபெறும் நாடுகளில் முதன்மையான இடத்தை இலங்கை பெற்றுள்ளது என்பதாலேயே அவர் இங்கு விஜயம் செய்ய முன்வந்தார்.**

விடுதலைப் புலிகளை இலங்கை அரசு தடை செய்திருப்பதாக அறிவித்தமையும் ஒலரா ஒட்டுணுவின் விஜயத்தின்போது கேலிக்குரியதாகவும் நடைமுறைச் சாத்தியமற்றதாகவும் மாறியிருந்தது.

**விடுதலைப் புலிகளின் பிரதான தளப்பிரதேசத்திற்கு ஒலரா ஒட்டுணுவை இலங்கை அரசே அனுப்பிவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது.**

இன்னொரு நாட்டுக்கு அனுப்பி வைப்பதுபோன்றே, வன்னிக்கு அவரை அனுப்பி வைத்திருந்தனர்.

**அதன்மூலம், விடுதலைப் புலிகள் ஒடி ஒளிந்து திரிகின்ற பயங்கரவாதக் குழு அல்ல, இத் தீவில் தமக்கென தனியான நிர்வாகம், தனியான படைபலம், தனியான பிரதேசம் ஆகியவற்றை கொண்டுள்ள அரசியல், இராணுவ அமைப்பாக உள்ளனர் என்பதை அரசே ஒப்புக்கொள்வதாகிவிட்டது.**

பயங்கரவாத அமைப்புக்கள் எதுவும் ஒரு நாட்டின் இராணுவ பலத்திற்கு சமபலம் கொண்ட அமைப்புக்களாக வளர்ச்சி பெறமுடியாது. வெகுஜன அடித்தளம் இல்லாத குழுக்களே பயங்கரவாதக் குழுக்களாக ஒடி ஒளிந்து திரிவதுண்டு.

நாசவேலைகள், சதி முயற்சிகள், தனிநபர்களை மட்டுமே அழிக்கின்ற செயல்கள் போன்ற, சிறு குழுக்களாக பங்குகொள்ளக் கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களையே பயங்கரவாதிகள் என்று அழைக்கலாம்.

**பலம் வாய்ந்த, கட்டுக்கோப்பான அமைப்புக்களைக் கட்டியமைத்து போராடுவதில் நம்பிக்கையும், திறமையும், பொறுமையும் அற்றவர்களே பயங்கரவாதச் செயற்பாடுகளில் மட்டுமே ஈடுபாடு கொள்வதுண்டு.**

குறிப்பிட்ட பகுதிகளை தக்கவைத்து நிர்வாகம் நடத்தக்கூடிய ஆற்றலோ, மக்கள் ஆதரவோ பயங்கரவாதிகளுக்கு இருப்பதில்லை.

பயங்கரவாதிகளைக் கண்டு மக்கள் அஞ்சுவார்களே தவிர, ஆதரவளிக்க முன்வருவதில்லை. பயங்கரவாதம் என்பது சில நபர்கள் சேர்ந்து செய்யக்கூடிய சாகசங்களையே பிரதானமாக சார்ந்திருக்கும்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் இன்றைய வளர்ச்சி நிலையானது தென்னாசியாவிலேயே பலம் வாய்ந்த அரசியல், இராணுவ அமைப்பு என்ற கட்டத்தை அடைந்துள்ளது.

**பலம் வாய்ந்த முகாம்களை தாக்கும் கெரில்லா நடவடிக்கைகளிலும், பலம் வாய்ந்த படைகளை தடுத்து நிறுத்தி குறிப்பிட்ட பிரதேசத்தை பாதுகாக்கக்கூடிய மரபுப்போரிலும் தமது ஆற்றலை புலிகள் வெளிப்படுத்தி உள்ளனர்.**

ஒழுக்கம், கட்டுப்பாடு, செயற்திறன் என்பவற்றைக் கொண்ட தலைச்சிறந்த அரசியல், இராணுவத் தலைமையாகவே தமிழ் மக்களும் புலிகள் அமைப்பை இன்று நோக்கி வருகின்றனர்.

**இலங்கைத் தீவில் இரண்டு சமபலம் கொண்ட படைகள் மோதுவதாலேயே இதனை யுத்தம் என்று அழைக்க வேண்டியுள்ளது.**

பயங்கரவாதக் குழுவுடன் மட்டுமே சண்டையிடுவதானால், அதனை தேடுதல் வேட்டை என்றோ, மோதல்கள் என்றோதான் அழைக்க வேண்டியிருக்கும்.

எனவே, பயங்கரவாதிகள் என்ற சித்தரிப்புக்கு எவ்வகையிலும் பொருத்தமற்ற, சக்திமிக்க அமைப்பாகவே புலிகள் விளங்கி வருகின்றனர்.



**இத்தகைய உண்மையை மறைத்து பயங்கரவாதிகள் என புலிகளைப் பிரகடனம் செய்வதும், "புலிகளோடு பேசித்தான் பிரச்சனையை தீர்க்க வேண்டும் என்று அவசியமில்லை" எனக் கூறுவதும் வெறும் வீம்புத்தனமாக மட்டுமே இருக்கும்.**

அதனை மெய்ப்பிப்பது போலவே ஒலரா ஒட்டுணுவின் விஜயமும், அவரை புலிகளின் பிரதான தளத்திற்கு அனுப்பிவைத்தே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டதும் அமைந்திருந்தது.

**புலிகள் பயங்கரவாதக் குழுவாக இருந்தால், அவர்களைத் தேடிச் சென்று சந்திப்பதற்கு, ஐ.நா.சபை செயலாளரின் தூதரை பொறுப்புள்ள ஒரு அரசாங்கம் எவ்வாறு அனுமதித்திருக்க முடியும் என்ற கேள்விக்கு அரசு என்ன பதில் கூறப்போகிறது?**

பயங்கரவாதிகள் என்பவர்கள் இலட்சியமோ கொள்கையோ அற்றவர்கள். எத்தகைய படு பாதகங்களுக்கும் அஞ்சாதவர்கள். ஐ.நா.சபை செயலாளரின் தூதரைக்கூட அவர்கள் பணயக் கைதியாக பிடிக்கக்கூடும். ஏன் உயிரை எடுக்கக்கூட துணியக்கூடும்.

'ஒலரா ஒட்டுணுவை தங்கள் பணயக் கைதியாக பிடித்துவைத்து கொண்டு பயங்கவாதிகள் பேரம் பேச முற்படுவர். எனவே புலிகளின் கட்டுப்பாட்டு பகுதிக்கு செல்ல அனுமதிக்க இயலாது' என்று அரசு கூறியிருக்கலாம்.

**புலிகள் அமைப்பினர் உள்நாட்டிலும், உலகளாவிய ரீதியிலும் இருக்கக்கூடிய அரசியல், இராணுவ மரபுகளை மதிப்பவர்கள், உலக அபிப்பிராயத்தை மதிப்பவர்கள் என்கின்ற நம்பிக்கைகள் ஆட்சியாளருக்கு இருந்தமையாலேயே எவ்வித தயக்கமும் இல்லாமல் ஒலரா ஒட்டுணுவை வன்னிக்கு அனுப்பி வைத்திருந்தனர்.**

உலகில் பயங்கரவாத அமைப்புக்கள் எதனையும் ஐ.நா.சபை பிரதிநிதிகள் இதுவரை சென்று சந்தித்ததும் இல்லை.

**எனவே, ஒட்டுணுவும் விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாகக் கருதாமல், இலங்கைத்தீவில் யுத்தத்தில் ஈடுபடும் இரு தரப்புக்களில் ஒன்றாக சம கௌரவம் அளித்தே சென்று சந்தித்துள்ளார்.**

ஒட்டுணுவின் விஜயத்தை முன்னிட்டு புலிகள் இரண்டுநாள் போர் நிறுத்தம் அறிவித்திருந்தனர்.

## யார் நிறுத்தியது? யார் மீறியது?

தம்மை கௌரவித்து சந்திக்கவரும் ஐ.நா.சபை பிரமுகருக்கு புலிகள் வழங்கிய கௌரவமாகவே அது அமைந்திருந்தது.

**ஆனால், இலங்கைப் படைகளின் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க 'புலிகளதுபோர் நிறுத்த அறிவிப்பை தாம் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை' என்று அறிவித்திருந்தார்.**

விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச ரீதியாக நற்பெயர் கிடைத்துவிடும் என்பதாலேயே, புலிகளின் போர் நிறுத்த அறிவிப்பை முக்கியத்துவம் அற்ற ஒன்றுபோல காண்பிக்க அரச தரப்பினர் முயன்றனர்.

ஆனால், அதனையும்மீறி புலிகளது போர் நிறுத்த அறிவிப்பு சர்வதேச அரங்கை எட்டியது. புலிகளது வெளிநாட்டுக் கிளைகள் தமது தலைமையின் நெகிழ்வான, நாகரிகமான செயற்பாடுகளை இலங்கை அரச துருப்புக்கள் நிராகரித்துவிட்டன என்பதை சர்வதேசரீதியாக பிரசாரப்படுத்தியிருந்தன.

**தமது தூதரகங்கள் மூலம் அதனை அறிந்த அரச தரப்பினர், 'புலிகள் போர் நிறுத்தத்தை மீறிவிட்டதாக' குற்றம் சாட்டியிருந்தனர்.**

உலக அனுதாபத்தை தமது பக்கம் தக்கவைப்பதில் ஆட்சியாளர்களுக்கு இருக்கக்கூடிய அக்கறையைத்தான் மேற்கண்ட குற்றச்சாட்டு புலப்படுத்தியது.

**போர் நிறுத்த அறிவிப்பை பொருட்டாகக் கொள்ளவில்லை என்று அறிவித்தவர்கள், போர் நிறுத்தம் மீறப்பட்டதாக பத்திரிகையாளர்கள் மாநாட்டில் தெரிவித்தமை முன்னுக்குப் பின் முரணான கூற்றேயாகும்.**

போரில் ஈடுபடும் இருதரப்பும் கூடிப்பேசி அறிவிப்பதே ஒழுங்கான போர் நிறுத்தமாகும். ஒரு தரப்பு தானாக முன்வந்து அறிவிக்குமானால் ஒருதலைப் பட்சமான போர் நிறுத்த அறிவித்தல் என்று அழைக்கப்படுகிறது. அவ் அறிவித்தலை மறுதரப்பு ஏற்க மறுக்குமானால் 'போர் நிறுத்தம்' என்று கருதமுடியாது.

ஒரு தலைப்பட்சமாக போர் நிறுத்தத்தை அறிவிக்கலாம். மறுதரப்பு ஒத்துழைக்காமல் அனுஷ்டிக்க முடியாது.

எனவே, 'புலிகளது போர் நிறுத்தத்தை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை' என்று கூறப்பட்டபோதே, படைத்தரப்பு போர் நிறுத்தத்தை நிராகரித்துவிட்டது என்றே அர்த்தமாகும். ஆனால், சில பத்திரிகைகள் அதன் அர்த்தத்தை சரியாக புரிந்து கொண்டு செய்திகள் வெளியிட்டிருக்கவில்லை.

**போர் நிறுத்தத்தை நிராகரித்துவிட்டு போர் நிறுத்த மீறல் என்று உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் முன்பாக ஆட்சியாளர்கள் குற்றம் சாட்டியமையானது, புலிகள் கூறும் புகார் உண்மையாக இருக்குமோ என்று நினைக்க வைக்கிறது.**

படையினரே கிளிநொச்சி நகர், மற்றும் ஒலுமடுப் பகுதிகளில் தம்மை நோக்கி ஷெல் தாக்குதலை ஆரம்பித்தனர். தமது போர் நிறுத்த அறிவிப்பை கவனத்தில் எடுக்காமல் மீறினர் என்று புலிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

**ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்த அறிவிப்பு மூலமாக, புலிகளுக்கு சர்வதேச அரங்கில் நற்பெயர் ஏற்பட்டுவிடும் என்று கருதி, புலிகளை குற்றம் சாட்ட வதிசயான தாக்குதல் ஒன்றை படையினர் தொடுத்திருக்கக்கூடும்.**

புலிகளது குற்றச்சாட்டு வெளியாக முன்பாக, படைத்தரப்பினர் உரத்துக் குற்றம் சாட்டியதும் கவனிக்கத்தக்கது.

எப்படியோ, போர் நிறுத்தத்தை புலிகள் மீறியதாக குற்றம்சாட்டியபோது, புலிகளது அறிவித்தலை ஒரு பொருட்டாக எடுக்கவில்லை என்ற வீம்புப்பேச்சு உதிர்ந்து போயிருந்தது.

வன்னி சென்ற ஒலரா ஒட்டுணு கொழும்பில் தெரிவித்த கருத்துக்களும் ஆட்சியாளர்களுக்கு பூரண திருப்தியளிக்கத் தவறியிருந்தன.

எந்தவொரு தரப்பையும் தனியாகக் குற்றம் சாட்டாது, இரு தரப்பையும் பொதுவாக நிறுத்தியே தனது கருத்துக்களை அவர் வெளியிட்டிருந்தார்.

விடுதலைப் புலிகளை கடுமையாக சாடுவார் என்று எதிர்பார்த்திருந்த ஆட்சியாளருக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

ஒலரா ஒட்டுணு தெரிவித்த மற்றொரு கருத்து ஆட்சியாளரை முகம்கோண வைத்துள்ளது.

**"இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமானால் இரு தரப்பினரும் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக தீர்மானம் ஒன்றுக்கு வரவேண்டும்" என்று ஒலரா ஒட்டுணு கருத்து வெளியிட்டிருந்தார்.**

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் என்றாலே சுள்ளென்று கோபம் தலைக்கேறுகின்ற திரு. லக்ஷ்மன் கதிர்காமர் போன்றோருக்கு ஒலரா ஒட்டுணுவின் கருத்து கத்திக்குத்துப் போலவே அமைந்திருக்கும்.

**வன்னியில் புலிகளது பலத்தையும், அமைப்பு முறையையும் நேரிலே கண்டபின்னரே மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தொடர்பாக ஒலரா ஒட்டுணு பிரஸ்தாபித்திருக்கிறார்.**

இலங்கை இனப்பிரச்சனையானது உள்நாட்டுப் பிரச்சனையல்ல, பாலஸ்தீனப் பிரச்சனை, தென்னாபிரிக்க பிரச்சனை போன்றே சர்வதேச பிரச்சனைகளுடன் ஒப்பிடக்கூடிய பிரச்சனையேயாகும்.

**உள்நாட்டுப் பிரச்சனையாக சித்தரித்து, தமிழர் தரப்பு பலவீனமாகும்வரை போரை நடத்திமுடித்து, அரைகுறைத் தீர்வொன்றை திணிப்பதற்கே அரசு முயன்றுவருகிறது.**

ஆயினும், விடுதலைப் புலிகளின் அரசியல், இராணுவ வலிமையானது, இனப்பிரச்சனையின் தீவிரத்தை சர்வதேச அரங்கில் மூடிமறைக்க முடியாதளவுக்கு வெளிப்படுத்தி வருகிறது.

அதனையே ஒலரா ஒட்டுணுவின் வன்னி விஜயமும், சர்வதேச மத்தியஸ்தம் ப்ற்றி அவர் கூறிய கருத்துக்களும் புலப்படுத்தியுள்ளன.

**ஒலரா ஒட்டுணு சர்வதேச மத்தியஸ்தம் பற்றி கூறிவிட்டதால், நாளையே மத்தியஸ்தம் வந்துவிடப்போவதில்லை. ஆனாலும் ஒரே குரலில் உறுதி தளராமல் தமிழ் பேசும் தரப்பு சர்வதேச மத்தியஸ்தத்தை கோருமானால், அதனை மறுத்துரைக்கக் கூடிய வலுவான காரணம் எதுவும் ஆட்சியாளரிடம் இருக்கப்போவதில்லை.**

தமிழ்பேசும் மக்கள் மத்தியிலுள்ள பொது அமைப்புக்கள், சமூக அக்கறை கொண்ட பெரியோர்கள், மற்றும் அனைத்துத் தரப்பினரும் ஒன்றுபட்டு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தமே தேவை என்பதை உரத்து வலியுறுத்த முன்வரவேண்டும்.

இலங்கை அரசினதும், ஜனாதிபதியினதும் முன்னைய 'இமேஜ்' சர்வதேச அரங்கில் சரிந்து வருகிறது. மனித உரிமை அமைப்புக்களுடனும் ஆட்சியாளர்கள் முரண்பட தொடங்கியுள்ளனர். மூன்றாம் தரப்பு மத்தியஸ்த கோரிக்கைக்கும் ஆதரவு ஏற்பட தொடங்கியுள்ளது.

இச் சந்தர்ப்பத்தை நன்கு பயன்படுத்துவது, தமிழ்பேசும் தரப்பின் கையிலேயே உள்ளது. ○

---

## சந்திக்கு வராத சங்கதிகள்

நக்கீரன்

# முத்தரப்பும் மூன்றாம் தரப்பும்

மூன்றாம் தரப்பு-முத்தரப்பு. இதில் இலங்கை அரசுக்கு பிடித்தது முத்தரப்பு.

அரசு, புலிகள், எதிர்க்கட்சி ஆகியனவே முத்தரப்பு.



எதிர்க்கட்சி ஒருபோதும் தம்மோடு ஒத்துழைக்காது, தப்பித்தவறி ஞானோதயம் பிறந்து ஒத்துழைத்தாலும்கூட ஆளும் கட்சியாக உள்ள தமக்கே பெயர் கிடைக்கும் என்ற நம்பிக்கையில்தான் 'எதிர்க்கட்சி ஒத்துழைக்க வேண்டும்' என்ற பல்லவியை ஆளும் தரப்பு அடிக்கடி பாடி வருகிறது.

இந்தப் பல்லவியைப் பாடிக்கொண்டிருக்க, போர் ஒரு புறம் நடக்கும்! புலிகள் பலவீனமாவர்! அதன் பின்னர் எதிர்க்கட்சியின் உதவியே தேவைப்படாது! வடக்கு-கிழக்கையும் 'கேக்' வெட்டுவது போல சுலபமாக வெட்டிப் பிரிக்கலாம்.

பின்னர் மிகக் குறைந்தபட்ச தீர்வை தூக்கிப்போட்டுவிட்டு, சிங்கள மக்களிடமும் 'தம் படைப் பெருமை' பேசிக்கொண்டு பொதுத் தேர்தலை நடத்தி வெற்றிக் கனி சுவைக்கலாம் என்பதுதான் பொதுஜன முன்னணியின் இலட்சியக் கனவு.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை பரிசீலிக்கத் தயார் என்று இந்திய ஆங்கில சஞ்சிகையான புரொன்ட்லைனுக்கு சில காலத்தின் முன்னர் அம்மையார் பேட்டியளித்திருந்தார்.

உடனே சில விமர்சகர்கள் விழுந்தடித்து வரவேற்றதை நீங்கள் அறிந்திருக்கலாம்.

அப்போது முரசில் அது தந்திரப் பேட்டியே தவிர, மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை அரசு விரும்பாது என்பதை காரண கரியங்களுடன் விளக்கி யிருந்ததையும் மறந்திருக்க மாட்டீர்கள்.

. ஆனால், அரசியல் ஞானிகளான கூட்டணியினர்கூட அம்மையாரின் பேட்டி உண்மைதான் என்று நினைத்துவிட்டனர். அதனால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கேட்டு பாராளுமன்றத்தில் உரையாற்றினார் இரா. சம்பந்தன்.

பின்னர், திரு. லக்ஷ்மன் கதிர்காமர் வெளிப்படையாகவே, "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவையே இல்லை" என்று அடித்துக் கூறியதும், சம்பந்தர் அடித்தார் சூப்பர் பல்டி.

கொழும்பு வந்திருந்த ஜாவிடம் இரா. சம்பந்தர், முத்தரப்பு பேச்சுக்கு தூண்டுமாறு கோரினாராம். பத்திரிகைகளுக்கு அவரே தெரிவித்த செய்தி அது.

மூன்றாம் தரப்பு, முத்தரப்பாக மாறிவிட்டது. அல்லது மூன்றாம் தரப்பில் இருந்து முத்தரப்புக்கு தாவிவிட்டார் சம்பந்தர்.

அரசுக்கு ஏற்ப பல்லவி பாடி அரசை மகிழ்ச்சிப்படுத்தல் அல்லாமல் வேறொன்றும் அறியார்கள் இவர்கள்.



□□

யாழ்ப்பாணத்தில் இருந்து வலைப்பந்தாட்டம், உதைப்பந்தாட்டம், கால்பந்தாட்டம் என்று பலரக ஆட்டங்களுக்கு மாணவ மாணவிகள் தென்னிலங்கைக்கு வருகிறார்கள்.

ஏதோ சந்திர மண்டலத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட ஜீவராசிகள் மாதிரி அவர்களைத் தொலைக்காட்சிகளில் காண்பிக்கிறார்கள்.

பிறிதொரு நாட்டிலிருந்து, அல்லது கைப்பற்றப்பட்ட பூமி ஒன்றில் இருந்து வந்தவர்கள் என்ற மனோநிலை விளையாட்டு அமைச்சுக்கு இருப்பதால்தான் இப்படிச் செய்கிறார்களோ? என்ற கேள்வி எழாமல் இல்லை.

ஏனெனில் நாட்டின் வேறு பகுதிகளிலிருந்து கொழும்புக்கு வரும் கரப்பந்தாட்டக் குழுவையும், வலைப்பந்தாட்டக் குழுவையும் இப்படி விளம்பரப்படுத்துவதில்லை.

கொழும்பில் தமிழர்கள் யாவரும் குண்டோடு திரிவதுபோல கைது செய்து கொண்டு, சில மாணவ, மாணவிகளை பந்தாட அழைத்துவந்து, நாட்டில் சமாதானம் நிலவுகிறது, நாங்கள் தமிழர்களோடு விளையாடுகிறோம் என்று காண்பிக்கிறார்கள்.

உண்மைதான், விளையாடத்தான் நினைக்கிறார்கள்.

●●

பாடசாலை மாணவர்களை படையில் சேர்க்கும் யோசனையைக் கூறியது ஆளும்தரப்பில் முக்கியமான ஒருவர்தான்.

ஒலரா ஒட்டுணு வரும் நேரம் என்பதை மறந்துபோய் ஏதேச்சையாக கூறிவிட்டார். அதனை ஆங்கில வார இதழ் ஒன்று 3.05.98ல் தலைப்புச் செய்தியாக வெளியிட்டிருந்தது.

07.05.98 அன்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில்தான் அச் செய்தி முற்றிலும் தவறு என்று ஆளும் தரப்பு மறுத்தது. பத்திரிகைகளையும் ஒரு பிடி பிடித்தனர்.

உண்மையாகவே அச் செய்தி தவறு என்றால், நான்கு நாட்களாக ஆளும் தரப்பு ஏன் மறுப்பு வெளியிடாமல் இருந்தது?

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் அதனை ஒரு பிரச்சனையாக மாற்றிய பின்னரும், பாராளுமன்றத்தில் கண்டித்து உரையாற்றிய பின்னருமே ஆளும் தரப்பு விழுந்தடித்து மறுத்திருக்கிறது.

'அடடே... ஒலரா ஒட்டுணு இங்கு நிற்கும் நேரமாச்சே!' என்று அப்போதுதான் கைகளை உதறிக்கொண்டு பதறியடித்து மறுத்ததுபோல் தெரிந்தது.

தமக்கு பாதகம் என்று தெரிந்தால், பத்திரிகையாளர்களை 'பாவிகள்' என்று திட்டிவிட்டுப் போவது மிக வசதிதான்.

ஆனால், நெருப்பில்லாமல் புகையாது. எதிர்க்கட்சித் தலைவர்தான் பாவம். தேசத் துரோகிப் பட்டம். பொதுஜன முன்னணி ஆட்சியில் மிக மலிவான சமாச்சாரங்களில் ஒன்றாக 'தேசத்துரோகி' பட்டமும் மாறி வருகிறது.

எதிர்க்கட்சியும், ஆளும் கட்சியும் கீரியும் பாம்புமாக இருப்பதால்தான் இவ்வாறான பாரிய இராணுவத்தீர்வு முயற்சிகள் என்றாலும் அம்பலமாகின்றன. இரண்டையும் சேர்த்து வைக்க ஓடித்திரியும் தமிழ்க்கட்சிகள் கவனத்தில் கொள்வார்களாக! உள்ளதையும் கெடுக்கும் நொள்ளைக் கண்ணர்களாகாதீர். ●



படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

# அதிர் இடி 9

**இதுவரை**

**இராணுவத் தளபதியாகிவிட்ட இடி அமீன் ஜனாதிபதி ஒபேடேயைக் கொல்ல சதிசெய்கிறான். ஒபேடே மயிரிழையில் தப்புகிறார். இடி அமீனை சந்தேகிக்கிறார். இடி அமீனை குற்றம் சாட்டிய பிரிகேடியர் ஒருவர் கொல்லப்படுகிறார்.**

**இனி...**

# இடி அமீன்

நடனமாடிய மெண்டினா தன்னை நோக்கி இடி அமீன் வருவதைக் கண்டதும் புன்னகைத்தாள். கண்களை விரித்து அமீனை விழுங்கினாள்.

**"நன்றாக ஆடுகிறாய், அழகாக இருக்கிறாய். இனிமையாகச் சிரிக்கிறாய். இளமையாக இருக்கிறாய்...!"** என்றான் அமீன்.

பேச்சு சாதுரியம் மிக்கவன் இடி அமீன். இராணுவத் தளபதியாக இருந்த மூன்று வருடங்களுக்குள் தன் பேச்சு சாதுரியத்தை மேலும் சீவிக் கூர்மைப் படுத்திக்கொண்டான்.

ஆளுக்குத் தகுந்த மாதிரிப் பேசி மடக்குவது அமீனுக்கு கைவந்த கலையாகி விட்டது.

அந்தக் கலையைப் பயன்படுத்தித்தான் உகண்டா இராணுவத்திற்குள் தனக்கு விசுவாசமானவர்களை உருவாக்கிக் கொண்டான்.

ஆட்களை எடைபோடுவதில் அமீனுக்கு நிகர் எவரும் இல்லை. ஆண்களோ, பெண்களோ அவர்களது கண்களைப் பார்த்தே கணிப்புப் போட்டுவிடுவான். விழுமா? விழாதா?

இப்போது மெண்டினா. அவள் கண்களில் ஆசை வழிந்தது. உதடுகளில் கிறக்கம் தெரிந்தது. அவள் மார்புகள் பெரிதாக விம்மித் தணிந்தன.

தன்னைக் கண்டு ஏங்குகிறாள். வலையை வீசினால்போதும்; மீன் சிக்கி விடும். அமீன், **"ஆள் அனுப்புகிறேன், வா, சந்திக்கலாம், நிறையப் பேசலாம் என்ன,"** என்றான்.

மெண்டினா மறுபேச்சே இல்லாமல் சம்மதத்தின் அறிகுறியாக தலையசைத்தாள்.

விடைபெறும்போது அவளது பின்புறத்தில் தட்டிவிட்டுப் போனான். இடி அமீன் ஒரு பெண்மீது 'கண்வைத்துவிட்டால், அப்பெண் அவனது கட்டிலில் இருக்க வேண்டும் அல்லது கல்லறைக்குப் போக வேண்டும் என்பது பிரசித்தம்.

மெண்டினாவை அன்றிரவே சட்டிலில் சந்தித்தான். மெண்டினா இடி அமீனுக்கு பிடித்துப்போனாள்.

**"உன்னைத் திருமணம் செய்து கொள்ளப்போகிறேன், நீ எனது எத்தனையாவது மனைவி தெரியுமா?"**

மெண்டினா தெரியாது என்பதாய், சின்னதாய் புன்னகைக்க, **"நாலு, நாலாவது மனைவி,"** என்று உரத்துச் சிரித்தபடி, அவளது முதுகெலும்பை உடைப்பது போல இறுக்கி அணைத்துக்கொண்டான்.

இடி அமீனின் நாலாவது மனைவியானாள் மெண்டினா. திருமணத்தை முன்னிட்டு சக அதிகாரிகளுக்கு விருந்தளித்தான்.

**"நாளை நான் எகிப்துக்குச் செல்கிறேன். பாவம், என் இளம் மனைவி தனிமையில் தவிக்கப்போகிறாள்,"** என்று ஜோக்கடித்தான்.

அதேநேரம், ஜனாதிபதியின் மாளிகையில், அமீனை பதவியில் இருந்து நீக்குவது பற்றிய இரகசிய ஆலோசனை நடைபெற்றுக்கொண்டிருந்தது.

மிகவும் நம்பகமான அதிகாரிகளுடன் தனியறையில் ஜனாதிபதி ஒபேடே அமர்ந்திருந்தார்.

"அமீன் எகிப்து சென்றதும் அவன் மீதான விசாரணைகளை ஆரம்பிக்க வேண்டும். அவன் இங்கே இல்லையானால், அவனுக்கு எதிராக சாட்சி சொல்வதற்கு யாரும் தயங்கமாட்டார்கள்!" என்றார் ஒபேடே.

"தன்மீதான விசாரணை நடைபெற்றது என்று அமீனுக்குத் தெரிந்தால், சாட்சி சொன்னவர்கள் மட்டுமல்ல, விசாரணை நடத்தியவர்களும் உயிர் தப்ப முடியாது!" என்றார் ஓர் அதிகாரி.

"திரும்பி வந்தால்தானே!" என்றார் ஒபேடே. அதிகாரிகள் குழப்பமாக புருவங்கள் உயர்த்த, "திரும்பிவரும்போது விமான நிலையத்திலேயே அமீன் கைது செய்யப்படுவான். பின்னர் தண்டனைதான்!" என்றார் தோள்களைக் குலுக்கியபடி ஒபேடே.

அமீன் ஒருமாத காலம் எகிப்தில் தங்கியிருக்கவேண்டும் என்று அந்த நாட்டு அரசு கேட்டிருந்தது.

'ஒருமாதம் மெத்தப் போதும், விசாரணைகளை முடித்துவிடலாம்' என்று ஒபேடே மகிழ்ச்சியில் திளைத்தார்.

அவர் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருந்தபோது, இடி அமீன் கோபத்தில் தகித்துக்கொண்டிருந்தான்.

இரகசிய ஆலோசனையில் பேசப்பட்ட அத்தனை தகவல்களையும் அமீனுக்கு விசுவாசமான அதிகாரி விலாவாரியாகக் கூறிமுடித்திருந்தார்.

தங்கக்கட்டி ஒன்றை அந்த அதிகாரியின் முன்பாகத் தூக்கிப்போட்டான்.

சன்மானம் கொடுப்பதிலும் அமீன் ரொம்பத் தாராளம். அதனால் ஒபேடேயின் விசுவாசிகள் பலரே அமீன் பக்கம் சாய்ந்துவிட்டனர்.

**"கிழவன் விரைவாகத் தொலைந்து போக ஆசைப்படுகிறான். என்மீதே கைவைக்கத் துணிந்துவிட்டானா?"** உறுமினான்.

மறுநாளே எகிப்துக்குப் புறப்பட்டான் அமீன். புறப்படமுன்னர் ஜனாதிபதி ஒபேடேயிடம் ஃபோனில் விடைபெற்றான்.

**"சென்று வருகிறேன். உங்களைவிட்டுப் பிரிவதை எண்ணி வேதனை அடைகிறேன்."**

"சேச்சே... என்ன ஒரு மாதம்தானே, உனக்கும் ஓய்வாக இருக்கும், சந்தோசமாக சென்றுவா! உனது பயணம் நன்றாக அமைய பிரார்த்திக்கிறேன்!" என்றார்.

அமீன் மறுமுனையில் **"நன்றி"** கூறி ஃபோனை வைத்துவிட்டு **'கிழட்டு நரி என்னிடமே நடிக்கிறது!"** என்றான்.

அமீன் புறப்பட்டுச் சென்றுவிட்டதாக தகவல் கிடைத்ததும் ஒபேடே



துள்ளிக்குதித்தார்.

அவரது குதிப்புக்கு அதிகபட்ச ஆயுள் மூன்றே மூன்று நாள்தான்.

மூன்றாவது நாள் காலையில் ஜனாதிபதி ஒபேடே காலை உணவை சாப்பிட ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்.

அமீன்மீதான விசாரணைகளை அன்றுதான் ஆரம்பிப்பதாக இருந்தது. அவற்றை நேடியாகக் கவனிப்பதற்காக சற்று நேரத்துடனேயே காலை உணவைச் சாப்பிட ஆயத்தமானார்.

உள்ளக தொலைபேசி அழைத்தது. எடுத்து "என்ன?" என்றவருக்கு இடி விழுந்தது போல மறுமுனைத் தகவல் கிடைத்தது.

"தங்களைக் காண்பதற்காக தளபதி இடி அமீன் வந்து காத்திருக்கிறார்!"

ஜனாதிபதிக்கு கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. தனது திட்டங்கள் எல்லாம் இடிந்துவிழும் சத்தம் அவர் காதில் கேட்பது போலிருந்தது.

"வ...வரச்சொல்...!" என்றார் குரலில் சுரத்தே இல்லாமல்.



வந்த அமீன் ஜனாதிபதி ஒபேடேயின் அவஸ்தையை இரசித்தான். மென்று, விழுங்கி வார்த்தைகளை வெளியிட்டார் ஜனாதிபதி, "என்...என்ன உடனே... இத்தனை விரைவாக திரும்பி விட்டாய்?"

**"ஜனாதிபதியைக் கொல்ல விஷமிகள் சதி செய்து முடித்திருக்கிறார்கள் என்று நம்பகமான தகவல் கிடைத்தது. அந்த தகவல் கிடைத்த பின்னரும் எகிப்தில் தங்கியிருந்தால் நான் பதவியில் இருக்கவே இலாயக்கில்லாதவன்!"**

ஒபேடேக்கு உள்ளூர எரிச்சலாக இருந்தது. வெளியே காட்டாமல், "என்ன கொலைச் சதியா? ...சதி.. சதி... இந்தத் தலைமையே எனக்கு வேண்டாம்; வேறு யாரிடமாவது ஒப்படைக்கலாம் என்று நினைக்கிறேன்!" என்று கூறிக்கொண்டு, அமீனின் முகபாவத்தை ஓரக் கண்ணால் நோக்கினார்.

**"ஒப்படைக்க வேண்டாம். ஒழித்துக்கட்டுவது எனது பொறுப்பு!"** என்றவனிடம், **"யாரை?"** என்றார். **"சதிகாரர்களை!"** என்றுவிட்டு சல்யூட் அடித்துவிட்டு விடுவிடுவென்று நடந்து சென்றவனை பார்த்துக்கொண்டே இருந்தார் ஜனாதிபதி.

அடுத்த கால்மணி நேரததில் ஜனாதிபதி முன்பாக நின்றவர் அகெனா அடொகோ. ஜனாதிபதி ஒபேடேக்கு சகோதரர் முறையானவர்.

முதலாவது கொலைச் சதிக்குப் பின்னர் தனது தனிப்பட்ட பாதுகாப்புக்கு என்ற போர்வையில், இடி அமீனுக்கு சந்தேகம் வராதளவுக்கு பொதுச் சேவைகள் பிரிவு ஒன்றை ஆரம்பித்திருந்தார் ஜனாதிபதி.

அதற்குப் பொறுப்பாக அகெனா அடொகோ நியமிக்கப்பட்டிருந்தார்.

"இடி அமீனை ஒழித்துக்கட்ட முடியுமா, முடியாதா? உண்மையைக் கூறிவிடுங்கள். முடியாவிட்டால் நான் பதவியைவிட்டு இறங்கிவிடுகிறேன்!" என்றார் ஒபேடே. மிகவும் விரக்தியாக இருந்தார்.

"பொதுநலவாய நாடுகளின் மாநாடு எப்போது ஆரம்பமாகிறது?"

"ஜனவரிமாதம், சிங்கப்பூரில்."

"அந்த மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு நீங்கள் வரும்போது இடி அமீன் இருக்கமாட்டான்-போதுமா?"

ஒபேடேயின் முகம் சிறிது பிரகாசமானது.

1971 ஜனவரியில் நடைபெற்ற பொது நலவாய நாடுகளின் மாநாட்டுக்காக சிங்கப்பூர் புறப்பட்ட ஒபேடேயை வழியனுப்ப விமான நிலையத்திற்கு வந்திருந்தான் இடி அமீன்.

ஜனாதிபதியின் சிங்கப்பூர் விஜயத்துடன், தன்னை ஒழித்துக்கட்டத் தீட்டப்பட்ட சதியை அக்குவேறு ஆணி வேறாக அறிந்து வைத்திருந்தான் அமீன்.

அவனது உளவுப் பிரிவு சுறு சுறுப்பாகவும், சகல இடங்களிலும் நிறைந்து இருந்தது.

தன்னையறியாமல் உகண்டாவில் ஒரு அணுவும் அசையமுடியாது என்றளவுக்கு உளவுப் பிரிவை உருவாக்கி முடித்திருந்தான் அமீன்.

ஒபேடேயின் நம்பகமான வட்டாரத்திற்குள் ஒன்றுக்கு மூன்றுபேர் அமீனின் விசுவாசிகளாகவும், உளவறிந்து தகவல் கூறுகிறவர்களாகவும் இருந்தனர்.

வழியனுப்ப வந்த அமீனுடன் ஒப்புக்காக புன்னகைத்து, அவனது சல்யூட்டை பெற்றுக் கொண்டு விமானம் ஏறிப் போய்விட்டார் ஒபேடே.

அன்றிரவே ஒபேடேயின் நம்பகமான அதிகாரி ஒருவரை கைதுசெய்து வெட்ட வெளியில் கொண்டு சென்று நிறுத்தினான் அமீன்.

"என்னை என்ன செய்யப் போகிறீர்கள்?" என்றவரிடம், அமீன் சொன்னான்: "சிங்கப்பூருக்கு அனுப்பி வைக்கப்போகிறோம்!"

உடனே புரியவில்லை. துப்பாக்கிகள் முழங்கத் தொடங்கியபோதுதான் அதிகாரிக்குப் புரிந்தது.

துப்பாக்கி ரவைகள் அவரது தலைக்கு மேலாக உரசிக் கொண்டு செல்வதுபோல பறந்தன.

ஆனால், உடம்பில் படவேயில்லை. "பயந்துவிட்டீரா? உம்மைக் கொல்லமாட்டேன், அதாவது என்னோடு ஒத்துழைத்தால்...!" என்றான் அமீன்.

**தருவது ரசிகன்**

அதிகாரிக்கு அவரது மனைவியும் பிள்ளைகளும் மனக் கண்ணுக்குள் வந்து நின்றனர். ஒழிவதைவிட ஒத்துழைப்பதே மேல் என்று "நான் தயார்!" என்றுகூற, "எதற்கு செத்துப்போகவா, என்னோடு ஒத்துப் போகவா?" என்றான் அமீன் பெரிதாகச் சிரித்து.

"ஒத்துப்போக..." என்று அவர் சொன்னதற்காக, கரகோசம் செய்தான் அமீன்.

அன்று நள்ளிரவில் அமீனின் அலுவலகத்தில் அவனுக்கு விசுவாசமான அதிகாரிகள் ஒன்று கூடினர்.

**"இன்றிலிருந்து பத்துநாட்களுக்குள் உகண்டா ஜனாதிபதி மாற்றப்படுவார்!"** என்றான் அமீன் தவிர, தானே ஜனாதிபதியாகப் போகிறேன், என்று நேரடியாகக் கூறவில்லை.

சட்டென்று எழுந்து நின்ற சில அதிகாரிகள், "தாங்கள்தான் ஜனாதிபதியாக தகுதி உடையவர்!" என்றனர் ஒரே குரலில். ஏனையோரும் ஆமோதிக்க, மிகுந்த திருப்தியை மறைத்தபடி, தனது எதிர்பார்ப்புக்கு ஏற்ப அவர்கள் நடந்து கொண்டதை வியந்தபடி, **"அதனை பின்னர் பார்க்கலாம்"** என்றான்.

அதிகாரிகள் விடவில்லை. நச்சரித்தார்கள். **"எல்லோரும் வற்புறுத்தினால் நான் எங்கே போவது? சரி உங்கள் விருப்பம்!"** என்றான் அமீன்.

அடுத்த சில நாட்களில் உகண்டாவில் பல விசித்திரங்களும், விபரீதங்களும் அரங்கேறின.

(இடி தொடரும்)

# உள்ளம் கவர் கள்வன்



திரைப்படப் பிரியர்களான ஆண்களுக்கு கனவுக் கன்னிகள் இருப்பதுபோல, பெண் இரசிகைகளுக்கும் கனவுக் கன்னியன்கள் இருப்பார்கள்தானே.

இன்றைய நிலவரப்படி உலகில் இளம் பெண்களைக் கவர்ந்தவரும், அழகான இளைஞர் என்று ஏகோபித்த ஆதரவைப் பெற்றிருப்பவரும் யார் தெரியுமா? லியானார்டோ டி கேப்ரியோ.

யார் அந்த அதிஷ்டசாலி என்று பொறாமைக்கார ஆண்களுக்கு தெரிந்திருக்கலாம். 'டைட்டானிக்' பட கதாநாயகன்தான் அவர்.

இளம் பெண்களின் உள்ளங்களை வகை தொகையில்லாமல் கொள்ளையடித்துள்ள லியானார்டோவுக்கு 23 வயது. 14 வயதில் நடிக்க வந்துவிட்டார்.

'டைட்டானிக்' படத்தில் காதலுக்காக உயிரை விடத் தயாரான இளைஞராக நடிக்கிறார். ஆனால் காதலித்த அனுபவம் கிடையாதாம். அத்தனை ஏன், காதல் கதைகளைக்கூட படித்தது கிடையாதாம். மேலும் ஒரு படி மேலே போய், "காதல் எனக்குப் பிடிக்காது," என்றும் ஒரே போடாகப் போட்டிருக்கிறார்.

"இத்தனை புகழ்பெற்ற பின்னரும் அவர் பந்தா காட்டுவதில்லை. அலட்டிக்கொள்வதில்லை. முன்புபோலவே அன்பு நண்பனாகப் பழகுகிறார்," என்று நண்பர்கள் புகழுகிறார்கள்.

உலகில் அழகான இந்த வாலிபனை நினைத்து இரசிகைகள் விடும் பெருமூச்சு, இவரது மன உறுதியை அசைத்து, காதலையும் பிடித்தமான சமாச்சாரமாக்கக் கூடும்.

# புதிய நண்பிகள்



பிரிட்டிஷ் இளவரசர் சாள்ஸுக்கு புதிய நண்பிகள் கிடைத்திருக்கிறார்கள்.

உலகில் நம்பர் வன் பொப் இசைக் குழுவான 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' பெண்கள்தான் புதிய நண்பிகள். 'ஸ்பைஸ் கேர்ள்ஸ்' என்றால் வாசனையுள்ள பெண்கள் என்று அர்த்தம்.

இளவரசருக்கு பொதுவாகவே பெண் வாசனை என்றால் பிடிக்கும். வாசனைப் பெண்கள் என்றால் கேட்கவா வேண்டும்?.

நேரடியாக சந்தித்தபோது ஸ்பைஸ் கேர்ள்ஸின் இளமையும் குறும்புகளும் சாள்ஸைக் கவர்ந்துவிட்டதால் நட்புத் தொடருகிறதாம்.

டயானாவைத் தவிர வேறு பெண்கள் அனைவருடனும் சாள்சுக்கு ஜாலியாகப் பழக முடிகிறதே-எப்படி?

# நான் அவள் அல்ல



அந்தநாள் ஞாபகம்

இந்திய முன்னாள் பிரதமர் நரசிம்மராவ் எழுதியுள்ள 'தி இன்சைடர்' என்ற நாவல் இந்திய அரசியல்வாதிகளை சுயநலமிகளாக, தங்கள் ஆசைக்கு இணங்கும் பெண்களை அரசியலில் முதன்மைப் படுத்துகிறவர்களாக, தங்கள் சகாக்களுக்கு குழிபறிப்பவர்களாக சித்தரிக்கிறது.

இந்திய அரசியல்வாதிகள் மட்டுமல்ல, பொதுவாக அரசியல்வாதிகளே அப்படித்தான். அது ஒரு புறமிருக்க, நரசிம்மராவின் நாவலில் அருணா என்றொரு பாத்திரம் வருகிறது.

நாவலில் ஆனந்த் என்ற பாத்திரம் நரசிம்மராவைக் குறிக்கிறது. அருணாவுக்கும், ஆனந்துக்கும் இடையே காதலும்,காமமும் நிரம்பி வழிகிறது.

அருணா என்று குறிப்பிடப்படும் பெண் அரசியல்வாதி யாராக இருக்கலாம் என்று இந்தியப் பத்திரிகையாளர்கள் மோப்பம் பிடித்து ஒரு விதமாகக் கண்டு பிடித்துவிட்டனர்.

அந்தப் பெண் அரசியல்வாதியின் பெயர்: லட்சுமி காந்தம்மா. கர்நாடக மாநிலத்தைச் சேர்ந்தவர். 1962 முதல் 1977வரை எம்.பியாக இருந்திருக்கிறார்.

அந்தக் காலத்தில் சுண்டியிழுக்கும் அழகியாக இருந்தார் அதனால்தான் காங்கிரஸ் தலைவர்கள் அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்புக் கொடுத்தனராம்.

முதலில் "நான் அவள் அல்ல," என்று மறுத்தபோதும் பின்னர் மறைமுகமாக ஒப்புக் கொண்டுவிட்டார் காந்தம்மா. "எனக்கும் நரசிம்மராவுக்கும் தப்பான உறவு இருக்கவில்லை. உணர்ச்சிபூர்வமான உறவுதான் இருந்தது. அவருடைய அறிவின் அளவைப்பார்த்து நான் வியந்திருக்கிறேன்; பாராட்டியிருக்கிறேன்.

மொராஜி தேசாய் மிகவும் தைரியசாலி. நேர்மையானவர். ஆனால் சிறுநீரைக் குடிக்கலாம் என்று பேசி அனாவசியமாக சர்சையை உண்டாக்கினார். நரசிம்மராவ் விஷயமும் அப்படித்தான். சில விஷயங்களைப் பற்றிப் பேசாமல் இருப்பது நல்லது. அதனால் நாட்டுக்கு என்ன பயன் விளையப்போகிறது?" என்று கேட்கிறார் திருமதி லட்சுமி காந்தம்மா.

# "தைரியமாகப் போராடுங்கள்"



தமிழ்நாட்டில் சிதம்பரம் பொலிஸ் நிலையத்தில் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானவர் பத்மினி.

மகளிர் அமைப்புக்களின் பின்பலத்துடன் போராடினார் பத்மினி. அங்குள்ள மகளிர் அமைப்புக்கள் தங்களுக்கு விளம்பரம் தேட போராட்டம் நடத்தும் அமைப்புக்களல்ல.

அதனால் வெற்றி கிட்டும்வரை போராடினர். பத்மினிக்கு சாதகமான தீர்ப்பும் வழங்கப்பட்டது. சமீபத்தில் தமிழ்நாட்டில் முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கக் கூட்டத்தில் பத்மாவதியையும் பேச அழைத்தனர்.

"எனக்கு எம்.ஜி.ஆர் படம் என்றால் உயிர். அவருடைய இரசிகை. சினிமாவில் கதாநாயகி வில்லனிடம் மாட்டிக்கிட்டு, 'காப்பாத்துங்க'ன்னு கத்தும்போது எம்.ஜி.ஆர். வர தாமதித்தால் கதாநாயகியோடு சேர்ந்து நானும் கதறுவேன்

அப்படிப்பட்ட அதே சூழ்நிலையில் நான் மாட்டிக்கொண்ட போது, எம்.ஜி.ஆரும் வரவில்லை. ஜெயலலிதாவும் வரவில்லை.

நான் படிக்காதவள். எனக்குப் பேசக் கூடத் தெரியாது. அப்படி இருந்த என்னை சீரழிச்சபோது, தைரியமாக வீட்டைவிட்டு வெளியே வந்து போராடினேன். அதேபோல அத்தனை பெண்களும் போராடவேண்டும்!" என்று முஷ்டி உயர்த்தியபடி கூறினார்.

அவர் கூறியபோது அங்கிருந்த மக்களும் அவருடன் சேர்ந்து தங்கள் முஷ்டியை உயர்த்தினார்கள்.



படிப்பகம்

www.padippakam.com

# அந்தரத்தில் இரண்டுபேர்



← மெய்சிலிர்க்க வைக்கும் சாகசக் காட்சி இது. கயிற்றில் நடப்பது, சைக்கிள் ஓட்டுவது இரண்டு சாதனையும் ஒரே கயிற்றில்,ஒரே நேரத்தில் நடக்கிறது பார்த்தீர்களா?

சர்க்கஸ் சாகசங்களில் சீனர்கள் கில்லாடிகள். இச் சாகசமும் சீனாவில் நான்சாங் என்ற இடத்தில் நடைபெற்றது.

மலைப்பகுதியின் ஒரு முனையில் இருந்து மறுமுனைக்கு சுமார் 769 மீட்டர் தூரத்தை கடந்து காட்டினார்கள். 15 நிமிடமும் 6 விநாடியும் எடுத்துக் கொண்டனர்.

இருவரில் ஒருவர் 'பாலன்ஸ்' தவறினால்கூட மற்றவருக்கும் ஆபத்து. கீழே விழுந்தால் பொறுக்கவும் எலும்புகள் தேறாது.

## தகவல் பெட்டி

# எடை கூடிய அழகு




↘ அழகு ராணிப் போட்டிகள் என்றால் அறிவுத்திறனுக்கும் முக்கிய இடம் அளிக்கப்படும் என்பது சும்மா ஒரு சமாளிப்புத்தான். உடலமைப்புக்குத்தான் முதலிடம். சின்ன இடை, அன்ன நடை, அளவான எடை, குறிப்பிட்ட அளவுப் பரிமாணங்கள் போன்றவற்றுக்கே முன்னுரிமை.

அப்படியானால் குண்டான பெண்கள் அழகே இல்லை என்று அர்த்தமா? யார் சொன்னது அப்படி? அவர்களுக்கும் அழகு ராணிப் போட்டி இருக்கிறது. மேடை அதிர நடையழகு காட்டி, எடைப் பெருக்கம் காட்டி அசத்தலாம்.

'மிஸ் ஜம்போ ராணி'ப் போட்டி ஒன்றை சமீபத்தில் தாய்லாந்தில் நடத்தினார்கள்.

உலகெங்கும் இருந்து பெரிச பெரிசான பெண்கள் வந்து குழுமினார்கள். ஆனால் நடுவர்களை கவர்ந்தவர் படத்தில் உள்ள மலைராணிதான். இவரது எடை 118 கிலோ. வயது 23. வாழ்வது ஜப்பானில். பெயர் கயேன்சன். எந்தக் கடையில் அரிசி வாங்குகிறாரோ?

# புதுமையான ஆட்டம்



↙ இரண்டுபேர் விளையாடுவதுதான் 'செஸ்'. இப்போது ஒருவரே விளையாடவும் முடியும். இன்னொருவருக்கு பதிலாக கம்பியூட்டர் விளையாடும். அது கம்பியூட்டர் செஸ். (இன்னும் என்னென்ன விளையாட்டுக்களுக்கு கம்பியூட்டர் பங்காளியாகப் போகிறதோ?!)

படத்தில் இருப்பது புதுமையான 'செஸ்' விளையாட்டு. மூன்று பேர் பங்கு கொள்ளக்கூடிய வகையில் 'செஸ் போர்ட்' ஒன்றை கியா ராஸ்முசின் என்ற செஸ்வீரர் வடிவமைத்துள்ளார்.

சாதாரணமாக நினைக்காதீர்கள். பதின்மூன்று வருடம் முயன்றுதான் மூன்றுபேர் விளையாடக்கூடிய செஸ் விளையாட்டை கண்டுபிடித்துள்ளார். தற்போது இதற்கு பிரிட்டிஷ் விளையாட்டு அமைச்சு அங்கீகாரம் அளித்துள்ளது. விரைவில் உலக அங்கீகாரம் பெறக்கூடும்.

# கடற்கரை மனிதன்

↓ இந்தியாவில் கேரள மாநிலத்தில் திருவனந்தபுரத்தில் உள்ள கடற்கரையில் இக் காட்சியைக் காணலாம்.



யார் யாருக்கோ எல்லாம் சிலை வைக்கிறார்கள். ஆனால் இந்தச் சிலை காற்று வாங்க வருவோரை களிப்பூட்ட அமைக்கப்பட்டது. 'சிலை மனிதன்' என்று அழைக்கிறார்கள்.

இந்தச் சிலையில் உள்ள சிறப்பு அம்சம் யாதெனில்; மார்புப் பகுதியில் இருந்து இடுப்பு வரைக்கும் கிடையாது. ஆனாலும் எட்ட நின்று பார்க்கையில் முழுமையான சிலை போலத் தெரியும்.

# சுவையோ சுவை



↑ காய் கறிகள், மீன் வகைகளை நம் தெருக்களிலும் கூவி விற்பது வழக்கம் தானே. இதில் என்ன புதுமை என்று நினைக்கிறீர்களா? உற்றுப்பார்த்தால், உவ்வே...... என்று முகம் சுளிப்பீர்கள்.

அத்தனையும் தவளைகள். மலேசியாவில் தவளைக் கறி என்றாலே அங்குள்ளவர்களுக்கு நாவூறும் அத்தனை விருப்பம்.

தவளைக்கறிக் குழம்பு, தவளைச்சூப், தவளைப் பொரியல் என்று பல அயிட்டங்கள் உள்ளன. ஒரு தவளையின் விலை அதிகமில்லை 125 ரூபா. வயலில் பிடித்து தெருவில் விற்கிறார்கள். உணவு ரசனைகள் பலவிதம். நமக்கு வெறுப்பது அங்கே சுவைக்கிறது.

# உள்ளங்கை துப்பாக்கி



→ நம் நாட்டில் துப்பாக்கிகளுக்கு பஞ்சம் இல்லாமல் இருக்கலாம். ஆனால் படத்தில் உள்ள துப்பாக்கிக்கு நம்நாட்டில் பஞ்சம்தான். அதாகப்பட்டது இது முழுக்க முழுக்க தங்கத்தால் செய்யப்பட்ட துப்பாக்கி ரிவோல்வர்.

பாரிஸ் நகரில் கலைப்பொருட்களை ஏலம் போடும் கடையில் இதனை பணக்காரர் ஒருவர் ஏலத்தில் எடுத்தார். விலை அதிகமில்லை லேடிஸ் அன்ட் ஜெண்டில் மேன். ஆக 50 இலட்சம் ரூபாய்கள்தான்.

உள்ளங்கைக்குள் ஒளித்து வைக்கக்கூடிய மிகச் சின்ன இந்த ரிவோல்வர், 1475ம் ஆண்டு பாவனையில் இருந்ததாம். மன்னர் யாராவது தங்கப் பொன்னால் ஆன இதை பாவித்திருக்கலாம். பழையது என்பதாலும் இப்படியான சமாச்சாரங்களை வாங்க என்றே கொள்ளாத பணத்துடன் அலையும் ஆட்கள் இருப்பதாலும் இந்த விலை.

# வானில் இருந்து

↓ உலகனைத்துமுள்ள இஸ்லாமியர்களின் புனிதத் தலம் மெக்கா மாநகரம். அவர்களின் ஐம்பெரும் கடமைகளில் ஒன்று தங்கள் வாழ்நாளில் ஒரு தடவையாவது மக்காவைத் தரிசனம் செய்வது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மெக்கா நகரில் கி.பி. 570ம் ஆண்டளவில் பிறந்தார் என்று கூறப்படுகிறது. இங்குதான் அவருடைய போதனைகள் உலகமெங்கும் பரவியது.

இன்று சவுதி அரேபியா நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் மெக்கா நகரத்தின் மத்தியில்தான் இஸ்லாமியர்களின் புனிதமான காபா என்றழைக்கப்படும் அமைப்பு அமைந்திருக்கிறது.



இதனை மையமாகவைத்து பிரமாண்டமான மசூதி அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் இலட்சோப இலட்சம் இஸ்லாமியர்கள் உலகெங்கணுமிருந்து ஹஜ் கடமையை நிறைவேற்ற இங்கு வந்து கூடுகின்றனர்.

புனித காபாவைச் சுற்றி அமைக்கப்பட்டுள்ள வணக்கத்தலம் 240 மீட்டர் நீளமும் 180 மீட்டர் அகலமும் கொண்டது. ஒரே அளவிலான ஆயிரக்கணக்கில் ஆர்ச் வளைவுகளும் தூண்களும் கொண்ட மிக அழகான கட்டடமாக இந்த வணக்கத் தலம் விளங்குகிறது.

மெக்காவிலுள்ள வணக்கத்தலத்தையும், சுற்றியுள்ள ஏனைய நவீனமயமான கட்டடங்களையும் விமானத்திலிருந்து பார்க்கும் போது இவ்வாறு அற்புதமாக தோற்றமளிக்கும்.

திறவுகோல் ஒன்று தரையில் இருப்பது போல தெரிகிறதல்லவா!


# புது ரகம்

↓ வித்தியாசமான மோஸ்தரில் உள்ள மோட்டார் சைக்கிள் இது. நெமிசில் என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட தோட்டா மாதிரி வேகமாகச் செல்லக்கூடியது. மணிக்கு 360 கிலோ மீட்டர் வேகம்.

இதனை பிரிட்டிஷ் பொறியியலாளர்கள் வடிவமைத்துள்ளனர். 1500 குதிரைவலுக் கொண்ட என்ஜின் பொருத்தப்பட்டுள்ளது.

இங்கும் விரைவில் அறிமுகமாகக்கூடும். விலை, ஆக், ஒரு பதினைந்து இலட்சம். என்ன மூச்சையே காணோமா?!





படிப்பகம்

www.padippakam.com

திரையுலக மறுபக்கம் 55

# வாங்கிக் கட்டிய வில்லன் நடிகர்
## எம்.ஜி.ஆர். அறிமுகம் செய்த புதுமுகம்

தமிழ்த் திரைப்படங்களில் வில்லனாக மட்டுமல்லாமல் குணசித்திரப் பாத்திரங்களிலும் நடித்தவர் அவர். எம்.ஜி.ஆர்., சிவாஜி படங்களில் அதிகம் நடித்தார். பழம்பெரும் இந்திய மன்னர் ஒருவரது பெயர்தான் அவருக்கும்.

எம்.ஜி.ஆர். படம் ஒன்றில் கதாநாயகியை வில்லன் பலாத்காரம் செய்வது போன்ற காட்சி படமாக்கப்பட்டது.

கதாநாயகிமீது வில்லன் நடிகர் ஒரு கண் வைத்திருந்தார். கதாநாயகி அவரைக் கண்டு கொள்வதில்லை. பொதுவாக கதாநாயகிகள் தம்முடன் ஜோடியாக நடிக்கும் கதாநாயகர்களுடனும், இயக்குநர்கள் மற்றும் செல்வாக்குள்ள தயாரிப்பாளர்களுடனும் மட்டுமே அனுசரித்து நடப்பார்கள்.

வில்லன்களையோ, துணை நடிகர்களையோ இளக்காரமாகவே நோக்குவது வழக்கம். அதற்கு விதிவிலக்கான நடிகைகளும் இருந்தனர்.

குறிப்பிட்ட படத்தின் கதாநாயகி முன்னைய ரகம். வில்லன் நடிகரை இளப்பமாகவே நினைத்துக்கொண்டிருந்தார்.




பலாத்காரப்படுத்துவது போன்ற காட்சி எடுக்கப்படும் என்று கூறியதுமே வில்லன் நடிகருக்கு ஒரே குஷி.

காட்சியை படமாக்க கமரா ஓடத் தொடங்கியதும் நடிகர் தன் கைவரிசையைக் காட்ட ஆரம்பித்தார்.

நடிகையின் ஆடைகளை களைய முயற்சிப்பதுபோல காட்சி அமைந்திருந்தது. அதனால் நடிகரின் கைகள் நடிகையின் உடலில் ஆங்காங்கே தாராளமாக பரவின.

கமராவுக்கு முதுகை காண்பித்தபடி நடிகையை கட்டிலில் விழுத்தும் 'ஷொட்' எடுக்கப்பட்டபோது, நடிகர் துணிச்சலாக நடிகையின் மேல் கைவைத்து விட்டார். நடிகையை கட்டிலில் சாித்து அவர் மேல் அப்படியே விழுந்துவிட்டார்.

'கட்' என்று கத்தினார் இயக்குநர். சட்டென்று எழுந்து கொண்ட நடிகர், 'சாாி கால் தடுக்கிவிட்டது' என்று அப்பாவியாக முகத்தை வைத்தபடி கூறினார்.

### நடிகரின் தைரியம்

அவர் செய்ததெல்லாம் தற்செயல் அல்ல, திட்டமிட்டுத்தான் என்பது நடிகைக்கு மட்டும்தான் தெரியும். ஆனால் எதுவும் நடக்காததுபோல தொடர்ந்து நடித்தார் நடிகை.

அதன் பின்னரும் நடிகரின் கைகள் எல்லைமீறின. நடிகை கோபிக்கவில்லை என்பதால், அவரும் தன் செயலை விரும்புகிறார் என்று தப்பாக நினைத்துவிட்டார். வில்லன். தைரியத்தை அதிகமாகவே காட்டினார்.

காட்சி முழுவதும் படமாக்கி முடிந்ததும் நடிகை நேராக எம்.ஜி.ஆரை தேடிச் சென்றார்.

நடந்த சங்கதியை அழுதபடியே முறையிட்டார். எம்.ஜி.ஆருக்கு வந்ததே கோபம். வில்லன் நடிகரை தன்தோட்டத்திற்கு அழைத்து நாலு சாத்துச் சாத்தினார்.

அதன்பின்னர் சில காலம் தனது படங்களில் அவருக்கு வாய்ப்பே அளிக்காமல் தவிர்த்தார்.

உடனே சிவாஜியின் முகாமுக்கு சென்று சிவாஜியை புகழ ஆரம்பித்தார் வில்லன். ஆனாலும் சிவாஜி படங்களில் வில்லனுக்கு பெயர் கிடைப்பது அரிது. வாய்ப்புக்களும் அதிகம் இல்லை. பணக்கஷ்டம் ஏற்பட்டது.

எம்.ஜி.ஆரிடம் ஓடினார். தவறுக்கு மன்னிப்புக் கேட்டார். மறுபடி சந்தர்ப்பம் கொடுத்தார் எம்.ஜி.ஆர்.

### ராஜாவீட்டுப் பெண்

இராமநாதபுரம் ராஜாவின் குடும்பத்தைச் சேர்ந்த நளினி. சென்னை ஹோலி ஏஞ்சல்ஸ் கான்வெண்ட்டில் படித்துக் கொண்டிருந்தார். அப்போது கிருஷ்ணகுமார் என்கிற நாட்டிய ஆசிரியரிடம் 'கதக்' நடனம் கற்றுக் கொண்டார்.

நளினியின் பெரியம்மா கமலா கோட்னிஸ் பழையகால நடிகை. நளினியும் நடிகையாகவேண்டும் என்பது கமலா கோட்னிஸின் கனவு.

சென்னையில் ராமராவ் கலா மண்டபத்தில் நளினியின் நாட்டிய நிகழ்ச்சி நடந்தபோது பார்த்தசாரதி என்பவர் போட்டோ பிடித்தார். அவர் நடிகர் ஆர்.எஸ். மனோகரின் நாடகங்களுக்கும் 'போட்டோ' எடுப்பவர்.

நளினியின் போட்டோவை மனோகர் எம்.ஜி.ஆரிடம் காட்டினார். எம்.ஜி.ஆருக்கு பிடித்துவிட்டது. நேரில் அழைத்து வரச் சொன்னார்.

கமலா கோட்னிசும், மனோகரும் நளினியை எம்.ஜி.ஆரிடம் அழைத்துப் போனார்கள். தனது படங்களில் நடிக்க நளினியை ஒப்பந்தம் செய்து கொண்ட எம்.ஜி.ஆர். நளினியின் பெயரை லதா என்று மாற்றினார்.

லதா நடித்த முதல் படம் 'நேற்று இன்று நாளை' ஆனால் முதலில் வெளிவந்த படம் 'உலகம் சுற்றும் வாலிபன்'

## வெள்ளி நிலவே

'சின்னக் கவுண்டர்', 'எஜமான்', 'கிழக்குவாசல்' போன்ற படங்களை இயக்கியவர் ஆர்.வி. உதயகுமார். நடிக்கும் ஆசை வந்ததால் இவரது கவனம் சிதறியது.

இப்போது ஓரளவு புத்திவந்து சொந்தப்படம் தயாரித்து இயக்கி வருகிறார். 'வெள்ளி நிலாவே' என்று பெயர் சூட்டியுள்ளார். கன்னட நடிகர் ஸ்ரீகாந்த் கதாநாயகனாக நடிக்க, சௌந்தர்யா ஜோடியாக நடிக்கிறார்.

இப்படத்தில் கரண் என்ற பெயரில் புதிய இசையமைப்பாளர் அறிமுகமாகிறார்.

## மஹிமா வருகிறார்

'ஜீன்ஸ்' படத்தை அடுத்து விஜய் அமிர்தராஜ் சகோதரர்கள் தயாரிக்கும் தமிழ்ப் படத்திலும் பிரசாந்த்தான் ஹீரோ. இயக்கம் அகத்தியன்.

இப்படத்தில் கதாநாயகியாக நடிப்பவர் மஹிமா. இந்தியில் இருந்து இறக்குமதியாகிறார்.

'கல்நாயக்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய சுபாஸ்கை இயக்கத்தில் 'பர்தேஷ்' என்ற வெற்றிப் படத்தில் நடித்தவர் மஹிமா.

அவரைத்தான் விஜய் அமிர்தராஜ் சகோதரர்கள் தங்கள் பட நாயகியாக சிபாரிசு செய்திருக்கிறார்கள். தமிழ் நாட்டுக்காரர்களான விஜய் அமிர்தராஜ் சகோதரர்கள் ஹொலிவூட் படங்களை தயாரிப்பவர்கள்.

## பொண்ணு வீட்டுக்காரன்

பி.வாசு இயக்கத்தில் 'வால்டர் வெற்றிவேல்', 'ரிக்ஷாமாமா', 'உடன் பிறப்பு' ஆகிய படங்களில் நடித்தவர் சத்யராஜ்.

புதிய படம் ஒன்றில் மீண்டும் இணைகிறது சத்யராஜ்-பி.வாசு கூட்டணி. படத்திற்கு, 'பொண்ணு வீட்டுக்காரன்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

சத்யராஜுடன் முதன்முதலாக ஜோடி சேருகிறார் கீர்த்தி ரெட்டி. இவர்களுடன் ரகுவரன், ராதாரவி, கவுண்டமணி, பாத்திமா பாபு ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா.




## அப்பா சரத்

இது சினிமாக் காட்சியல்ல. நட்புக்காக படப்பிடிப்பில் இருந்த சரத்குமாரை அவரது மகள் வந்து சந்தித்தாராம். நக்மா காதல் விவகாரத்தால் குடும்பத்தை பிரிந்து இருக்கிறார் சரத் என்பது தெரிந்த சங்கதிதானே.

நீண்டநாட்களுக்குப் பின்னர் மகளைக் கண்டதில் நெகிழ்ந்துபோனார் சரத். தன் மகளை சிம்ரான், மனோரமா ஆகியோரிடம் அறிமுகம் செய்து வைத்தாராம்.

சனிப்பெயர்ச்சிக்கு முன்னரே சரத்தைவிட்டு நக்மா இடம்பெயர்ந்து விட்டார். அதனை அறிந்த பின்னரே தந்தையைக் காண மகள் வந்தாராம்.

ஆனால் சரத்தின் மனைவி மட்டும் மன்னிக்கத் தயாராக இல்லை.

## ரேகா மாமி

'கடலோரக் கவிதைகள்' படத்தின் மூலம் பிரபலமானவர் ரேகா. புன்னகை மன்னனில் கமலிடம் 'இச்' வாங்கியவர். பின்னர் துணை நடிகையாக தலைகாட்டினார். கல்யாணம் செய்து கொண்டு ஒதுங்கியும் இருந்தார்.

வீட்டில் இருக்கப் பிடிக்கவில்லை. மறுபடி நடிக்க வந்துவிட்டார். 'வெள்ளி நிலாவே' படத்தில் சௌந்தர்யாவுக்கு மாமியாராக நடிக்கிறார்.



கார்த்திக்-சுவாதி
படம்: சுந்தர பாண்டியன்

## ரகுமானின் பாரதிய

'வந்தே மாதரம்' பாடல் ஆல்பம் வெளியிட்ட ஏ.ஆர்.ரகுமான் அடுத்து பா பாடல்களை வைத்து புது ஆல்பம் ஒன்று தயாரிக்கப்போகிறார்.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா...' போன்ற பாடல்கள் அந்த ஆல்பத்தில் பெறவுள்ளன.

இன்றைய தமிழக தீவிரவாதம் பற்றி ரகுமான் என்ன நினைக்கிறார்?

"தீவிரவாதம் என்பது ஒரு கொடிய நோய். ஏமாற்றம் விரக்திதான் அதற்கு காரணமாக இருக்கிறது. குடும்பத்தில் யாருக்காகவது கெடுதல் நேர்ந்திருக்கும். ஏதாவது அநியாயம் நடந்திருக்கும். ஆனாலும் தீவிரவாதத்தை உடனே கட்டுப்படுத்தியாகணும்.

மதவெறியையும், ஜாதி வெறியையும் ஒழிக்கவேண்டும். என்னைக் கேட்டீங்கன்னா, அல்லாஹ்வை நம்புகிறவர்கள், அவன் முஸ்லிம்களை மட்டுமே படைக்க வில்லை. இந்துக்களையும்தான் படைத்தான், என்று அன்போடு நினைக்கணும். இதேமாதிரித்தான் மற்றவர்களும் நினைக்க வேண்டும்.

நம்மை மாதிரியே அவர்களும் கடவுளின் குழந்தைகள் என்கிற உணர்வு எல்லோருக்கும் வரவேண்டும்" என்கிறார் ரகுமான்.

## அஜித்-நெப்போலியன்

அஜித்குமார், நெப்போலியன் இருவரும் இணைந்து நடிக்கும் புதிய படம் 'எங்க குடும்பம் பெரிசு'. இப்படத்தை வி.சி.குகநாதன் இயக்க உள்ளார். தெலுங்கில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிய படம் ஒன்றின் தழுவல்தான் இது.

அஜித்துக்கு ஜோடி சங்கவி. நெப்போலியனுக்கு குஷ்பு. மற்றும் மணிவண்ணன், சார்லி, வையாபுரி, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.



## அம்மா ரேவதி

சமீபத்தில் சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பான 'பகல் நிலவு' படத்தில் முரளியின் ஜோடி ரேவதி. அதே ரேவதி இப்போது 'ரத்னா' படத்தில் அதே முரளிக்கு அம்மாவாக சில காட்சிகளில் தோன்றியுள்ளார்.

கே.எஸ். அதியமான் கதாநாயகனாக நடிக்கும் படத்திலும் அவரது தாயாராக நடிப்பவர் ரேவதிதான். அவரது கணவராக நடிப்பவர் ராஜ்கிரண்.


படிப்பகம்

www.padippakam.com

# மினி சினி

...ன்ஸ்' படத்தில் இடம்பெற்ற 'கண்ணோடு ...பதெல்லாம்...' என்ற பாடலைப் பாடியவர் ...ஸ்ரீ. இவர் பழம்பெரும் நடிகை டி.கே. ...ம்மாளின் பேத்தி.

...தலுக்கு மரியாதை' படம் அக்ஷய்கன்னா-ஜோதிகா ஜோடி நடிக்க இந்தியில் தயாராகி வருகிறது என்பது தெரியும். ...டத்திற்கு இந்தியில் என்ன பெயர் என்று தெரியுமா? 'டோலி ...கே ரக்னா.'

...ட்சகன்' படத்தை இயக்கியுள்ள பிரவீன் காந்தி அடுத்து ...கும் மூன்று படங்களில் ஒன்றில் முன்னாள் உலக அழகி ...ர்யா ராய் நடிக்கவுள்ளார். இவரது இயக்கத்தில் ஏற்கனவே ...னாள் பிரபஞ்ச அழகி சுஷ்மிதா சென் நடித்துள்ளார்.

...றுப்பு ரோஜா' படத்தை மிக பிர்மாண்டமாகத் தயாரித்து ...யைச் சுட்டுக்கொண்டவர் ஆபாவாணன். இவர் மறுபடியும் ...மான்றைத் தயாரிக்கவுள்ளார். இதில் விக்னேஷ் கதாநாயக... நடிக்கவுள்ளார்.

...அவள் வருவாளா' படத்தை இயக்கி வரும் ராஜ்கபூர், ...ந்து 'பொற்காலம்' படத்தைத் தயாரித்த ரோஜா கம்பைன்ஸ் ...னம் தயாரிக்கும் படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில் ...ந்திக்-பிரபுதேவா இணைந்து நடிக்கிறார்கள்.

* 'புதிர்' படத்திற்குப் பின் முரளி இரட்டை வேடத்தில் நடித்துவரும் படம் 'ரத்னா'. இப்படத்திற்கு ஊதியமாக கர்நாடக மாநிலத்தில் 'ரத்னா' படத்தை வெளியிடும் உரிமையை வாங்கியுள்ளார் முரளி.

* 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் ரோஜா மேக்கப் இல்லாமல் நடித்து வருகிறார். இப்படத்திற்கு முன் 'கடவுள்' படத்திலும் ரோஜா மேக்கப் இல்லாமல்தான் நடித்திருந்தார்.

* 'நண்பா நண்பா' மலையாள இயக்குநர் சிபிமலயில் இயக்கத்தில் பிரபு-ஜெயராம் நடிக்க ஒரு வாரம் படப்பிடிப்புக்கள் நடந்தன. இப்போது இப்படம் நிறுத்தப்பட்டு விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

* 'சன்னாசி' படத்தில் முதலில் நாயகியாக குஷ்பு நடிப்பதாக இருந்தது இப்போது இதில் நடிப்பவர் புதுமுகம் நோவிதா. இவர் யார் தெரியுமா? 'தொட்டா பெட்டா ரோட்டு...' பாடலுக்கு விஜய் உடன் நடனமாடிய கவிதாஸ்ரீயின் தங்கை.

* 'காதலா காதலா' படத்தைத் தொடர்ந்து பிரபுதேவா-ரம்பா ஜோடி தெலுங்குப் படமொன்றில் நடிக்கவுள்ளார்கள். இப்படம் தெலுங்கில் தயாராகி தமிழில் மொழிமாற்றப்படவுள்ளது.

## கவர்ச்சி பாலா

'ரோஜா படத்தில் நடித்த மதுபாலாவா இவர்?' என்று தலையைப் பிய்த்துக் கொள்ளும் விதமாக கவர்ச்சி நாயகியாக மாறிவிட்டார் மதுபாலா.

பொது நிகழ்ச்சிகளுக்கு செல்லும்போதுகூட கச்சிதமான கவர்ச்சி தெரியத்தக்க ஆடைகளையே அணிந்து செல்கிறார்.

எப்படித்தான் முயன்றாலும் இந்தியில் உச்சம் காண முடியவில்லை. அவரது காதலும் இலங்கை அரசின் தீர்வுப்பொதி மாதிரி இழுபட்டுப்போய்க் கொண்டிருக்கிறது.

## அனுபவம் தானே வரவேண்டும்

சுந்தரபாண்டியன் படத்தில் நடித்தபோது கார்த்திக்கை கவிழ்த்துவிட்டார் சுவாதி. ஆனாலும் கார்த்திக்குடன் மட்டும் நட்பாய் இருந்து என்ன பயன்?

அஜித்குமாரை காதலித்தபோது சுவாதிக்கு விபரம் புரியாத வயது. ஏமாந்துவிட்டார். இப்போது நிறையக் கற்றுவிட்டார்.

ராமராஜனுடன் அண்ணன் படத்தில் ஜோடி சுவாதிதான். ராமராஜன் எம்பியானதும் வீட்டுக்கு அழைத்தாராம் விருந்து கொடுக்க, விவஸ்தை கெட்ட ராமராஜன் மனைவி நளினியுடன் சென்றதால் விருந்து சோபிக்கவில்லை.

ராமராஜனுடன் நடிக்க அழைத்தபோது தயங்கியபடி சம்மதித்த சுவாதி, இப்போது மயங்கி நிற்கிறார்.

## ஹீராதாசன்

இந்த சினிமா உலகில் எது எப்போது நடக்கும் என்றே தெரியவில்லை. இனிமேல் ஒன்று சேர்வதே கிடையாது என்று பிரிந்த ஜோடி அஜித், ஹீரா. நீண்ட இடைவேளையின் பின்னர் மறுபடி ஒன்று சேர்ந்துள்ளது.

'காதல் மன்னன்' படத்தின் சுமாரான வெற்றியால் அஜித் சற்று நிமிர, ஹீரா வந்து, மரம் நீ, கொடி நான் என்று படர்ந்துவிட்டார்.

"சுந்தரபாண்டியன்' படத்தில் ஹீராவை அதிக கவர்ச்சியாக காண்பிக்க வேண்டாம்" என்று இயக்குநருக்கு கூறுமளவுக்கு, ஹீராதாசனாகிவிட்டார் அஜித்.

## மலையாளத்தில் நக்மா

'பாமா விஜயம்' என்ற ரொம்பப் பழைய தமிழ்ப் படத்தை மலையாளத்தில் எடுக்கிறார்கள். நக்மாதான் கதாநாயகி.

தமிழில் வாய்ப்பு வற்றியதால் மலையாளக் குளம் தேடிப் போனாரா? "அப்படி இல்லை, நல்ல பாத்திரம் கிடைத்தது போனேன். மலையாளத்தில் நான் நடிப்பது புதுமையல்ல. கன்னடத்திலும் 'குருபானராணி' என்னும் படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறேன்" என்கிறார் நக்மா.

## ரயில் பெட்டியில்

நடிகை சிம்ரானும், நடனத்தில் ராஜாவாகத் திகழும் இளம் நடன இயக்குநரும் படப்பிடிப்பில் கலந்து கொள்ள ஊட்டிக்குச் சென்றனர்.

அதில் என்ன விசேஷம் என்றால், ஒரே ரயில் பெட்டியில் இருவரும் சேர்ந்தே பயணம் செய்தனராம். நடன இயக்குநர் ஏற்கனவே மலர் பல கண்டவர். இப்போது சிம்ரானை மொய்த்திருக்கிறார்.


## முன் உதாரணம்

சத்யராஜ் முன் உதாரணமாக மாறியிருக்கிறார். அடுத்து நடிக்கும் படத்தின் ஊதியத்தை முழுதாக வாங்காமல், முற்பணம் மட்டுமே வாங்கியுள்ளார்.

படம் வெளியாகி இலாப நஷ்டத்தை கணக்கிட்டே ஊதியம் வாங்கமுடிவு செய்துள்ளார்.

'கதாநாயகர்களின் சம்பளம் அதிகம்' என்று தயாரிப்பாளர் புலம்புவதை அடுத்தே இந்த ஏற்பாடு.

ஏனைய நடிகர்களும் இதனை பின்பற்றுவார்களா தெரியவில்லை. சத்யராஜின் சம்பளம் இந்திய மதிப்பில் 40 இலட்சம்.



பாண்டியராஜன்-சுவலட்சுமி
படம்: கவலைப்படாதே சகோதரா



மதுபாலா

முகப்பில்
ரேஷ்மா
நக்மா
மோகன்
...ர்புள்ள காதலுக்கு'

...ார்
...தியார்
...டம்

## காதோடு சொல்லுகிறோம்

நான்கு எழுத்து 'ரன்' நடிகை அடிக்கடி தனது பிறந்தநாள், தனது நாய்க்கு பிறந்தநாள் என்றெல்லாம் விருந்து வைத்து அமர்க்களம் பண்ணுகிறார். விருந்தில் உற்சாக சமாச்சாரங்கள் ஏற்றிக்கொண்டு, பிரபலங்கள் தடுமாற, அவர்களை அணைத்துக் கொண்டுபோய் இருக்கைகளில் அமர்த்துவாராம் நடிகை. அதற்காகவே நன்றாக ஏறிவிட்டதுபோல சிலர் தள்ளாடுவார்களாம். எப்படியோ நடிகைக்கு பட வாய்ப்புக்கள் எக்கச்சக்கம்.

முகம் பார்க்காமலேயே காதலித்து முத்திரை பதித்த நடிகை புலம்பத் தொடங்கிவிட்டார். மூன்றெழுத்து இளம் நாயகன் அடிக்கடி தொலைபேசியில் தொல்லைப்படுத்துகிறாராம். காதல் வசனங்கள் சகியாமல் காதைப் பொத்துகிறார் நடிகை.

மகனுக்காக காதல் சின்னத்தின் பெயரில் படம் எடுக்கிறார் அப்பா. அப்படத்திற்காக அப்பா கண்டுபிடித்த நடிகை ரொம்ப விபரமானவராம். இயக்குநர், தயாரிப்பாளர் யாராவது அவரை ஒப்பந்தம் செய்யச் சென்றால், அரை குறை ஆடையுடன் தரிசனம் தருகிறாராம். எல்லாம் ஒரு கவிழ்ப்பு முயற்சிதான்.

'கௌ' நடிகையை அரசியலில் இழுத்துவிட்டவர் இந்தி நடிகரான சத்துருக்கன் சின்ஹா. நடிகையுடன் அவருக்கு இருந்த நட்புத்தான் இழுத்துவிடக் காரணம். நடிகைக்காக பல இலட்சங்களையும் இனாமாகக் கொடுத்தாராம் நடிகர். பணமும் ஆச்சு. விளம்பரமும் ஆச்சு. நடிகைக்கு சுக்கிர திசை.

## ரகுமான் இரசிகர்

அரவிந்தசாமியிடம் நடிக்க சம்மதம் வாங்கவேண்டுமானால் ஏ.ஆர்.ரகுமானின் இசை இருந்தால் போதும்.

'என் சுவாசக் காற்றே', 'என்ஜினியர்', 'முதன் முதலாக' ஆகிய மூன்று படங்களுக்கும் இசை, ஏ.ஆர்.ரகுமான்தான்.

அரவிந்தசாமி நடித்து பிரபலமான 'ரோஜா', 'பம்பாய்' ஆகிய படங்களுக்கும் இசையமைத்தவர் ஏ.ஆர்.ரகுமான்தான்.

## ரஜினி பறந்தார்

அடுத்தபட அறிவிப்பை வெளியிடாமல் அமெரிக்கா பறந்துவிட்டார் ரஜினி. வெறுத்துப்போய் இருக்கிறார்கள் இரசிகர்கள்.

ஆனாலும் அடுத்த படமான ராமகிருஷ்ணாவுக்கு கதையை தயார்படுத்திவிட்டுத்தான் போயிருக்கிறார் என்று தகவல்.

பாடசாலை பஸ் சாரதி ரஜினி. ஆசிரியை ஒருவர் அவரைக் காதலிக்கிறார். நகைச்சுவையாக கதை நகருமாம்.

## நன்றியுள்ள ஊர்மிளா

'ரங்கீலா' படத்தில் ராம்கோபால் வர்மாவின் கைவண்ணத்தால் முன்னுக்கு கொண்டுவரப்பட்டவர்தான் ஊர்மிளா.

ராம்கோபால் வர்மாவின் கட்டுப்பாட்டில் இருந்தபடியே, ஜாக்கிஷெராப் போன்ற நடிகர்களுடனும் ஜாலியாக இருந்தவர் ஊர்மிளா.

இப்போது ராம்கோபால் வர்மாவுடன் சின்ன சின்ன மனத்தாக்கங்கள். "இது சகஜம்தான், அதற்காக என் குருவை மறக்கமாட்டேன். என் இதயத்தில் முதலிடம் அவருக்குத்தான். அவர் எப்போது அழைத்தாலும் செல்லுவேன் நடிப்பதற்கு" என்கிறார் ஊர்மிளா.

தெலுங்கில் நாகார்ஜுனாவுடன் நட்பாகி, அமலாவிடம் ஊர்மிளா வாங்கிக் கட்டிக் கொண்டதாக கதை அடிபடுகிறது. "எல்லாம் கட்டுக்கதை. நாகார்ஜுனாவுடன் நட்பு இருப்பது மட்டும் உண்மை. அது கபடம் இல்லாத நட்பு. அமலாவிடம் அடிவாங்கும் அளவுக்கு நான் ஒன்றும் நோஞ்சான் கிடையாது" என்று சீறுகிறார்.

இந்தியில் முதலிடத்தை பிடிக்கக்கூடிய நடிகை, தன்னுடைய கட்டுப்பாடற்ற போக்கால் சந்தர்ப்பத்தை தவறவிட்டுள்ளார் என்று அனுதாபம் தெரிவிக்கிறது மும்பாய் சினிமா உலக வட்டாரம்.



ஏ.ஆர்.ரஹ்மான்



ஊர்மிளா

"மூன்று கனிச்சாறு ஒன்றாகப் பிழிந்து
மோகரசம் கொஞ்சம் அளவோடு கலந்து
போதை மதுவாக பொன்மேனி மலர்ந்து
பூவை வந்தாள் பெண்ணாகப் பிறந்து!

கோடை வசந்தங்கள் குளிர்காலம் என்று
ஓடும் பருவங்கள் கணநேரம் நின்று
காதல் கவிபாடும் அவள்மேனி கண்டு
காணக் கண் வேண்டும் ஒரு கோடி இன்று."

-கவியரசு கண்ணதாசன்-

www.padippakam.com

## வா! இதை வாசித்துவிட்டு

காதலுக்குத்தான்
கண் காது அறிவு எதுவுமில்லை
உனக்குத்தான் எல்லாமுண்டே
என்னையேன் காதலிக்கிறாய்?
••
எனக்குத் தெரியும்
காதல் விண்ணப்பங்கள்
தேடித்தரும் முகமல்ல இது;
எனவேதான் உன் ஈடுபாடு-
தூரத்து இசை நிகழ்ச்சியாய்
இனிக்கிறது!
••
எனக்கு
'அக்காள்' மாதிரி இருக்கிறாய்
சகிப்பேன்- பலர்
'அக்கா' என்றுதானே
ஆரம்பிக்கிறார்கள்!
••
அந்திவானம் போல்-நீ
அழகுதான்;
இறுதியில்- எனக்குள்
இருட்டன்றோ நிலவுகிறது!
••
பருவக்கோளாறு தரும்-
கனவில் வந்து கட்டிப்பிடிக்கவோ
என்னைப் பைத்தியமாக்கவோ
குறைந்தது-
வயிற்றுக்கும் தொண்டைக்கும்
உருவமில்லா
உருண்டையை உருட்டவோ
உன்னால் இயலவில்லை
மன்னிப்பேன்!
••
'பொருத்தம்' என்பது
காதலுக்கு இல்லைதான்;
காதலர்களுக்கு- அது
கட்டாயம் வேண்டும்!
••
எல்லோரும் காதலிக்கிறார்கள்
என்பதால்
நாமும் காதலிக்கலாம்;
ஆனால்-
எல்லோரும் தோற்கிறார்கள்
என்பதால்
நாமும் தோற்போம்!!

எஸ். பிரபா.

## யார் தீர்ப்பார் அவலம்?

துள்ளும் மீன்கள் துடிக்கும் சிறைக்குள்
முள்ளில் மலர்கள் எவ்வாறு சிரிக்கும்?
பள்ளிப் பிள்ளைகள் பயங்கரவாதியென
எள்ளி நகைக்கும் இயந்திரப் பறவைகள்!

கால் நடையாய் அடைபட்டுக் கிடக்கும்
நாள் தோறும் கைதுகள் சிறைகளை
நிறைக்கும்
நிலப் படத்திற்கும் மாதிரிகள் கிடைக்கும்
காலவோட்டத்தில் முகவரிகள் தொலையும்!

காணிகள் சொத்துக்கள் அடைவுக்குள்
முடங்கும்
காக்கிகள் பைகளும் மடிகளும் கனக்கும்
சாக்கு மூடைக்குள் தனிஉடல் கிடக்கும்
தூக்கிலே மாட்டிய உடல்களும்
கிடைக்கும்!

அடிப்பது போலவே அறிக்கைகள்
பறக்கும்!
அழுவது போலவே ஒப்பாரி கேட்கும்
அநியாய நாடகங்கள் தினம் அரங்கேறும்
காலத்திரை விழ காட்சிகள் மாறும்!

திரை மறைவில் துரோகங்கள்
தொடர்கதையாய் விரியும்!
விருந்துகள் தூள் கிளப்பும்
தலைமைகள் கொட்டமடிக்கும்!

இனமத பேதமில்லை
எமக்குள் பிரிவுமில்லை!
ஒத்தூதும் குரலோசை
உலகெங்கும் கேட்கும்!

வாக்களித்த மக்கள் தினம்
வதைபட்டு வாட
அதிகரிக்கும் அவலங்கள்
அகற்றிடுவார் யாரோ?

திருமதி ராஜேஸ்வரி கிருஷ்ணன்-
பூவரசன் குளம், வவுனியா.

## தீர்ப்புகள்....!

பெண்களால்
உருப்படியாய் என்னதான
செய்ய முடியும்..!

காலையில் எழுந்து
கடன்கள் முடித்து-வீடு
கழுவித் துடைத்து

ஆண்களை எழுப்பி
அடுப்படி வேலைகள்
அனைத்தும் செய்து

சமையல் முடித்து
தலைவாரி பூச்சூடி
பாடசாலை அனுப்பி
அலுவலகம் அனுப்பி!

மதிய உணவு
விரைவாய் செய்து
கடைவீதி போய்
காய் கறி வாங்கி

சிற்றுண்டி சமைத்து
புன்னகை தேனீருடன்
கணவனை வரவேற்று
காரியங்கள் பார்த்து

பாடம் சொல்லி
படுக்கை விரித்து
................!

"வேறென்ன செய்ய
முடியும் உன்னால்...?"
கேட்டேன மனைவிை

"கொடியிடையாள்
குழந்தைகளை மட்டுமல்ல
குண்டுகளையும் சுமப்பாள்"

சுபா வரன்- கண்டி.

## தேன் கிண்ணம்




எம்.ஜி.ஆர். கால்களில்
எத்தனையோ பேர்
விழ்ந்திருக்கிறார்கள். ஆனால்
எம்.ஜி.ஆர். யார் காலிலும்
விழுந்ததாக இப்
புகைப்படத்தை காணும்வரை
அறிந்ததில்லை அல்லவா?
எம்.ஜி.ஆரை ஆசிர்வதிப்பவர்
எம்.கே.ராதா. பழம்பெரும்
நடிகர். வாள் சண்டை
போடுவதில் சூரர்.
துணிவு, பணிவு, கனிவு
மூன்றும் எம்.ஜி.ஆரிடம்
இருந்ததால்தான், வெற்றிப்
படிகளில் அவரால் உச்சம்வரை
முன்னேற முடிந்தது.

## 'தண்டனை!'

சிறைச்சாலை கலத்தினுள்
அடைக்கப்பட்டு
ஒடுக்கப்பட்டுக் கிடப்பதுபோல்
நானும்-உன்
இதயக் கலத்தினுள்
அடைக்கப்பட்டு
ஒடுக்கப்பட்டிருக்கிறேன்!
★★
நான்
சந்தேகத்தின் பேரில்
கைது செய்யப்பட்டு
செல்லுக்குள் தள்ளப்பட்டவனல்ல
காதல் தீவிரத்தால்
உ(ன்)னால் இதயக்
கலத்தினுள்
ஆயுட் கைதியாக
அடைக்கப்பட்ட
'காதல் தீவிரவாதி'
★★
என்னை
அரசு சந்தேகப்படுவதுபோல்
உன்
தந்தையுமல்லவா...
சந்தேகப்படுகிறார்!
★★
இனிய-என்
சகோதர மொழிப் பெண்ணே!
உன்
தந்தையிடம் சொல்,
யுத்தப் போக்கை
கைவிட்டு
விரைவில்-ஒரு
தீர்வு தரும்படி!

சிவசேகரம் சிவகுமார்-
மட்டக்களப்பு.

## மரண பயம்

என் பாதையில்
அவர்கள் என்னைத்
தடுத்தபோது
என் வார்த்தைகள்
தடுமாறின!

சுதந்திரமாம்:
குரட்டையிலும்
என் மொழியை
உச்சரிக்காதபடி
எச்சரிக்கையுடன்!

இது
என் தாய் நாடு?
சந்தேகம் நிலைக்க
என் தேகம்
நடுங்கியது!

சுதந்திரமாய்
என்னைச் சூழ்ந்திருப்பது
மரண பயம்!

நெடுந்தீவு மகேஷ்.

## பேனா நண்பர்கள்



பெயர்:
பி. நிரஞ்சன்குமார்,
வயது: 25
முகவரி: 664, கண்டி வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு:
ரீ.வி., வானொலி.



பெயர்:
எச். பைசால்,
வயது: 19
முகவரி:
94/3, சின்னத்தம்பி வீதி,
கல்முனை-03.
பொழுது போக்கு:
பத்திரிகை,
பேனா நட்பு.



பெயர்:
லூயிஸ் மேரி மார்கிரட்,
வயது: 17
முகவரி:
கோபால புரம்,
10ம் கட்டை, நிலாவெளி.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்:
எம். மனாஸ்,
வயது: 23
முகவரி:
23, சுஸந்த மாவத்தை,
பாணந்துறை.
பொழுது போக்கு:
வானொலி,
பத்திரிகை.

## இந்த வாரம் உங்கள் பலன்

**(17.05.1998 தொடக்கம் 23.05.1998 வரை)**

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

இடபம் - சூரியன், செவ்வாய்.
சிம்மம் - இராகு.
கும்பம் - வியாழன். கேது.
மீனம் - வெள்ளி.
மேடம் - புதன். சனி.

சந்திரன்- மகரம், கும்பம், மீனம்,
ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மீனம்: — சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, மனக்கலக்கம். | பகல் | 11 மணி |
| **திங்கள்**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- அந்நியர் உதவி, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| **புதன்**- தொழில் சிறப்பு, உயர்ந்த நட்பு. | பகல் | 12 மணி |
| **வியாழன்**- மனக்குறை நீங்கும், பெரியோர் உதவி. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- அந்நியர் நட்பு, பணவரவு. | பகல் | 12 மணி |
| **சனி**- பெரியோர் சகாயம், மனமகிழ்ச்சி. | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5**

### மேடம்: — சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனமகிழ்ச்சி, இனசன நன்மை | பகல் | 12 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| **புதன்**- செய்தொழில் விருத்தி, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- காரியானுகூலம், பொருள்வரவு. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- பெரியோர் பகை, மனக்கவலை. | மு.ப. | 10 மணி |
| **சனி**- முயற்சித்தடை, கடன் படல். | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2**

### இடபம்: — சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| **புதன்**- இனசன நன்மை, பலவித பேறு. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- பணவரவு, செலவு மிகுதி. | பி.ப. | 2 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **சனி**- இனசன நன்மை, அந்நியர் நட்பு. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6**

### மிதுனம்: — சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பிரயாண மிகுதி, செலவதிகம். | பி.ப. | 2 மணி |
| **திங்கள்**- தொழில் சிறப்பு, பணக்கஷ்டம். | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- உயர்ந்த நிலை, பெரியோர் உதவி. | பி.ப. | 3 மணி |
| **புதன்**- மனக்கலக்கம், வெளியிட வாழ்க்கை. | பி.ப. | 1 மணி |
| **வியாழன்**- கௌரவ மிகுதி, புதிய முயற்சி. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- தொழில் கஷ்டம், மனக்குறையதிகம். | பகல் | 11 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, அந்நியர் பகை. | பி.ப. | 3 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4**

### கும்பம்: — சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- ஆடம்பர வாழ்க்கை, உயர்ந்த நிலை. | பகல் | 11 மணி |
| **திங்கள்**- வெளியிடப் பிரயாணம், மனக்கலக்கம். | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- தொழில் சிறப்பு, முயற்சி மேன்மை. | பகல் | 11 மணி |
| **புதன்**- கடன்சுமை நீங்கும், குடும்ப சுகம். | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- பலவித நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- உயர்ந்த எண்ணம், காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **சனி**- தொழில் விருத்தி, பணவரவு. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5**

### கர்க்கடகம்: — சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- பெரியோர் சகாயம், கௌரவமிகுதி. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, அந்நியர் உதவி. | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- குடும்பசுகம், மனக்குறை நீங்கும். | பகல் | 12 மணி |
| **வெள்ளி**- காரியானுகூலம், பணவரவு. | பகல் | 11 மணி |
| **சனி**- பெரியோர் உதவி, கௌரவ மிகுதி. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-5**

### மகரம்: — சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பொருள் கஷ்டம், மனக்கலக்கம் | பி.ப. | 1 மணி |
| **திங்கள்**- தொழில் மந்தம், பணச் செலவு. | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 1 மணி |
| **புதன்**- உறவினர் பகை, மனக்கவலை. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- உயர்ந்த நட்பு, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, கடன் தொல்லை. | பி.ப. | 1 மணி |
| **சனி**- இனசன நன்மை, பணவரவு. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1**

### சிம்மம்: — சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- அந்நியர் பகை, மனக்கவலை. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நட்பு. | பகல் | 11 மணி |
| **செவ்வாய்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 2 மணி |
| **புதன்**- தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் | 12 மணி |
| **வியாழன்**- பலவித பேறு, பொருள் வரவு. | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- பயனற்ற செயல், மனக்கலக்கம். | பி.ப. | 1 மணி |
| **சனி**- மனக்குறை நீங்கும், தேகசுக நன்மை. | மு.ப. | 10 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6**

### தனு: — சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, இனசன நன்மை. | பி.ப. | 2 மணி |
| **செவ்வாய்**- பணக்கஷ்டம், மனக்கவலை. | பகல் | 11 மணி |
| **புதன்**- பிரயாண மிகுதி, தேகசுகம் பாதிப்பு. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- தொழில் விருத்தி, உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| **சனி**- வெளியிட வாழ்க்கை, அந்நியர் நட்பு. | பகல் | 11 மணி |

**அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-7**

### விருட்சிகம்: — சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, உயர்ந்த நிலை. | மு.ப. | 10 மணி |
| **திங்கள்**- இனசன நன்மை, காரியானுகூலம். | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **புதன்**- வெளியிடப் பயணம், தொழில் விருத்தி. | பகல் | 11 மணி |
| **வியாழன்**- காரியசித்தி, மனமகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| **வெள்ளி**- தொழில் விருத்தி, பணவரவு. | பி.ப. | 2 மணி |
| **சனி**- முயற்சி பலிதம், இனசன நன்மை. | பகல் | 12 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-4**

### துலாம்: — சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் சுகம், குடும்ப மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| **திங்கள்**- தொழில் கஷ்டம், பணச் செலவு. | பி.ப. | 1 மணி |
| **செவ்வாய்**- முயற்சி பலிதம், இனசன நன்மை. | மு.ப. | 10 மணி |
| **புதன்**- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பி.ப. | 2 மணி |
| **வியாழன்**- வெளியிடப் பயணம், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **வெள்ளி**- பிரயாண மிகுதி, அந்நியர் நட்பு. | மு.ப. | 10 மணி |
| **சனி**- தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி. | பி.ப. | 1 மணி |

**அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-7**

### கன்னி: — சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| **ஞாயிறு**- பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| **திங்கள்**- தொழில் விருத்தி, காரியானுகூலம். | மு.ப. | 10 மணி |
| **செவ்வாய்**- வெளியிட வாழ்க்கை, பணக்கஷ்டம். | பி.ப. | 2 மணி |
| **புதன்**- அந்நியர் சகவாசம், துயர் நீங்கும். | மு.ப. | 10 மணி |
| **வியாழன்**- கௌரவ மிகுதி, தொழில் சிறப்பு. | பி.ப. | 1 மணி |
| **வெள்ளி**- பயனுள்ள செயல், செலவு மிகுதி. | பகல் | 11 மணி |
| **சனி**- இனசன மகிழ்ச்சி, ஆடம்பர வாழ்வு. | பி.ப. | 2 மணி |

**அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-1**



படிப்பகம்

www.padippakam.com

## முட்டையோ முட்டை

முட்டையைப் பயன்படுத்தும்போது, சில விஷயங்களைக் கவனிக்க வேண்டியது முக்கியம். நாம் பயன்படுத்தும் முட்டை எப்போதும் புதியதாக இருக்க வேண்டும்.

நாளாகிவிட்டால் ஆக முட்டை கெட்டுவிடும். ஆகவே நமக்குத் தேவையான அளவு அவ்வப்போது வாங்குவதே நல்லது. முட்டை பழையதாக இருந்தால், அதன் ஓடு பார்ப்பதற்கு மினுமினுப்பாக இருக்கும். முட்டை புதியதா, என்று அறிய ஒரு குழியான பாத்திரத்தில் நிறைய தண்ணீர் எடுத்து, முட்டையைப் போடவும். முட்டை புதிது என்றால் நாம் போட்ட மாதிரியே தண்ணீர் அடியில் அது படுத்திருக்கும். பழையது எனில் படுக்காமல் நிமிர்ந்து கொண்டிருக்கும். தண்ணீரில் மிதக்கும் முட்டை மிகவும் கெட்டுப்போனது. அம்மாதிரி முட்டையை நாம் பயன்படுத்தக் கூடாது.



முட்டையை உடைத்ததும் அதில் ஏதாவது கறுப்பு நிறம் இருந்தால் அது கெட்டுப் போனது என்று அர்த்தம்.

முட்டையைச் சமையல் செய்யும்போது, குறைந்த அளவில் அடுப்பு எரிய வேண்டும். அதிக தீயில் செய்தால் முட்டை, தோல் போல் கெட்டியாக இருக்கும். ஜீரணமாவதும் கடினமாக இருக்கும்.

முட்டைகளை உடைக்கும்போது, ஒவ்வொன்றையும் தனித்தனியாக உடைக்கவும். ஏனெனில் ஒன்று கெட்டுப்போனதாக இருந்தால் அதை மாத்திரம் தூக்கி எறியலாம்.

முட்டையை உடைத்துப் பயன்படுத்த வேண்டும். முட்டையை உடைத்து வாயில் நேரே ஊற்றிக் கொள்வது தவறான பழக்கம். ஏனெனில் முட்டை கெட்டதாக இருப்பின் வயிற்றுக் கோளாறுகள் உண்டாகும்.

முட்டை சமையல் செய்த பாத்திரங்களை முதலில் தண்ணீரில் ஊறப்போட்டுப் பின்னர் கழுவ வேண்டும்.

## தோற்றத்தை மாற்றலாம்

சிலர் தங்களது ஒல்லியான உடலை நினைத்து மனம் வருந்தியே மேலும் இளைத்து விடுவார்கள். ஒல்லியான நீங்கள் இனிக் கவலை கொள்ளத் தேவையில்லை. கீழே தரப்பட்டுள்ள அழகுக் குறிப்புக்களைப் பின்பற்றினால் நீங்கள் குண்டாகத் தோன்றலாம்.



* உங்களது உடலை அகலமாகக் காட்ட கிறீம் அல்லது மெல்லிய நிறமுள்ள ஆடைகளை அணியுங்கள்.
* தொளதொளப்பான ஆடைகளை அணிய வேண்டும்.
* தடிமனான ஆடைகள் அதிக பலன் தரும்.
* கவர்ச்சிகரமான, ஆர்ப்பாட்டமான பெரிய நகைகளை அணியுங்கள்.
* வானவில் நிறத்தில் ஆடை அணிந்தால் குண்டாகத் தெரிவீர்கள்.
* ஆடையில் இடம்பெறும் கோடுகள் இடமிருந்து வலமாகச் செல்லும்படி பார்த்துக்கொள்ள வேண்டும்.
* ஜீன்ஸ் அணிந்தால் குண்டாகத் தெரிவீர்கள்.
* குண்டாகத் தோன்ற விரும்புகிறவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளவற்றைத் தவிர்க்க வேண்டும்.
* தலை முதல் உள்ளங்கால்வரை ஒரே நிறத்தில் ஆடைகள்.
* ஆடையில் மேலிருந்து கீழாகக் கோடுகள் உள்ள ஆடைகள்.
* குதிக்கால் வைத்த பாதணிகள்.
* இறுக்கமான ஆடைகள்.
* உடலைவிட நீளமான ஆடைகள்.

## ஒப்பனை யோசனைகள்

* கண்களுக்கு மஸ்காரா போடும்போது, மேல்நோக்கிப் போட வேண்டும். ஒரே தடவையாகப் போட்டால் பார்ப்பதற்கு நன்றாக இருக்காது. கொஞ்சமாக எடுத்து இரண்டு மூன்று தடவையாக எடுத்துப்போட்டால்தான் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.
* புருவம் வரையும் பென்சிலை, சீவுவதற்கு முன் குளிர்சாதனப்பெட்டியில் வைத்துச் சீவினால் சீவுவதும் எளிது. முனையும் அழகாகச் சீராக வரும்.
* வெளியில் கிளம்பிக் கொண்டிருக்கிறீர்கள். தலையில் ஒரே எண்ணெய்ப் பிசுக்கு. தலைக்குக் குளிக்க நேரமில்லை. பிசுக்கைப் போக்க இதோ ஒரு எளியவழி: தலைமுடியில் டல்கம் பவுடரை நன்கு தெளியுங்கள். பின்னர் ஒரு சீப்பைக் கொண்டு நன்கு வாருங்கள். பின்னர் பாருங்கள் தலைமுடியை; தலைமுடி நல்ல மணத்தோடு புசுபுசுவென்று பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும். ஆனால் ஒன்று-இதை அடிக்கடி செய்யக் கூடாது; அவசரத்திற்கு மட்டும்தான்!
* பழைய சென்ட் போத்தல்களில் சிறிது தண்ணீரை விட்டு நன்கு குலுக்கி எடுத்துக் கொண்டால், கைக்குட்டைகளை மணக்கச் செய்யலாம்.

## கண்ணீரில் கரைந்த இரவுகள் 35

'எய்ட்ஸ்' நோயாளியான இளைஞன் ஒருவர் டயானாவுக்கு உருக்கமான கடிதம் எழுதியிருந்தான்.

எய்ட்ஸ் என்றதும் தன்னை தீண்டத்தகாதவனாக எல்லோரும் ஒதுக்கி வைப்பதாக வருந்தியிருந்தான்.

டயானாவுக்கு கண்கள் கலங்கிவிட்டன. உடனே பதில் எழுதினார்.

இலண்டனில் இயங்கும் எய்ட்ஸ் நோயாளிகள் விடுதிக்கு டயானா அந்த வாரம் செல்ல இருந்தார்.

குறிப்பிட்ட தினத்தன்று அங்கு வந்துசேருமாறு பதில் எழுதிவிட்டு அக் கடிதத்தை தன் கையாலேயே தபாலில் சேர்த்தார்.

பணியாட்களிடம் கொடுத்தால் தபாலில் சேர்க்கத் தாமதமாகலாம் என்று கருதியே அவ்வாறு செய்தார்.

அந்த இளைஞன் தனது தந்தையுடன் இலண்டன் வந்து திரும்புவதற்கான ஏற்பாடுகளையும் டயானாவே செய்திருந்தார்.

பிரிட்டிஷ் அரச குடும்ப வழக்கப்படி அக் கடிதம் அலுவலகத்தில் உள்ளவர்களிடம் சென்றிருந்தால், அதனை முக்கியமற்ற கடிதமாகக் கருதி அவர்களே பதில் எழுதிப் போட்டிருப்பார்கள்.

'இளவரசி உங்கள் கடிதத்தைக் கண்டார். உங்கள் கோரிக்கையை நிறைவேற்ற முடியாமைக்கு தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்.' என்று வழக்கம் போல, ஒரு அலுவலகப் பணியாளரின் கையொப்பமுடன் பதில் போய்ச் சேர்ந்திருக்கும்.

அந்த சம்பிரதாயம் பிடிக்காமல்தான் தனக்கு வரும் கடிதங்களை நேரடியாகப் பார்வையிட்டு, முக்கியமானவற்றுக்கு தன் கைபடவே பதில் எழுதுவதை வாடிக்கையாக்கிக் கொண்டார் டயானா.

குறிப்பிட்ட தினத்தன்று டயானாவை சந்தித்த அந்த இளைஞனும், தந்தையும் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தனர்.

இவ்வாறான பரிவான நடவடிக்கைகளே டயானாவுக்கு மக்களிடம் மரியாதையையும், அபிமானத்தையும் ஏற்படுத்தி வந்தன.

அரச குடும்பத்தாருக்கு இந்த உண்மை புரியவில்லை. அதனால் டயானாமீது மக்களுக்கு ஏற்பட்ட பிடிப்பு, அரச குடும்பத்தாருக்கு பெரும் புதிராக இருந்தது.

### வில்லியம்ஸ் காயம்

1991ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஒருநாள் இலண்டனில் உள்ளசான் லொறன்ஸோ உணவு விடுதியில் டயானா தன் நண்பிகளுடன் மதிய உணவு எடுத்துக்கொண்டிருந்தார்.

அப்போது டயானாவின் மெய்க்காப்பாளர் ஓடிவந்தார். அவர் சொன்ன தகவல் கேட்ட டயானா உணவு உண்பதையும் மறந்து எழுந்துவிட்டார்.

இளவரசர் வில்லியம்ஸ் லட்குறோவ் பாடசாலையில் கோல்ஃப் விளையாடிக் கொண்டிருந்தபோது, தலையில் அடிபட்டுவிட்டது. மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுள்ளனர் என்றே தகவல் வந்திருந்தது.

டயானா உடனடியாக மருத்துவமனைக்கு விரைந்தார். தன்னுடன் இருந்த நண்பிகளைக்கூட மறந்தவராக சென்றுவிட்டார்.

"தன் பிள்ளைகள்மீது டயானா எத்தனை பாசம் வைத்திருந்தார் என்பதை அன்று நேரிலேயே கண்டோம். அதற்கு முன் டயானா அவ்வாறு நிதானமிழந்து நாம் பார்த்ததே இல்லை." என நண்பிகள் கூறினார்கள்.

வில்லியம்மை பரிசோதித்த டாக்டர்கள் மத்திய இலண்டனில் உள்ள சிறுவர்களுக்கான மருத்துவமனைக்கு அவரைக் கொண்டு செல்லுமாறு டயானாவிடம் கூறினர்.

அம்பியூலன்சில் மகனுடன் பயணமான டயானா, வில்லியம்மையே கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

வில்லியம் அடிபட்ட செய்தி டயானாவுக்கு தெரிவிக்கப்பட்ட அதே நேரத்தில் சாள்ஸுக்கும் அறிவிக்கப்பட்டது.

ஆனால் சாள்ஸ் உடனே வந்து சேரவில்லை. மகன் வில்லியம் சோகமே வடிவாக தன் அருகே அமர்ந்திருந்த தாயாரை கண் விழித்துப் பார்த்தான்.

"அம்மா... பயப்படாதே, எனக்கு ஒன்றும் ஆகவில்லை" என்று சிரமப்பட்டு பேசினான்.

அந்தச் சின்ன வயதிலேயே தன் மகனுக்கு இருக்கும் முதிர்ச்சிகண்டு தாய் உள்ளம் பூரித்தது.

சிறுவர் மருத்துவமனையில் தலைச்சிறந்த மருத்துவர்கள் வில்லியமை பரிசோதித்தனர்.

மருத்துவர்களது முகபாவங்கள் டயானாவுக்கு அச்சத்தை ஏற்படுத்தின.



"தலையில் பலமாக அடிபட்டுள்ளது. சத்திர சிகிச்சை செய்ய வேண்டும். மூளைக்கும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கலாம். சத்திர சிகிச்சைக்குப் பின்னர் பக்க விளைவுகள் ஏற்படவும் வாய்ப்புக்கள் உள்ளன" என்று அதிர்ச்சி மேல் அதிர்ச்சியான தகவல்களை மருத்துவர்கள் கூறினர்.

டயானாவுக்கு தலை சுற்றியது. சுற்றிலும் மருத்துவர்கள் நிற்கின்றனர். அவரது பதிலை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

என்ன பதில் சொல்வது? யாரைக் கேட்டு சத்திர சிகிச்சைக்கு சம்மதித்தாய்? என்று சாள்ஸ் கேட்டால்... டயானா தவித்துப்போனார்.

சாள்ஸ்மீது முன்னெப்போதும் இல்லாதளவு வெறுப்பு டயானாவுக்கு ஏற்பட்டது. ஆத்திரம்தீர மனதுக்குள் திட்டித்தீர்த்தார்.

என் பிள்ளைக்கு சத்திர சிகிச்சை செய்ய நான் யாரைக் கேட்க வேண்டும்? என்ற நினைப்புடன், சத்திர சிகிச்சை செய்ய அனுமதித்தார் டயானா.

### சாள்ஸ் அலட்சியம்

மிகத் தாமதமாகவே சாள்ஸ் வந்து சேர்ந்தார். அவரை ஏறெடுத்தும் பார்க்கவில்லை டயானா.

மருத்துவர்கள் முன்பாகவே இருவரும் முகத்தைத் தூக்கிவைத்துக்கொண்டு, 'நீ யாரோ நான் யாரோ' என்பதுபோல நடந்து கொண்டனர்.

சத்திரசிகிச்சை 75 நிமிடங்கள் நடைபெற்றது. அதற்கிடையே சாள்ஸ் புறப்பட்டு விட்டார்.

'சிறந்த மருத்துவர்கள் இருக்கும்போது என்ன பயம், எனக்கு வேறு ஒரு நிகழ்ச்சி இருக்கிறது' என்று மருத்துவர்களிடம் கூறி விட்டு சென்றார்.

சத்திர சிகிச்சை முடிந்து கட்டிலில் கிடத்தப்பட்ட வில்லியமின் அருகிலேயே அமர்ந்திருந்தார் டயானா.

மூளையுடன் தொடர்புடைய மண்டலத்தில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டமையால், இரத்த அழுத்தம் அதிகரிக்கக் கூடும் என்று கருதி, 20 நிமிடத்துக்கு ஒருதடவை இரத்த அழுத்தம் சோதிக்கப்பட்டது.

இரவு முழுவதும் மகன் அருகிலேயே கண்விழித்திருந்தார் டயானா.

அன்றிரவே திட்டவட்டமாக முடிவு செய்துவிட்டார், "சாள்ஸுடன் இனி எக்காரணம் கொண்டும் சேர்ந்து வாழ்வதில்லை.

என் மகனுக்கு முடி தேவையில்லை. நானும் என் பிள்ளைகளும் இந்த போலித்தனமும், கபடமும் நிறைந்த அரச குடும்பத்தின் தடைகளில் இருந்தும், அரண்மனையில் இருந்தும் விடுபட்டாக வேண்டும்.

பாசமும், பரிவும், காட்டக்கூட சம்பிரதாயம், போலிக் கௌரவம் பார்க்கின்ற குடும்பத்தாருடன் வாழ்வதே பாவச் செயல்" என்றெல்லாம் அன்றிரவு எண்ணி எண்ணி வெதும்பினாராம் டயானா.

### பத்திரிகைச் செய்திகள்

மறுநாள் பத்திரிகைகளில் வில்லியம் விபத்துக்கு உள்ளான செய்தி மட்டுமன்றி, சாள்ஸ் தாமதமாகச் சென்ற தகவலும் வெளியாகி இருந்தது.

அரச குடும்ப விவகாரங்களை பத்திரிகைகள் எத்தனை கூர்மையாக அவதானிக்கின்றன என்பதை அச் செய்திகள் மூலம் அறிய முடிந்தது.

• பிரபலமான 'சண்' பத்திரிகை சாள்ஸ்சின் போக்கை கடுமையாக விமர்சித்திருந்தது.

## இரக்கமில்லாத தந்தை



'மகன் மரணப் படுக்கையில் கிடக்கும்போது, எந்தவொரு தகப்பனும் வேறு அலுவலுக்குச் செல்லமாட்டார், இத்தகைய தகப்பன் எத்தகையவர்?' என்று வினா எழுப்பியிருந்தது.

பத்திரிகைச் செய்திகள் டயானாவுக்கு ஓரளவு ஆறுதலாக இருந்தன. சாள்ஸ்சை விமர்சனம் பண்ணியது திருப்தியாக இருந்தது.

சாள்ஸும், அரச குடும்பத்தினரும் ஜீரணிக்க முடியாமல் பத்திரிகைகள்மீது கோபப்பட்டனர்.

பத்திரிகைச் செய்திகள் பற்றி சாள்ஸ் கூறும்போது டயானாவையே மறைமுகமாக குற்றம் சாட்டினார்.

"சிறு காயத்தை பெரிது படுத்திவிட்டார் டயானா" என்று கூறினார்.

சாள்ஸ் இப்படிக் கூறியதும் பெரும் சர்ச்சையைக் கிளப்பியது. 'இரக்கமே இல்லாத தந்தை' என்று மக்கள் திட்டித் தீர்த்தனர்.

### பொதுப்பணி

வில்லியம் பூரண குணம் அடைந்ததும் டயானா பொதுப் பணிகளில் தீவிரம் காட்டத் தொடங்கினார்.

நோயாளர்களுக்கு உதவும் வகையில் மார்லோ கொம்யூனிட்டி மருத்துவமனைக்கு செல்லத் தொடங்கினார்.

டயானா மருத்துவமனைக்கு செல்வதை அறிந்து மக்கள் திரண்டனர். மருத்துவமனையில் இருந்து வெளியேறும்போது பெரும் கூட்டம் திரண்டிருந்தது.

வண்டியில் ஏறி டயானா செல்லும்போது அவரைக் காண கூட்டம் முட்டி மோதியது. கூட்டத்தில் இடிபட்டு வயோதிபர் ஒருவர் கீழே விழுந்தார்.

டயானா அதனைக் கண்டுவிட்டார். வண்டியை நிறுத்தச் சொல்லி கீழே இறங்கினார்.

மெய்க்காப்பாளர்கள் தடுத்தும் கேளாமல் டயானா கீழே இறங்கினார்.

(அடுத்த வாரமும் வரும்)


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** DS

பெயர்:.........................

முகவரி:.........................

.........................

தொழில்:.........................

கையொப்பம்:.........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 23-05-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? பண்டாரவளை வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி இவர்தான்

**எம். பரமேஸ்வரி,**
**ஜஸ்லொபி எஸ்டேட், பண்டாரவளை.**

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு–அம்மன் ஜுவலஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி


தினமுரசு– அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 01

* முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.
* 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.
* பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.
* தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அறிவிக்குமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.




படிப்பகம்





எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்:
தெளிந்தநல் லறிவு வேண்டும்:

-சுப்பிரமணிய பாரதியார்.




## பாப்பா முரசு சிறுகதை

ஓர் ஊரில் ஒரு மந்தபுத்தியுள்ள சிறுவன் இருந்தான். தந்தை இல்லாத அவனை தாய்தான் வடை சுட்டு விற்று வளர்த்து வந்தாள்.

ஒரு நாள் சிறுவனிடம் தாய், வடை சுட்டு அதை விற்று வரும்படி அனுப்பினாள்.

"வடை வேண்டுமா? வடை வேண்டுமா?" என்று சிறுவன் கூவிக் கொண்டு சென்றான். அப்போது வேலி அருகில் இருந்த ஓணான் ஒன்று தலையை ஆட்டிக் கொண்டிருந்தது.

ஓணான் வடைதான் கேட்கிறது என்று நினைத்த சிறுவன், ஒவ்வொரு வடையாகப் போட்டான். அதை பக்கத்தில் இருந்த காகம், குருவிகள் எடுத்துச் சென்று விட்டன.

சிறுவன் ஓணானிடம் காசு கேட்டான். அது தலையை ஆட்டியது. ஓணான் தன்னை அருகே வரும்படி அழைக்கிறது என்று நினைத்த சிறுவன், அதற்குக் கிட்டச் சென்றான்.

ஓணான் ஓட ஆரம்பித்தது. சிறுவனும் அதன் பின்னால் ஓடினான். ஓணான் பக்கத்தில் இருந்த பாழ் கிணற்றில் குதித்துவிட்டது. சிறுவனும் கிணற்றில் குதித்தான். ஓணானைத் தேடிய சிறுவனின் கண்களில் பொற்காசுகள் நிரம்பிய செம்பு ஒன்று தட்டுப்பட்டது. அதை எடுத்து வந்து தாயாரிடம் கொடுத்தான்.

மகிழ்ந்து போன தாய்க்கு மறுநிமிடமே கலக்கம் பிடித்துக் கொண்டது. 'சிறுவன் வெளியில் சென்று எல்லாரிடமும் இதைச் சொல்லி விடுவானே இது அரசனுக்குத் தெரிந்தால் புதையலை மறைத்து வைத்த குற்றத்திற்குத் தண்டனை கிடைக்குமே' என்று பயந்தார்.

திடீரென்று சிறுவனின் தாய்க்கு ஒரு யோசனை தோன்றியது. சிறுவனைத் தூங்கச் செய்துவிட்டு சோறு சமைத்தார். சமைத்த சோற்றை வீட்டின் முற்றத்திலும் வீட்டின் பின்பக்கத்திலும் தூவி விட்டார்.

தூக்கத்திலிருந்த சிறுவனை எழுப்பி சோறு சாப்பிடச் சொன்னார். கைகழுவ வெளியே வந்த சிறவன் சோறு வெளியே சிந்தியிருப்பதைக் கண்டு, என்னவென்று தாயாரிடம் கேட்டான். அதற்கு தாய், சோற்று மழை பெய்ததாகக் கூற, சிறுவனும் அதை நம்பிவிட்டான்.

மறுநாள், அந்தச் சிறுவன் புதையல் கிடைத்த விபரத்தை எல்லாரிடமும் கூறி விட்டான். இந்தச் செய்தி அரசனின் காதுக்கு எட்டியது.

உடனே தாயும், மகனும் விசாரணைக்கு அழைத்து வரப்பட்டார்கள். அரசன், சிறுவனின் தாயிடம் புதையல் பற்றிக் கேட்க, 'சிறுவன் ஏதோ கனவில் கண்டுவிட்டுப் பிதற்றுகிறான்' என்று கூறினார்.

இதை நம்பாத அரசன், சிறுவனை அழைத்து,

"நீ புதையலை எடுத்தாயா?" என்று கேட்டான்.

"ஆம்!" என்றான் சிறுவன்.

"எப்போது எடுத்தாய்?" என்று மறுபடி கேட்டான் அரசன்.

"சோற்று மழை பெய்த அன்று!" என்று கூற, அரசனுக்குச் சிரிப்பு வந்து விட்டது. தாயார் சொன்னது சரிதான் என்று அவர்களை விட்டுவிட்டான்.

வீட்டிற்கு வந்த அந்த ஏழைத்தாய் தனது சமயோசித புத்தியால் புதையல் காப்பாற்றப் பட்டதை நினைத்து மகிழ்ந்தார்.

## அதிசயம் - ஆனால் உண்மை!

### குள்ள பைன் செடிகள்:



நியூஸிலாந்து நாட்டில் வளரும் பைன் செடிகள் மிகவும் சிறியவை. தலையணை அளவு அகலத்தில் இருக்கும் பைன் செடிக் கூட்டத்தில் நூற்றுக்கணக்கான செடிகள் இருக்கும்.

### உயரமான பீட்ரூட் செடி:



அமெரிக்காவிலுள்ள கலிஃபோர்னியா மாநிலத்தில் உள்ள ஜூலியன் கல் என்பவர் வளர்த்த பீட்ரூட் செடி 7 அடி உயரம் வரை வளர்ந்தது.

### கொடி முந்திரிகை:

சுவிற்ஸர்லாந்தில் உள்ள வெலாய்ஸ் நகரில் கற்சுவர்களின் இடையே உள்ள விரிசல்களில் கொடி முந்திரிகை மரங்கள் வளர்ந்து கனி கொடுக்கின்றன.



### ஸ்குவேர்ட்டிங் கக்கம்பர்:

இந்தச் செடியில் யாராவது உராய்ந்தால் உடனே தனது விதைகளையும், அரிப்பெடுக்கக்கூடிய திரவத்தையும் அவர்மீது தெளித்துவிடும்.



## வாரம் ஒரு நாடு

### காமரோஸ்

தலைநகர்- மொரோனி
பரப்பு- 1,862 சதுரகிலோமீட்டர்
மக்கள்தொகை- 7 இலட்சம்
மொழி- அரபி காமரான்
எழுத்தறிவு- 15%
சமயம்- இஸ்லாம், கிறிஸ்தவம்
நாணயம்- காமரியன் ஃபிராங்க்
தனிநபர் வருமானம்- 540 டொலர்.

**அமைவிடம்:**

மேற்சிந்தியக் கடலில் அமைந்துள்ளது. நான்கு தீவுகளடங்கிய தொகுதி.

**வரலாறு:**

ஃபிரான்ஸின் ஆதிக்கத்தில் இருந்து 1975ல் சுதந்திரம் பெற்றது. கொமரே, அஞ்சௌவான், மோஹேலி ஆகிய மூன்று




தீவுகள் சேர்ந்த காமரோஸ் ஒரு இஸ்லாமிய கூட்டுக் குடியரசாகும். நேரிடையாகத் தேர்ந்தெடுக்கப்படும் அதிபரே பிரதமரை நியமனம் செய்கிறார்.

**பொருளாதாரம்:**

விவசாயம் மற்றும் கால் நடை வளர்ப்பு முக்கிய தொழில். அடர்ந்த காடுகள் நிறைந்தது. வாசனைத் திரவியத் தொழிற்சாலைகள் மிகுந்துள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 23.05.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 245
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 243

**பரிசுக்குரியவர்:**
எம் சரீப்டீன்
சாஹிரா தேசிய கல்லூரி, புத்தளம்.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| எஸ். ஜேம்ஸ், பரியோவான் தமிழ் மகா வித்தியாலயம், இறக்குவானை. | எச். ஜவாஹிர், நஸ்ரியா மகா வித்தியாலயம், சிலாபம். |
| வி. நிர்மலா, கிரான்லி த. வித்தியாலயம், அக்கரப்பத்தனை. | ஏ. கிறிஸ்டினா, ஹெந்தளை, வத்தளை. |
| என். நிலாந்தன், இசிபத்தான மகா வித்தியாலயம், கொழும்பு-5. | வி. சசிதரன், குருமன்காடு, வவுனியா. |
| எம். நவாஸ், அல்-ஹிதாயா வித்தியாலயம், மீராவோடை. | நஸ்ரினா பேகம், முஸ்லிம் வித்தியாலயம், நாங்கல்ல. |
| எஸ். தாட்சாயினி, புனித சிசிலியா பெண்கள் பாடசாலை, மட்டக்களப்பு. | எஸ். அரவிந்தன், உவர்மலை விவேகானந்தா கல்லூரி, திருமலை. |

## வரிக்குதிரை [ZEBRA]

வரிக்குதிரை குதிரை இனத்தைச் சேர்ந்த விலங்காகும். இது ஆபிரிக்கா நாடுகளில் மட்டுமே காணப்படுகிறது. மற்ற நாடுகளில் இவற்றை விலங்குக் காட்சி சாலைகளிலும், சேர்க்கஸ்களிலும் வளர்க்கிறார்கள்.

தோலுக்காகவும், இறைச்சிக்காகவும் மக்கள் வரிக்குதிரைகளைப் பெருமளவில் கொன்று வருகிறார்கள். இது அருகி வரும் விலங்கினங்களில் ஒன்றாக இருந்து வருகிறது.

வரிக் குதிரையின் நிறம் வெண்மை. இதன் மேல் ஆழ்ந்த கறுப்பு அல்லது கடும் பழுப்பு நிறப் பட்டைகளுள்ளன. இப்பட்டைகள், அடி வயிறு, தொடை நீங்களாக, உடலின் மற்ற எல்லாப் பாகங்களிலும் காணப்படுகின்றன. இதன் உயரம் சுமார் 1 1/2 மீட்டர் இருக்கும். இதன் காதுகள், குதிரையின் காதுகளை விடச் சற்று நீளமானவை. சிறிய ஒலியைக் கூடக் கூர்மையாகக் கேட்கும் திறனுடையது.

வரிக்குதிரைகள் எப்போதும் சிறு கூட்டங்களாகவே வாழும். ஒவ்வொரு கூட்டத்திற்கும், வலிமை பொருந்திய ஓர் ஆண்வரிக் குதிரை தலைமை தாங்கி நடத்திச் செல்லும்.

வரிக்குதிரைகள் மிகுந்த வேகத்துடன்



ஓடும் இயல்புடையவை. சில வரிக்குதிரைகள் மணிக்கு 60-70 கிலோமீட்டர் வேகத்தில் ஓடக் கூடியவை. பார்வைக்கு முரட்டுத் தனமாகத் தோன்றினாலும், இவை பயந்த சுபாவமுடையவை. இவற்றின் ஆயுட்காலம் 15-18 ஆண்டுகவாகும்.

## மார்கோபோலோ

திரை கடலோடி திரவியம் தேடும் பண்பாடு பண்டு தொட்டு மனித சமுதாயத்திலிருந்து வரும் நிகழ்வாகும். உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் மனிதர்களை ஒன்றிணைத்து ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வைத்ததும் கடல் பயணங்கள் தான்.



ஐரோப்பாவுக்கும் தென்கிழக்காசிய நாடுகளுக்குமிடையில் நெருக்கமான உறவினை ஏற்படுத்திய பயணிகளுள் இத்தாலி நாட்டவரான மார்கோபோலோ பிரதானமானவர். கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக சீனாவுக்கு புதிய கடற் பாதைகளைக் கண்டு பிடித்தவர் மார்கோபோலோ. இவருடைய தந்தையாரான நிக்கலோ போலோவும் ஒரு கடலோடிதான். இவர் 1260 ம் ஆண்டில் மத்திய தரைக்கடலை ஒட்டிய நாடுகளில் வர்த்தகப் பயணங்களை மேற்கொண்டு வெற்றி கண்டதுடன், பெரும் பொருளையும் ஈட்டினார். நிக்கோலோவும் அவருடைய சகோதரரான மஃபியோ போலோவும் 1271ல் சீனாவுக்குச் சென்ற போது, 17 வயது இளைஞனான மார்கோபோலோவும் உடன் சென்றார். இவர்கள் சீனா சென்றடைய 3 ஆண்டுகளானது.

சீனாவை அப்போது குப்ளைகான் என்ற புகழ் வாய்ந்த மன்னன் ஆட்சி புரிந்தான். மார்கோபோலோவும் மன்னன் குப்ளைகானும் மிகவும் நெருக்கமான நண்பர்களானார்கள். சீனா நாட்டின் பெரும்பாலான பகுதிகளைச் சுற்றி பார்க்கும் வாய்ப்பும் மொங்கோலிய கலாசாரத்தை அறியும் பேறும் அவருக்குக் கிட்டியது. பாலஸ்தீனம், ஆர்மீனியா, ஈரான், ஈராக், திபெத், பர்மா ஆகிய நாடுகளில் பயணம் செய்ததுடன் இலங்கைக்கும் மார்கோபோலோ வந்திருந்தார்.

தமது 17வது வயதில் தான் பிறந்த இத்தாலியிலுள்ள வெனிஸ் நகரத்தை விட்டுச் சென்ற மார்கோபோலோ, தனது 41 வது வயதில் 1295ம் ஆண்டு திரும்பி வந்தார். அவர் நாடு திரும்பிய போது வெனிஸ் உள்நாட்டுப் போரில் சிக்கியிருந்தது. இதனால் நாடு திரும்பியதால் மகிழ்ச்சியடைய முடியாமல் போலோ கைதானார். 1324ம் ஆண்டு தனது 70 வது வயதில் காலமானார்.

## கனிமங்கள்

பூமியில் உள்ள கனிமங்கள் என்ன விகிதத்தில் உள்ளன என்று உங்களுக்குத் தெரியுமா?

அலுமினியம்- 0.4 சதவீதம்
கந்தகம்- 2.7 சதவீதம்
சிலிகான்- 13.0 சதவீதம்
கல்சியம் 1.2 சதவீதம்
நிக்கல்- 2.7 சதவீதம்
மக்னீஷியம்- 17.0 சதவீதம்
இரும்பு- 35.0 சதவீதம்

### 7 இலட்சம் தொன்

அவுஸ்திரேலிய நாட்டில் ஒவ்வொரு ஆண்டும், செம்மறியாடுகள் மூலம் 7 இலட்சம் தொன் கம்பளி எடுக்கப்படுகிறது.

### சோம்பேறிகள்

உலகில் உள்ள விலங்குகளில் மிகவும் சோம்பேறியான பத்து விலங்குகள் இவை:

1. கோலா கரடி
2. தேவாங்கு
3. ஆர்மடில்லோ
4. ஓபோசும்
5. லெமூர்
6. ஹம்ஸ்டெர்
7. அணில்
8. பூனை
9. பன்றி
10. எறும்பு தின்னி

### கறுப்பர்களின் நிலம்

கினியா என்ற பெயரில் 3 நாடுகள் ஆபிரிக்காவில் உள்ளன. கினியா என்பதற்கு 'கறுப்பர்களின் நிலம்' என்று அர்த்தம்.

### சுற்றுலா

உலகிலேயே தற்போது அதிக எண்ணிக்கையில் சுற்றுலாப் பயணிகள் செல்லும் பத்து நாடுகள் இதோ:

1. ஃபிரான்ஸ்
2. ஸ்பெயின்
3. அமெரிக்கா
4. இத்தாலி
5. சீனா
6. இங்கிலாந்து
7. ஹங்கேரி
8. மெக்ஸிக்கோ
9. போலந்து
10. ஒஸ்ரியா.

### நாய் உணவகம்

ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நாய்களுக்காக விசேட உணவகம் ஒன்று உள்ளது.

### அதிக உற்பத்தி

உலகளவில் உருளைக்கிழங்கு உற்பத்தியில் முன்னணியில் உள்ள முதல் பத்து நாடுகள் வருமாறு:

1. ரஷ்யா
2. போலந்து
3. அயர்லாந்து
4. சீனா
5. ஜெர்மனி
6. ருமேனியா
7. இங்கிலாந்து
8. இந்தியா
9. அமெரிக்கா
10. நெதர்லாந்து


படிப்பகம்

www.padippakam.com

திக் திக் திக்

# நந்தினி

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

"**வா**ங்க இன்ஸ்பெக்டர்..."

அறைக்குள் நுழைந்த இன்ஸ்பெக்டரை கைகுலுக்கி வரவேற்று உட்கார வைத்த டாக்டர் குணசீலன்- சொன்னார்.

"நீங்க வீரபத்ரனை இனிமே லாக்-அப்புக்கு கூட்டிக்கிட்டுப் போயிடலாம் இன்ஸ்பெக்டர். அவன் இப்போ நார்மலுக்கு வந்துட்டான்.... அவனைப் போய்ப் பார்த்தீங்களா...?"

"பார்த்துட்டுத்தான் வர்றேன் டாக்டர். இட்ஸ் ஏ மிராக்கிள். சண்டிமாடு மாதிரி அடம் புடிச்சிட்டிருந்தவன் அடிமாடு மாதிரி ஆயிட்டான்!"

குணசீலன் சிரித்தார். "எனக்கும் அதுதான் ஆச்சரியமாயிருக்கு இன்ஸ்பெக்டர்! நான் இன்னும் அவனுக்கு ட்ரீட்மெண்டே ஆரம்பிக்கலை. அவன் இந்த ஆஸ்பிடலுக்கு வந்ததுல ஒரேயொரு உபயோகம்தான். ஆக்ஸிடெண்ட்ல அடிபட்டுச் சாக இருந்த ஒரு பொண்ணுக்கு அவளுடைய ரேர் பிளட் க்ரூப் கிடைக்காமே திணறினப்ப- வீரபத்ரனோட ப்ளட் க்ரூப் அதிர்ஷ்டவசமா பொருந்துச்சு. அவனோட ப்ளட்டைக் குடுத்து அந்தப் பொண்ணைப் பொழைக்க வெச்சோம்..."

"இன்னிக்கு கண் ஆபரேஷன் நடந்ததா சொன்னாங்களே, அந்தப் பொண்ணா டாக்டர்...?"

"அதே பெண் தான் இன்ஸ்பெக்டர்... ஷி ஈஸ் ஏ லக்கி கேர்ள் இன்ஸ்பெக்டர்... ரேர் ப்ளட் க்ரூபுக்காகத் திணறிட்டிருந்தப்போ அவளுக்கு உடனடியா வீரபத்ரனோட ப்ளட் கிடைச்சது. ஆக்ஸிடெண்டில கண்ணாடி பீஸ் குத்தினதாலே கண்பார்வையை இழக்கிற ஸ்டேஜ்ல- ஒரு தூக்குத் தண்டனை கைதியோட கண்கள் கிடைச்சது, அந்தப் பெண்ணோட மிகப் பெரிய அதிஷ்டம்..."

"அந்தப் பொண்ணுக்கு பார்வை கிடைச்சுடுமா டாக்டர்?"

"நிச்சயமா கிடைச்சுடும்.. பண்ணின ஆப்ரேஷன் சக்ஸஸ். காயம் ஆறினதும் அடுத்த வாரம் கண்கட்டை அவுத்துடுவோம்..."

"க்ளாட் டு ஹியர் இட் டாக்டர்...!"

"நீங்க வீரபத்ரனை என்னிக்கு அழைச்சுட்டுப் போறீங்க...?"

"நீங்க சொன்னதுமே..!"

"நவ்...ஹி...ஈஸ்...நார்மல். நீங்க எப்ப வேணும்ன்னாலும் அவனை அழைச்சுட்டுப் போகலாம்."

"இன்னிக்கு சாயந்தரம் அழைச்சுட்டுப் போகட்டுமா டாக்டர்?"

"ம். செய்யுங்கள், இன்ஸ்பெக்டர்..."

இன்ஸ்பெக்டர் எழுந்தார். மறுபடியும் டாக்டரிடம் கை குலுக்கிவிட்டு வெளியே வந்தார். வீரபத்ரனைப் பற்றிய கவலை மனசுக்குள் மறைந்து போயிருக்க- வாசல் மரத்தடி நிழலில் நிறுத்தியிருந்த போலிஸ் ஜீப்பை நோக்கிப் போனார் இன்ஸ்பெக்டர்.

★★

**ந**ந்தினியின் கண்கட்டை அவிழ்ப்பதற்கு முந்தின தினம் இராத்திரி, ஆஸ்பத்திரிக்கு எதிரே இருந்த மணிக்கூண்டு கிளாக்கில் நேரம் 12-30ஐத் தொட்டிருந்தது.

கட்டிலில் படுத்திருந்த நந்தினிக்கு சட்டென்று விழிப்பு ஏற்பட்டது. பாண்டேஜ் துணியால் கட்டப்பட்டிருந்த கண்களில் ஆயிரமாயிரம் எறும்புகள் ஊர்வது போன்ற உணர்ச்சியில் கண்கட்டைத் தடவிவிட்டுக் கொண்டாள்.

ஆஸ்பத்திரி பூராவும் கனமான நிசப்தம்.

"சிஸ்டர்...!"

நந்தினி தனக்கு முன்புறமாய்க் கைகளை நீட்டி மெல்லிய குரலில் குரல் கொடுத்துப் பார்த்தாள். பதிலுக்கு நிசப்தம்.

"சிஸ்டர்..."

பதிலில்லை.

"என்னங்க...?"-கணவன் பாரியைக் கூப்பிட்டுப் பார்த்தாள். மௌனம்.

'எங்கே போனார்கள் எல்லோரும்?'


மெதுவாய் எழுந்து உட்கார்ந்தாள்.

கண்கட்டை அவிழ்த்துவிட்டுக் கண்களைத் தேய்த்துவிட்டுக் கொள்ள வேண்டும் போல் ஒரு அசுரத்தனமான நமைச்சல் கண்பிரதேசம் பூராவும் எழுந்தது.

தலையை உலுக்கிக் கொண்டாள்.

நமைச்சல் அதிகப்பட்டது.

"ஊஹூம்... இந்த நமைச்சலை என்னால் தாங்கிக்கொள்ள முடியாது!"- நினைத்துக் கொண்டவளின் கை தானாக தலையின் பின்பக்கமாய்ப் போய் முடிச்சைத் தொட்டது. அவசர அவசரமாய் அவிழ்த்தது. பாண்டேஜ் மருந்துப் பசையோடு கொஞ்சம் சிரமமாய்க் கழன்று கொள்ள- கண்களில் ஒட்டியிருந்த பஞ்சைப் பிரித்தாள்.



இமைகளை லேசாய் படபடத்தாள்.

அரையிருட்டில் இருந்த அறை மசமசப்போடு தெரிய ஆரம்பித்தது. சுவரோரமாய்ப் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தபடி அந்த நர்ஸ் லேசாக் வாய் பிரித்துத் தூங்கிக்கொண்டிருக்க- மெல்ல நடந்து வெளியே வந்தாள் நந்தினி.

நீளமான ஆஸ்பத்திரி வராந்தா- சோகையான ட்யூப்லைட் வெளிச்சத்தில் தெரிந்தது. வராந்தாவின் கோடியில் ஒரு நர்ஸ் வெள்ளைத் தீற்றலாய் நடந்து போனாள்.

ஏறக்குறைய பத்து நாட்களுக்குப் பின்னால் கண்ணில் தெரிகிற அந்த முதல் காட்சியில் லயித்துப்போன நந்தினி மெல்ல வராந்தாவில் நடந்து போனாள்.

கொஞ்சம் தூரம் நடந்து- அந்த வராந்தாவின் வளைவைத் தாண்டியதும்- இருட்டான அறை வந்தது. கூடவே உள்ளேயிருந்த பேச்சுக் குரல்கள்.

"சீ... நீயெல்லாம் ஒரு டாக்டரா...?"

பெண் குரல் சீறியது.

"நீ இதுக்கு ஒத்துக்கலைன்னா... உம் புருஷன் உனக்கு உயிரோடு கெடைக்க மாட்டான்...!"

"அடப்பாவி...! அவரை ஒண்ணும் பண்ணிடாதே...!"

"நீ மட்டும் தினசரி இராத்திரி இந்த நேரத்துக்கு... இந்த ரூமுக்கு வந்துடு.. ஒரே வாரத்துல உம் புருஷனைக் குணப்படுத்தி உன்கூட அனுப்பி வைக்கிறேன்...!"

"நான் ஒத்துக்கலைன்னா...?"

"உம் புருஷனுக்குப் பண்ண வேண்டிய ஆபரேஷனை ஏதாவது ஒரு காரணம் சொல்லித் தள்ளிப் போட்டுட்டுட்டே போவேன்..."

"நான் பெரிய டாக்டர்கிட்டே போய்ச் சொல்லுவேன்."

"தாராளமாப் போய்ச் சொல்லு... அவர் இந்தக் கேஸையெல்லாம் கவனிக்கமாட்டார். அவர் பண்ணின ஒரு தப்பு என் கையில இருக்கு.. அவர் என் வழிக்கு வரமாட்டார்..."

"தூ...நீயெல்லாம் ஒரு படிச்சவன்? பொம்பளை பொறுக்கி..."

"பொம்பளைப் பொறுக்கியாகவே இருந்துட்டுப் போறேன்... வர்றியா..? கொஞ்ச நேரமானா ஸ்டாஃப் நர்ஸ் ரவுண்ட்ஸ் வர ஆரம்பிச்சிடுவா..."

"எம் புருஷனை நீ சாகடிச்சாலும் பரவாயில்லை... அவருக்கு சொந்தமான இந்த உடம்பை- உன்னை மாதிரியான எச்சிலை நாய்ங்க தொட விட மாட்டேன்..."

படீரென கதவு திறக்கப்பட- அந்த இளம் பெண் வெளியே வந்து எதிர்ப்புறமாய் நடக்க ஆரம்பித்தாள்.

இருட்டில்- சுவரோரமாய் நின்றிருந்த நந்தினி- போகிற அந்தப் பெண்ணையே பார்த்தாள். அரை நிமிஷ நேரந்தான்.

பிறகு- விருட்டென்று-

திறந்திருந்த கதவு வழியாக அந்த அறைக்குள் நுழைந்தாள். சிகரெட் ஒன்றைப் பற்றவைத்தபடி- நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்த டாக்டர் பிரதாப், கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டு நிமிர்ந்தான்.

முகம் இருண்டான்.

உதட்டில் பொருத்தியிருந்த சிகரெட் ஸ்லோமோஷனில் உதிர்ந்தது.

"நந்தினி நீயா...?"- எழுந்தான்.

"உட்கார்டா!" என்றாள் நந்தினி. கண்கள் இரண்டும் அனல் துண்டுகள் மாதிரி ஜ்வலித்தன.

"ந...நந்தினி..! உன்னோட கண் கட்டை அவிழ்த்தது யாரு..?"

"நானே அவிழ்த்துட்டேன்டா!" என்றவள் கதவை மூடித் தாழிட்டாள். அறைக்குள் பார்வையைச் சுற்றும் முற்றும் விரட்டினாள். கண்கள் வேக வேகமாய் அலைந்தன.

நீளமான இரும்புச் சுத்தியல் ஒன்று சுவரோரமாய்க் கிடக்க- சட்டென்று குனிந்து அதை எடுத்துக் கொண்டாள் நந்தினி.

"அந்தப் பொண்ணுகிட்டே நீ என்ன கேட்டே...?"

பற்களைக் கடித்தபடி- சுத்தியலோடு ஆவேசமாய் அவனை நெருங்கினாள் நந்தினி.

விழிகள் நிலைகுத்திப்போன பிரதாப் மெதுவாய் எழுந்தான். தொண்டையில் ஆதாம் ஆப்பிள் பயத்தோடு 'க்ளக்' என்று ஏறி இறங்கியது.

"ந... நந்தினி..."

"ர்ர்ர்ரப்..."

பிரதாப்பின் நெற்றிப் பொட்டில் நந்தினியின் கையிலிருந்த சுத்தியல் செமத்தியாய் மொத்த- சத்தமே எழுப்பாமல் முன்பக்கமாய் இரண்டாய் மடிந்து விழுந்தான், பிரதாப். நந்தினி மறுபடியும் சுத்தியலை உயரத்தில்- உக்கிரமாய் பிரதாப்பின் பின்னந்தலையில் நச்சென்று இறக்கினாள்.

சுத்தியலின் நுனி தலைக்குள் இரண்டு செமீ. ஆழம் வரைக்கும் நுழைந்து பார்க்க, புது இரத்தம் ஒரு சின்ன பீச்சலாய் வெளிப்பட்டது.

"ராஸ்கல்! பேரமா பேசறே...?"- பல்லிடுக்கில் கர்ஜித்தவள்- சுத்தியலை உருவி தன் கை ரேகையைத் துடைத்து- சேலையின் தலைப்பால் பற்றி- மேஜையின் மேல் வைத்துவிட்டுத் திரும்பினாள்.

படபடப்பு அடங்கி தன் அறையை நோக்கி நடந்தாள் நந்தினி.

மனசுக்குள் ஆச்சரியம் எட்டிப் பார்த்தது.

'நானா இப்படி...?'

'என்னால் எப்படி ஒருத்தனை இவ்வளவு ஆத்திரமாய்த் தாக்க முடிந்தது?'

'அந்த டாக்டர் அந்தப் பெண்ணை மிரட்டினதும்- எனக்கு ஏன் அவ்வளவு கோபமும் உக்கிரமும் வந்தது?'

யோசித்துக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்தாள் நந்தினி. நர்ஸ் இன்னும் அதே பொஸிஷனில் உட்கார்ந்து தூங்கிக் கொண்டிருக்க- கட்டிலை நெருங்கினாள்.

அவிழ்த்து வைத்திருந்த- மருந்து தடவின பஞ்சும் பாண்டேஜ் கட்டும் தெரிய, அதை எடுத்து கைகள் நடுங்கக் கட்டிக் கொண்டாள்.

குப்பென்று இருட்டு கண்களில் வந்து உட்கார்ந்தது. தாகம் தொண்டையை வறட்ட- டீபாயின் மேலிருந்த வாட்டர் ஜக்கை எடுத்தாள்- ஜக்கின் மூடியைக் கழற்றும் போது மூடி எகிறிப் போய்க் கீழே விழ-

'ட்ட்டனீர்...'

நர்ஸ் பரக்கென விழித்துக் கொண்டாள்.

"என்னம்மா வேணும்...?"

எழுந்து வேகவேகமாய் நந்தினியை நோக்கி வந்தாள்.

"த...த...தண்ணி..."

"தண்ணி வேணும்ன்னா என்னை எழுப்பியிருக்கக் கூடாதாம்மா..."- நர்ஸ் அருகே வந்து நந்தினியின் கையிலிருந்த வாட்டர் ஜக்கை வாங்கி... கண்ணாடி டம்ளரில் தண்ணீரைக் கவிழ்த்துக் கொடுத்தாள்.

"சிஸ்டர்..."

"என்னம்மா?"

"என்னோட ஃபேமிலி மெம்பர்ஸ் யாராவது இருக்காங்களா...?"

"இல்லேம்மா... ஆஸ்பத்திரி ரூல்ஸ்படி பதினோரு மணிக்கு மேல யாரும் இங்கே இருக்கக்கூடாது. அவங்க வழக்கமாக படுத்துத் தூங்கற ஜெயில் சூப்ரிண்டென்ட் பாண்டுரங்கனோட வீட்டுக்குப் போயிருக்காங்க. காலையில வருவாங்க. ஏம்மா... ஏதாவது சொல்லணுமா...?"

"ஒண்ணுமில்லை; சும்மா கேட்டேன்!"

தண்ணீரைக் கொடுத்துவிட்டு நர்ஸ் நகர- நந்தினி ஒரு மொடக்கு தண்ணீரைக் குடித்துவிட்டுப் படுத்தாள்.

(தொடர்ந்து வரும்)

---

வல்வெட்டித்துறையில் இருந்து அமெரிக்காவரை கப்பலோட்டிய தமிழர்கள்.

# 'அன்ன பூரணி அம்மா'

## பயணம் - 02

**வ**ல்வெட்டித்துறை துறைமுகத்தில் இரண்டாம் மகா யுத்தத்துக்கு முன்பாக சுமார் அறுபது பெரிய பாய்மரக் கப்பல்கள் இயங்கிக் கொண்டிருந்தன.

மூவாயிரத்திலிருந்து பதினாறாயிரம் வரையான மூடைகள் ஏற்றக்கூடிய பெரும், பெரும் பாய்மரக் கப்பல்கள் திரைகடலோடி வாணிபம் செய்து கொண்டிருந்தன.

அந்தக் கப்பல்களில், தண்டையல்களாக இருந்தவர்கள், முழுக்க முழுக்க வல்வெட்டித்துறை வாசிகள்தான்!

கப்பல் செலுத்துவதில் நன்கு அனுபவம் பெற்று, மாலுமி சாஸ்திரத்தை கற்றுத் தெரிந்தவர்களையே தண்டையல்கள் என்று அழைத்தார்கள்!

கப்பலொன்றின் காப்டனுக்கு நிகரானவர்கள்.

தண்டையல் என்றால் எப்படி இருப்பார் என்பதை விளக்க ஓர் உதாரணம்:-

வல்வெட்டித்துறை தண்டையல்களில் ஒருகாலத்தில் கொடிகட்டிப் பறந்தவர்- நாராயணபிள்ளை தண்டையல்.

பர்மாக்காரனுக்குச் சொந்தமான பாய்மரக் கப்பலில், அவர் அப்போது தண்டையல்!

இந்தப் பெரிய கப்பலில், இருபத்தினான்கு பர்மாக்காரர்கள், இவருக்குக் கீழே கடலோடிகளாக வேலை செய்து கொண்டிருந்தார்கள்!

தமிழர் ஒருவர் மட்டும் உதவியாளராக இருந்தார்; கணக்குப் பார்ப்பதற்கு ஒரு சீன இளைஞர்!

மலாயா நாட்டின் மேற்குக் கரையிலுள்ள பினாங்குக்குக் கப்பலைச் செலுத்திக் கொண்டிருந்தார் நாராயணபிள்ளை!

பதினாறாவது மைல் தூரத்தில், ஒரு மணல் திட்டு- கப்பல் தரைதட்டி விட்டது! நங்கூரமிடப்பட்டது!

கப்பல் புறப்படுவது முதல், கடலோடிகளின் கடமைகள் வரையான சகல விஷயங்களும் தண்டையலின் உத்தரவின் பேரில் தான் நடக்கவேண்டும்.

திடீரென்று,

நங்கூரமிடப்பட்ட; தனது கப்பல் புறப்படுவதற்கு ஆயத்தமாக நங்கூரம் எடுக்கப்பட்ட விபரத்தைத் தெரிந்து கொண்டார்.

அவருக்குக் கீழ் பணியாற்றும் நேரடி ஊழியனான பர்மாக்காரன் ஒருவன் நங்கூரத்தை அகற்றியதை தெரிந்துகொண்டார்.

ஆத்திரம் பொத்தென்று வந்தது தண்டையலுக்கு!

அடுத்த வினாடி-

நங்கூரத்தை மீண்டும் போடும்படி உத்தரவு பிறப்பித்தார் தண்டையல்.

குறித்த பர்மாக்காரனை உடனடியாக கரையில் கொண்டு போய் விட்டுவரும்படி கட்டளையிட்டார்!

கப்பலினுள்ளே இருந்த சிறிய படகொன்று வெளியே எடுக்கப்பட்டுக் கடலில் மிதந்தது!

இருபத்திமூன்று பர்மாக்காரர்களும் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

◻◻

**க**ப்பல் கட்டுவதிலும், கப்பலோட்டுவதிலும் வல்வெட்டித்துறை மக்கள் சிறப்புமிக்கவர்கள் என்பதைப் பல வெளிநாடுகளே ஒப்புக்கொண்டுள்ளன.

இந்தியா,
பர்மா,
பாகிஸ்தான்,
மலேயா,
இந்தோனேஷியா,
அரேபியா


போன்ற நாடுகள் வல்வெட்டித்துறையின் கீர்த்தியை அங்கீகரித்துள்ளன.

ஆதாரபூர்வமாகவே இதனைக்குறிப்பிடுகிறேன்.

உலகத்தின் எந்த ஒரு நாட்டிலும் கட்டப்பட்ட கப்பலையும், 'லோயிட்ஸ்' உலக ஸ்தாபனத்தில் அப்போது பதிவு செய்யவேண்டும்.

வல்வெட்டித்துறையில் கட்டப்பட்ட கப்பல்கள் எல்லாமே அந்தந்தக் காலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

வல்வெட்டித்துறை ஒரு விசேஷ துறைமுகமாகவும் கப்பல் கட்டும் தளமாகவும்,



> வல்வெட்டித்துறையிலிருந்து அமெரிக்காவரை சென்ற 'அன்ன பூரணி அம்மா' கப்பல் பற்றிய சுவையான உண்மைக் கதை விறுவிறுப்பான விபரிப்பால் நம்மை அக்காலத்திற்கே இழுத்துச் செல்கிறார் ராஜகோபால்

கடலோடிகள் வசிப்பிடமாகவும், 'பே ஒஃப் பெங்கோல் பைலட்' என்ற நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நூலின் பிரதிகள் கொழும்பு 'ஷிப்பிங்' அலுவலகத்திலும், துறைமுக அதிகார சபை அலுவலகத்திலும், சுங்க இலாகாத் தலைமைப்பீடத்திலும் இன்னும் இருக்கின்றன.

●●

'**அ**த்திலாந்திக் கிங்!'

பன்னீராயிரம் தொன் எடையுள்ள கப்பல்.

ஆங்கிலேய வர்த்தக நிறுவனமொன்றுக்குச் சொந்தமான பெரிய கப்பல்.

சாமான்களை ஏற்றிக் கொண்டு வந்தபோது,

திடீரென்று,

திருகோணமலைத் துறைமுகத்துக்குச் சமீபமாக மூழ்கிவிட்டது.

மீட்கமுயன்ற அக்கப்பல் ஊழியர்களும், உரிமையாளரும் மனம் தளர்ந்தனர்!

அந்த நேரத்தில்-

கைகொடுத்து உதவினார், வல்வெட்டித்துறைக் கப்பல் உரிமையாளர் ஒருவர்.

கப்பல் கட்டும் கலையிலும், மாலுமி சாஸ்திரத்திலும், வான சாஸ்திரத்திலும், அறிவும் ஆற்றலும் பெற்ற வெங்கடாசலம் என்ற அவர், மூழ்கிய நிலையிலே கப்பலை விலை கொடுத்து வாங்கினார்!

எவர்தான் இப்படித்துணிந்து மூழ்கிய கப்பலை விலை கொடுத்து வாங்குவார்கள்?

ஆங்கிலேயனால் மீட்கமுடியாத-மூழ்கிய அந்தப் பென்னாம் பெரிய இராட்சதக் கப்பலை வல்வெட்டித்துறையான் மீட்டு மிதக்க விட்டு அலைகடலின் நடுவே அதனை மீண்டும் ஓடவிட்டான்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த சம்பவம்.

கப்பலோட்டிய வல்வெட்டித்துறைத் தமிழன் வீரத்துக்கு இப்படி எத்தனையோ 'சாம்பிள்'கள்!

●●

**வ**ல்வெட்டித்துறை!
இந்தப் பெயர் எப்படி வந்தது?
ரோமுக்கும்,
கிரேக்கத்துக்கும்,
எகிப்துக்கும்,

இந்தத்துறைமுகங்களிலிருந்து 'வெல்வெட்' என்ற பட்டு ஏற்றுமதி செய்யப்பட்ட காலத்துக்குப்பிறகு இப் பெயர் சூட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

## ஈ.கே. இராஜகோபால்

வேறு நாடுகளிலிருந்து கொண்டு வரப்பட்ட இந்த 'வெல்வெட்' வல்வெட்டித்துறைக் களஞ்சியங்களில் நிறைத்து வைக்கப்பட்டு ரோம், எகிப்து, கிரேக்கம் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டனவாம்.

தரமான 'வெல்வெட்'டை எடுத்துக் கொண்டு வருவதில் கைவரப் பெற்றவர்களாக விளங்கினார்கள்!

'வெல்வெட்'டுக்குப் பேர் போன இடமாக இவ்விடம் திகழ்ந்ததனால், 'வெல்வெட்டித்துறை' என அழைக்கப்பட்டு, நாளடைவில் வல்வெட்டித்துறை எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது.

ஏதோ ஓர் உண்மை இருக்கத்தான் செய்கிறது. (அடுத்த வாரமும்...)

www.padippakam.com




30

## பட்டுக்கோட்டை பிரபாகர்

> "எங்க பாட்டியும் அம்மாவும்; எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க ஆசைப்பட்டாங்க. நடிக்க வந்துட்டதால கல்யாண சுகத்தை நான் இழந்துட்டேன்"
> *நடிகை ஈஸ்வரி ராவ் 'வண்ணத்திரை 12-18', செப்- 97 இதழில்.....*

துர்க்கா சொன்ன திட்டத்தைக் கேட்டு மிகவும் அதிர்ந்து போயிருந்தார் ஈஸ்வர். அவள் சொன்னதை மூளை உள்வாங்கிக் கொள்ளவே சில வினாடிகள் பிடித்தன. அவளை உற்றுப் பார்த்தார்.

"என்னங்க அப்படிப் பார்க்கறீங்க?"

"நீ விளையாட்டாப் பேசறியா, இல்லை..."

"இல்லை. நான் பேசினது விளையாட்டு இல்லை. நூறு சதவீதம் சீரியஸாத்தான் சொன்னேன்" என்றாள் துர்க்கா.

"ரொம்ப பெரிய விஷயம் துர்க்கா!"

"ஆமாம்"

"அந்த அளவுக்கு நாம நடவடிக்கை எடுத்தாகணுமா?"

"வேற வழி இருந்தா நீங்க சொல்லுங்க"

ஈஸ்வர் கண்களை மூடி யோசித்தார். உதடுகள் பீடாவை அதிக ஓசையின்றி மென்று கொண்டிருந்தன.

அந்த அறையின் நீள அகலத்தை அளப்பவள் போல குறுக்கும் நெடுக்குமாக வேகமாக உலாவத் தொடங்கினாள் துர்க்கா.

"இப்படி செஞ்சா என்ன?"

"எப்படி?"

"மதுமிதா கிட்ட போட்ட கண்டிஷனை அந்த சந்திரசேகரை சந்தித்துப் போட்டா என்ன?"

"விளக்கமா சொல்லுங்க!"



"அஞ்சி வருஷம் சினிமால பிஸியாக நடிச்சிக் கொடுத்துட்டு, அப்புறம் யாரை வேணாலும் கல்யாணம் பண்ணிக்கோன்னு மதுமிதாகிட்டே நீ பேசினியே...."

"அதைத்தான் அவ வழக்கம் போல அலட்சியப்படுத்திட்டாளே....."

"அந்த சந்திரசேகரை சந்திக்கலாம். சந்திச்சு இதையே சொல்லலாம், அஞ்சி வருஷம் கழிச்சி பண்ணிக்கன்னு சொல்லலாம்."

"அவன் எதுக்கு உங்க நிபந்தனைக்கு ஒத்துக்கணும்."

"அது நிபந்தனையா பேசக்கூடாது. மிரட்டலாப் பேசணும் மீறி அவசரப்பட்டு கல்யாணம் பண்ணிக்கிட்டா விளைவு விபரீதமா இருக்கும். ஒரு நாள் கூட நீங்க நினைத்தபடி சந்தோஷமா வாழ முடியாதுன்னு சொல்லலாம்."

"எது வேணும்னாலும் சொல்லலாம். ஆனா அதுக்கெல்லாம் அவன் பயப்படணுமே..... உன் வேலையைப் பார்த்துக்கிட்டு போய்யான்னு அலட்சியப்படுத்திட்டா?"

"அப்படின்னா வேறு விதமா நிபந்தனை போடலாம். நீங்க ரெண்டு பேரும் உங்க விருப்பப்படி இரகசியமா கல்யாணம் செய்துக்குங்க. ஆனா இந்த விஷயம் அஞ்சி வருஷத்துக்கு வெளியே தெரிய வேணாம் இப்படி பேசினா?"

"நீங்க எப்படிப் பேசினாலும் ரெண்டு பேரும் ஒத்துவரமாட்டாங்க. அதனாலதான் நான் அப்படி ஒரு நல்ல யோசனை சொன்னேன்."

"அது நல்ல யோசனைதான்!"

"பின்னே ஏன் இழுக்கறீங்க?"

"பெரிய ரிஸ்க் இருக்கு!"

"நீங்களோ நானோ இதில நேரிடையா சம்பந்தப்பட்டாத்தான் ரிஸ்க் இருக்கு"

"பின்னே யாரை வைச்சு இதை..."

"மைக்கல் அல்ஃபோன்ஸா ஞாபகம் இருக்கா?"

"அவன் ஒரு அண்டர் கிரவுண்ட் தாதா ஆச்சே !"

"ஆமாம் நாலு வருஷம் முன்னாடி நம்ம படத்தில ஒரு ஃபைட் சீன்ல நிஜமான தாதாவை நடிக்க வைக்கணும்னு டைரக்டர் ஆசைப்பட்டாரு. மைக்கல் அல்ஃபோன்ஸாவை நடிக்க வெச்சாரு. அவனுக்கு நம்ம வீட்ல பிரமாதமா விருந்து கொடுத்தோம். என்கிட்ட ரொம்ப மரியாதையா நடந்துகிட்டான். எப்போ என்ன பிரச்சனையா இருந்தாலும் சொல்லுங்க மேடம்னு சொல்லியிருக்கான். படத்தில நடிச்சதுக்காக நான் கொடுத்த அம்பதாயிரத்தை கூட வேணாம்னு சொல்லிட்டான். இப்போ நமக்கு அவன்தான் உதவப் போறான். புறப்படுங்க."

"எங்கே?"

"அவனைப் பார்க்கத்தான். மகாபலி புரம் ரோட்ல ஒரு ஹோட்டல் ரூம்ல அவன் தங்கியிருக்கான். போய்ப் பேசிட்டு வந்திடலாம்."

இருவரும் காரில் புறப்பட்டார்கள்.

***

ஜவுளிக்கடையில் இரண்டு மணிநேரம் புரட்டிப்புரட்டி அலசிப் பார்த்து பதினைந்தாயிரம் ரூபாய்க்கு முகூர்த்தப்பட்டு புடவை எடுத்தான் சந்திரசேகர்.

பிறகு தனக்கு வேஷ்டி, அங்கவஸ்திரம் எடுத்தான். நகைக்கடைக்கு வந்து தாலி வாங்கினான். மேலும் போட்டு வைத்திருந்த லிஸ்ட்படி பொருட்களை வாங்கி காரில் நிறைத்துக் கொண்டு புறப்பட்டபோது காரில் வைத்திருந்த செல்ஃபோன் ஒலித்தது.

"ஹலோ சந்திரசேகர்!"

"நான்தான் மதுமிதா பேசறேன்"

"மது, நானே உனக்கு இப்ப ஃபோன் செய்யலாம்னு இருந்தேன். அதுக்குள்ளே நீயே செய்துட்டே"

"என்ன விஷயம் சொல்லுங்க"

"நீ சொல்ல வந்ததை முதல்ல சொல்லு"

"ம்கூம். முதல்ல நீங்க"

"சரி. பட்டுப் புடவை ரொம்ப பிரமாதமா அமைஞ்சிருக்கு மதுமிதா."

"அப்படியா? என்ன கலர்ல எடுத்தீங்க?"

"மெருன் கலர். பிரமாதமா இருக்கு ஜரிகை சாரி, மல்லிகைப்பூ எத்தனை முழம்னு போடலியே லிஸ்ட்டில. எவ்வளவு வாங்கட்டும். ரெண்டு பந்து வாங்கட்டுமா?"

"மைகாட்! ரெண்டு பந்தா? எதுக்கு? சந்துரு, நாளைக்கு நமக்கு நடக்கப் போறது வெறும் முகூர்த்தம்தான். சாந்தி முகூர்த்தம் இல்லை"

"சரி, அது எப்போ? அதைப்பத்தி யோசிக்கவே இல்லையே... அதுக்கு வேண்டிய சாமான் எல்லாம் இன்னும் லிஸ்ட் போடலியே."

"ஏய்...!"

"ரைட்டு! இப்ப நீ சொல்ல வந்ததைச் சொல்லு"

"இங்க ஒரு வார்டு பாய் கொஞ்சம் முன்னாடி நான் ஃபோன் பேசினப்ப கதவு பின்னாடி நின்னு ஒட்டுக் கேட்டுக்கிட்டிருந்தான். நான் அவனை கப்புன்னு புடிச்சிட்டேன். டாக்டருக்குத் தகவல் சொல்லி, அவர் வந்து அவனை நாலு சாத்து சாத்தி விசாரிச்சாரு. ஒரு அதிர்ச்சியான தகவல் சொன்னான் அவன்."

"என்ன?"

"என் ரூம்ல நான் யார்கிட்ட என்ன பேசறேன்னு அப்பப்ப கண்காணிச்சி தகவல் சொல்லணும்னு அவனுக்கு உத்தரவு போட்டது என் அம்மாவாம்."

"இதில் ஆச்சரியப்படறதுக்கு எதுவும் இல்லை. தனக்குத் தெரியாம நீ எதுவும் செய்துடக் கூடாதுன்னு உங்கம்மா முன்னெச்சரிக்கையோட உளவாளிகளைப் போட்டு வெச்சிருந்திருக்காங்க!"

"இந்த உளவாளி கடைசியா கொடுத்த தகவல் என்ன தெரியுமா?"

"என்ன?"

"இன்னைக்கு நீங்க வந்தது, பேசினது இதைப்பத்தி சொல்லியிருக்கான். நீங்க கோபமா இருந்தீங்களான்னு எங்கம்மா கேட்டிருக்காங்க. இல்லை, சிரிச்சி பேசிட்டு இருந்தாங்கன்னு சொல்லியிருக்கான். வர்ற ஞாயிற்றுக்கிழமை இதே ஆஸ்பத்திரில கல்யாணம் பண்ணிக்கப் போறாங்கன்னும் சொல்லியிருக்கான்."

"ஞாயிற்றுக்கிழமையா?"

"ஞாயிற்றுக்கிழமை டிஸ்சார்ஜ் ஆனதும், உங்க வீட்ல பத்திரிகைக்காரங்களை எல்லாம் மீட் பண்றதுன்னு பேசினோமே... அது அவனுக்கு கல்யாண நாளா பட்டிருக்கு"

"அதுவும் நல்லதுக்குத்தான். உங்கம்மா ஞாயிற்றுக்கிழமை கல்யாணம் நடக்காம இருக்கத்தான் யோசிப்பாங்க. ஆனால நாளைக்கு வெள்ளிக்கிழமை காலைலயே நமக்கு கல்யாணம் நடந்து முடிஞ்சிடும்"

"நான் அம்மாவை ஃபோன் பண்ணி வரச் சொன்னது, அழுத மாதிரி நடிச்சது எல்லாம் பொய்ன்னு அம்மா புரிஞ்சிக்கிட்டு என்மேல உலக மகா கோபத்தில இருப்பாங்க"

"உன்னைக் கல்யாணம் பண்ணிக்கப் போறதால என்மேலயும் அவங்க பயங்கரமான கோபத்தில இருப்பாங்க"

"ஆமாம். ஜாக்கிரதையா இருங்க!"

"ஐ டோண்ட் கேர்! செல்ஃபோன்ல இப்படி பேசிட்டே இருந்தா சிம கார்டுல பவர் தீர்ந்துடும். ஒரு மணிநேரம் கழிச்சு நா கூப்புடறேன். வெச்சிடவா?" என்றான் சந்திரசேகர்.

ஃபோன் வைத்து விட்டு காரை எடுத்தான்.

☆✣☆

அந்த ஹோட்டல், முக்கிய சாலையிலிருந்து விலகிச் சென்ற பக்கவாட்டு சாலையின் எல்லையில், ஒதுக்குப்புறமாக இருந்தது. ஹோட்டலைச் சுற்றிலும் சவுக்குத் தோப்புகள் இருந்தன. சொற்பமான கார்கள் இருந்தன.

மூன்றாவது மாடிக்கு வந்தார்கள் துர்க்காவும், ஈஸ்வரும்.

அறை எண் 307ன் முன் வந்து நின்று அழைப்பு மணியை அழுத்திக் காத்திருந்தார்கள்.

கதவைத் திறந்த மைக்கேல் அல்ஃபோன்ஸா வெற்று மார்புடன் இடுப்பில் ஷார்ட்ஸ் மட்டும் அணிந்து உதட்டில் தொங்கும் சிகரெட்டுடன் விஸ்கி வாடை வீச, "வாங்க மேடம்! என்ன இது? என்னைத் தேடி... ஃபோன் செஞ்சிருந்தா நானே ஓடி வந்திருப்பேனே... உள்ளே வாங்க!" என்றான்.

உள்ளே வந்து அமர்ந்தார்கள்.

குளிர்பானங்கள் வரவழைக்கப்பட்டன. தனக்கு பீர் வேண்டுமென்று கேட்டு வாங்கி அருந்தியபடி துர்க்கா, "மைக்கேல்! நீங்க எனக்கு மிகப்பெரிய உதவி செய்யணும்" என்றாள்.

"சொல்லுங்க மேடம். என்ன செய்யணும்?"

துர்க்கா சற்றே தயங்கி விட்டு, "என் பொண்ணு மதுமிதா என்னை விட்டு விலகப்போறா! தன் இஷ்டத்துக்கு ஒரு கல்யாணம் பண்ணிக்கப்போறா. இது நடக்கக் கூடாது!" என்றாள்.

"அதுக்கு?"

"நீங்க ஒரு கொலை செய்யணும். முடியுமா?" என்றாள் துர்க்கா.

(தொடரும்)

## யார் இவர்?



ஒரு துப்பாக்கி இவர் உயிரைக் குடித்தது. எனினும் உலகெங்கும் இவர் பெயர் நிலைத்தது.

இவரது வயதான தோற்றப் புகைப் படங்கள் அடிக்கடி நம் கண்ணில் படுவதுண்டு. உலகத் தலைவர்களில் ஒருவர்.

கறுப்பின மக்களுக்காகவும் இவர் பாடுபட்டிருக்கிறார். யார் என்று கண்டுபிடித்துவிட்டீர்களா? பதில் உதவி 18ம் பக்கம்.

## நில்-கவனி-முன்னேறு

நம்பிக்கையில்தான் நானும் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஆனால் என் நம்பிக்கை வரையறுக்கப்பட்டிருக்கிறது.

என் தகுதிக்கும், திறமைக்கும் உள்ளடங்கியே, அந்த நம்பிக்கை தன் ராஜ்ஜியத்தை நடத்துகிறது. தகுதி வளர்ந்ததால்தான், என் நம்பிக்கையும் வளர்கிறது.

சிறிய கொடிகளில் பெரிய பூசணிக்காய்கள் காய்ப்பது போல், சிலரது நம்பிக்கை அவர்களது சக்தியை விட அதிகமாக இழுக்கிறது.

பெரிய மாமரம் சிறிய கனிகளை ஈன்றெடுப்பது போல், எனது சக்தி, நம்பிக்கையைத் தாலாட்டுகிறது.

'இமயமலையின் மீது ஏறி விடலாம்,' என்று மனிதன் நம்புகிறான்; ஏற முயற்சிக்கிறான். கால்களில் வலுவில்லை.

கடைசியில் ஒரு குன்றின் மீது நின்று கொண்டு 'இதுதான் இமயம்' என்று சாதிக்கிறான்.

சொல்லித் திருத்த முடியாத வாதங்களை ஏற்றுக்கொண்டு விட்டால் தொல்லை இல்லை என்பதால், மற்றவர்களும் அதை ஒப்புக் கொள்ளுகிறார்கள்.

களிமண்ணால் சிலை செய்யும் சிற்பி, மண்ணாலேயே ஒரு மாளிகை கட்ட முயற்சிக்கிறான். 'காகிதக் கப்பலைக் கடலிலே விடுவேன்; அதை ஓட்டியும் காட்டுவேன்; கரையிலும் சேர்ப்பேன்,' என்பது ஒருவனின் வாதம்.

இரண்டு காலடிகள் ஒழுங்காக விழுந்து விட்டதாலேயே, 'கால்களில் எண்ணையைத் தடவிக் கொண்டு வழுக்குப் பாறைகளில் ஏறுவேன்' என்பது இன்னொருவரின் வாதம்!

ஒரு வெற்றி, பல வெற்றிகளைக் கனவு காண்கிறது. ஒரு சக்தி, பல சக்திகள் தனக்கிருப்பதாக நம்புகிறது. மத்தளத்தில், புல்லாங்குழல் வாசிக்க ஒரு முயற்சி. தாரையும், கொம்பும் ஸ ரி க ம ப த நி பாடுகின்றன. சில காலம் அவற்றையும் ஏற்றுக் கொள்கின்றன.

ஆனால், நம்பிக்கை அளவுக்கு மீறியதாக ஆகும்போது, அழிவும் கேலியும் எதிரே நிற்கின்றன. கோழிக் குஞ்சைப் பிடித்துவிட்ட தைரியத்தில், யானையையும் பிடிக்க ஒருவன் தயாராகிறான்.

கேரம்போர்டில் வெற்றி பெற்று விட்ட மயக்கத்தில் கிரிக்கெட் பந்தயத்திற்கு ஒருவன் தயாராகிறான். போலந்தையும், செக்கோஸ்லோவாகியாவையும் பிடித்த மயக்கத்தில் சோவியத் யூனியனுக்குள் நுழைந்த ஹிட்லரைப் போல்-

நீச்சல் குளத்தில் நீந்திப் பழகியவன், 'கடலிலும் குதித்து கரையேறுவேன்,' என்கிறான்.

நம்பிக்கை தரும் வெற்றிகளை விடத் தோல்விகள் அதிகம். அந்தத் தோல்விகளும், வெற்றிகளே என்பது ஒருவனின் நம்பிக்கை.

நம்பிக்கையின் அளவு எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை மனிதர்கள், மிருகங்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டும்.

தங்கள் சக்திக்கேற்பவே அவைகள் நம்பிக்கை வைக்கின்றன. நம்பிக்கை துளிர்விடும் போது அச்சம் அற்றுப்போகிறது. அச்சம் அற்றுப்போன இடத்தில், 'எது செய்தாலும் சரியே,' என்ற துணிவு வருகிறது.

அந்தத் துணிவு, தோல்வியை கூட்டி வருகிறது. தோல்வி, நம்பிக்கையை சாக அடிக்கிறது. மனித மனம், பழைய நிலைக்குத் திரும்புகிறது. மனிதனது கடைசி நம்பிக்கை, மயானம். இந்த நம்பிக்கை மட்டும் தோல்வியடைந்ததே இல்லை!



பாஞ்சாலியைத் துகிலுரித்தபோது கவுரவர்களுக்கிருந்த நம்பிக்கை பாரதப் போர் வரையிலும்தான் இருந்தது.

எதிரியின் சக்தி என்ன என்று தெரியும் வரை, ஒருவன் கொண்டிருக்கும் நம்பிக்கையை யார் தடுக்கமுடியும்? சமுதாயம் சிலரது நம்பிக்கைகளை வியப்போடும், திகைப்போடும் பார்க்கிறது. நான் யாருடைய நம்பிக்கையையும் வேடிக்கையாகப் பார்க்கிறேன்.

மரணத்தின் பின், மனித ஏடுகள் பரிசீலிக்கப்படும்போது, எது சரி, எது தவறு என்பது தெரியப் போகிறது. அதுவரை சர்க்கஸ்காரனுக்கு அடங்கும் புலியைப் போல், என் நம்பிக்கையை என் அளவுக்குள் வைத்திருக்க விரும்புகிறேன்.

நான் ஆங்கிலம் படித்ததில்லை; ஆனால், ஆங்கிலம் பேசுகிறேன். எனினும், நான் பேசுவதுதான் சரியான ஆங்கிலம் என்று எப்போதும் வாதித்ததில்லை. அப்படி வாதிடவும் முடியும். என்னளவுக்கு ஆங்கில அறிவு உள்ளவர்களை நம்ப வைக்கவும் முடியும்.

அதிகமான அறிவுள்ளவர்கள் எதிர்த்துப் பேசவரும் போதுதானே,என் ஆங்கில அறிவு எவ்வளவு என்பது ஊருக்குத் தெரியப் போகிறது. அதுவரை நான் வைத்திருக்கும் நம்பிக்கையை யார் அசைத்துவிட முடியும்?

ஒரு வகையில் நம்பிக்கை இல்லாமல் அழிவதைவிட நம்பிக்கை வைத்தே அழிவது நலம். அதன் மூலம் உண்மைகள் வெளியாகின்றன. அனுபவங்கள் சேகரிக்கப்படுகின்றன. தேவர்கள் சுருட்டுப் பிடிப்பதுதான் வானத்திலுள்ள நட்சத்திரங்கள், என்று சிறு வயதில் நான் நம்பியிருக்கிறேன்.

**கவியரசு கண்ணதாசன்**

கல்வி அறிவு வளர வளரத்தான் அது ஒரு மண்டலம் என்பது புரிந்தது. வயது வர வர சில நம்பிக்கைகள் மாறுகின்றன. வசதி வர வர சில நம்பிக்கைகள் உரமேறுகின்றன. எனக்கு நிறையத் தத்துவங்கள் எழுதத் தெரியும் என்ற நம்பிக்கையில்தான் எழுதுகிறேன்.

'எங்களுக்கு நிறைய விமர்சிக்கத் தெரியும்,' என்ற நம்பிக்கையோடு இதை நீங்கள் படித்துப் பாருங்கள்.

www.padippakam.com

# ஒரு காதல் காத்திருக்கச் சொல்கிறது

என் இதய-
சாம்ராஜ்ய இளவரசிக்கு!
வார்த்தைக்குப் போலி கௌரவம் கொடுத்து- வெறுமனே தங்க முலாம் பூசி உனை நான் வர்ணிக்க விரும்பவில்லை. ஏனெனில் வர்ணிப்புக்களுக்கு அப்பாற்பட்டவள், நீ! தவிர- உனை வர்ணிக்கக்கூடிய அளவுக்கு என் வார்த்தைகளுக்கு வலுவில்லை.

என்னைக் கவர்ந்த மென்மையான வெள்ளை மாதிரி... உனது அமைதியும் இயற்கையான அழகும், எவரையும் ஏறெடுத்துப் பார்க்காத அடக்கமும்தான் என்னை உன்பால் ஈர்த்து இழுத்துச் சென்றது- செல்கிறது. இந்த ஈர்ப்பு என் மரணம்வரை



எனை இழுத்துக்கொண்டேயிருக்கும் என்பது மட்டும் சத்தியம். என் காதல் மீதான சத்தியம்.

ஸப்னா!

நான் உனைக் காதலிப்பதாக உணர்கிறேன்.

மரத்தாலான சிலுவை வெறுமனே பாரமான சுமையாயிருக்கும். ஆனால்... இயேசு சுமந்த சிலுவை சுகமான சுமையாயிருக்கும் என்கிற மாதிரி...

ஒருபக்கக் காதல் பாரமான சுமையாயிருந்தும்-

அதை உனக்காகச் சுமக்கிறேன் என்கிறபோது, அது சுகமான சுமையாகி...

சத்தியமாய் எனக்குள் நான் உன்னைக் காதலிக்கிறேன் ஸப்னா.

பதிலை எதிர்பார்த்து விடைபெறும்,
-ஆஷிக்.

★

கண்டியை நோக்கிய பஸ் கடுகன்னாவை மேட்டில் மெல்லமாய் மூச்சு வாங்கி நகர்ந்துகொண்டிருந்தது.

பஸ்ஸினுள் இருந்த ஏகப்பட்ட நெரிசலில்... ஸப்னா அமர்ந்திருந்த அதே ஆசனத்தில் ஆஷிக்கும் அமர்ந்திருக்க, ரமீஸ் கம்பியைப் பிடித்துக்கொண்டு ஆஷிக் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தான்.

ஆஷிக், ஸப்னா பக்கத்தில் இடம்பிடிப்பதற்கு ரமீஸும் ஆஷிக்கும் பட்ட கஷ்டமும் தடுமாற்றமும் இருக்கிறதே... காதலின் கஷ்டங்களுக்கு ஆதாரமாய் இதுவொன்று போதும். அப்பாடா...

ரமீஸ் கண்காட்டினான் "கடிதத்தைக் கொடுடா...!"

ஆஷிக் பேச்சு வராமல் தவித்து- உடம்பில் வியர்த்து...

"ஸப்...னா!"

-அவள் பக்கத்துக் கண்ணாடி யன்னலால் வெளியே, கடுகன்னாவை மலைப் பகுதியின் இயற்கை அழகை இரசித்துக் கொண்டிருக்க- அல்லது அவ்வாறு பாசாங்கு செய்துகொண்டிருக்க,

மெல்லமாய்க் கேட்டதினால் அவளுக்கு ஒருவேளை கேட்கவில்லையோ? என நினைத்த ஆஷிக் பார்வையை உயர்த்தி ரமீஸை ஏறிட்டு... ரமீஸ் விழிகளாலேயே இவனை உற்சாகப்படுத்த, கொஞ்சம் சுருதி சேர்த்து அழைக்கிறான். "ஸப்னா!"

அந்த ஸப்னாவின் முகத்தில் எதுவித சலனமுமில்லாமல்... நிமிடங்கள் நகர்ந்து,

பொறுமையிழந்த ஆஷிக், ஏதோ மந்திரத்தினால் உந்தப்பட்டவன் போல், விசுக்கென அந்தக் கடிதத்தை எடுத்து அவளது மடிமீது வைக்க.. ஸப்னா விருட்டெனத் திரும்ப...

ஆஷிக் சொன்னான். "உன்னோட மவுனம் என்னை முள்ளாய்க் குத்துது ஸப்னா. சூறாவளி மாதிரி ஒரு புயலின் தாக்கத்தை எனக்குள் ஏற்படுத்துது. தயவுசெஞ்சு சும்மா மவுனமாயிருந்து என்னைக் கொல்லாதே. இதற்குப் பிறகும் என்னால பொறுத்திட்டிருக்க முடியாது. கட்டாயம் இந்தக் கடிதத்துக்கு எனக்குப் பதில் வேணும்...!"

ஸப்னா இதற்கும் எதுவும் பேசாமல்...

விரல் நொடிக்கும் பொழுதில்- தன்மடி மீதிருந்த கடிதத்தை எடுத்துப் புத்தகத்தினுள் சொருகிக்கொள்ள-

ஆஷிக்கும் ரமீஸும் கொஞ்சம் திருப்தியாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். இவர்களது மவுனச் சுமையோடு பஸ் பீலிமதலாவையையும் தாண்டி பேராதெனியை அண்மித்துக் கொண்டிருந்தது.

0-0-0

"அவனையும் அவனது காதலையும் பிடிக்கலேன்னா ஏன்டி கடிதத்தை எடுத்தே? தூக்கி எறிய வேண்டியதுதானே...?" போர்டிங் அறையில் வைத்து நண்பி ஜமீலா கேட்க, ஸ்பனா மவுனமாயிருந்தாள். கடிதத்தை சுக்கு இருநூறாகக் கிழித்தெறிந்தாள்.

நிரோஷா கேட்கிறாள்: "மனசுக்குள்ளயாவது நீ அவனை லவ் பண்ணலியா ஸப்னா? உன்னையறியாமலேயே உனக்கு அவன்மேல ஒரு இது... காதல் இருக்கணுமே...!"

"மண்ணாங்கட்டி... அவன் மூஞ்சியும் முகறக்கட்டையும்... எனக்குக் கொஞ்சமாகிலும் அவனையோ இல்ல அவனோட காதலையோ பிடிக்கல. ஐ ஹேட் ஹிம்...!" ஸப்னா கத்தினாள்.

"அப்போ... ஏன் கடிதத்தை எடுத்தே...? படிச்சே.. எங்களையும் படிக்க வெச்சே... ஏன்? உனக்குத்தான் பாய் ஃபிரண்ட் யாரு

**மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்**

மில்லையே... அவன் பர்சனாலிட்டிக்கும் ஒன்னும் குறைச்சலில்ல. பேசாம லவ் பண்ணிட்டுப் போயிடேன்...."

"எனக்கு வேறு வேலையில்ல...? முகத்தில் அடிச்சாப்போல சொல்ல முடியல. தவிர பஸ்ஸில ஏகப்பட்ட சனம். அதான் கடிதத்தை அப்படியே எடுத்துட்டு வந்திட்டேன். இப்போ எப்படியாவது அவன் என்னைப் பின்தொடர்றதை நிறுத்தணும். அநாகரிகமாக நாலு வார்த்தை காரமாகப் பேசிக் கண்டிக்கவும் முடியாது. டீசென்சியாயிருக்கணும்...!"

மூன்று பேரும் ஒன்றாய் யோசித்தார்கள். ரொம்ப நேரமாய்-

கடைசியில்-

"ஒரு ஐடியா வந்துடுச்சு!" என்று கத்திய ஜமீலாவை இருவரும் ஆர்வமாய்ப் பார்த்தார்கள்.

மறுநாள்! அந்த வயலோரப் புளிய மரத்தடியில்-

ஆஷிக்- ரமீஸ் இருவரும் ஒரே சிகரெட்டைப் பாதி பாதியாகப் புகைத்துக் கொண்டு, "ஸப்னாவோட பதில் எப்படா வரும்? எப்படிடா இருக்கும்... பாஸிட்டிவ்வா? நெகட்டிவ்வா?" என்று ஆயிரத்துப் பத்தொன்பதாவது முறையாக ஆஷிக் ரமீஸிடம் கேட்டுக்கொண்டிருந்த நேரம்...

ஜமீலா இவர்களைத் தேடி வந்தாள். மாலை மங்கிக்கொண்டிருந்தது.

"ஆஷிக்"

"ம்ஹும்"

"ஒன்னு சொன்னா கோபிக்க மாட்டீங்களே?"

"சொல்லுங்க!"

"ஸப்னாவை மறந்துடுங்க!"

ஆஷிக்கில் இடியிறங்கிப் போக, ரமீஸும் ஆடித்தான் போனான்.

வார்த்தை கரகரக்கக் கேட்டான் ஆஷிக் "ஏன் ஜமீலா?"

"ஸப்னா ஏற்கனவே ஒருத்தரை லவ் பண்ணிட்டிருக்காள். முறை மச்சான். அவரைத்தான் கட்டிக்கணும்னு அவங்க வீட்டுல பேசி முடிவெடுத்திருக்காங்களாம்..."

எதிர்பார்க்கவில்லை. ஆஷிக் துகள்துகளாய் நொறுங்கினான்.

கண்களில் இலேசாய்க் கண்ணீர் பூக்க "நிஜமா?"

"நான் ஏன் பொய் சொல்லணும் ஆஷிக்?"

"அப்போ... ஸப்னாவுக்கே என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லயிருந்துச்சுதானே... ஏன் மவுனமாயிருந்தாங்க...?"

"உங்க முகத்தைப் பார்த்து சொல்ல மனசு வரல்லையாம்..."

ஆஷிக் அப்படியே சிலையானான்.

உலகமே சூனியமாய்ச் சுழன்றது.

அழத் தோன்றியதை அடக்க முயன்று தோற்றான்.

ஜமீலா போய்விட்டபிறகு... ரமீஸ் மெல்லமாய்க் கேட்டான். "இப்ப என்னடா பண்றது?"

ஆஷிக் மவுனமாயிருக்க-

"மறந்துருடா... உலகத்தில வேற பொண்ணாயில்ல...? உருகிப்போற அளவுக்கு அவள் என்ன உச்சத்து அழகியா...? இல்லையே... அப்படியிருக்க அவளுக்கெல்லாம் ஏன் தாஜ்மஹால் கட்டணும்கிற அளவுக்கு யோசிக்கிறே...!" 'சீக்கி இந்தப் பழம் புளிக்கும்கிற' மாதிரி ரமீஸ் பேச...

ஆஷிக் மவுனமாயிருந்து பின் சொன்னான்.

"ஸப்னா ஒருத்தனை லவ் பண்றாங்கிறதை ஏனோ என்னால் ஏத்துக்க முடியல. அவள் மனசுல இதுவரை யாருமே இடம் பிடிக்கலைன்னுதான் என் உள்மனசுப் பட்சி சொல்லுது. எப்படியாவது அவள் மனசுல இடம் பிடிக்கணும்கிறப்போ என்காதல் இன்னும் தீவிரமாகிறதுடா.. இன்னும் இன்னும் நிறைய முயற்சி செய்யணும்... அவளோட காதலைப் பெறுகிறதுக்காக... என் கணிப்பு தப்பாகி அவள் வேறு ஒருத்தனை லவ் பண்றதாயிருந்தாக்கூட நான் அதற்குக் குறுக்கே நிற்கமாட்டேன், ஏன்னா... எனக்கு வாழ்த்த மட்டும்தான் தெரியும். வஞ்சிக்கத் தெரியாது..."

-என்றவன் நிறுத்தி மீண்டும் தொடர்ந்தான். உறுதியாக...

"நான் காத்திருக்கப் போறேன். அவளுக்காக- அவளோட காதலுக்காகக் காத்திருக்கப் போறேன். ஸப்னாவுக்கு அடுத்த ஒருத்தனோட கல்யாணமாகிறதாயிருந்தால்... அந்தக் கடைசி நிமிஷம் வரைக்கும்நான் காத்திருக்கப் போறேன்...!"

ரமீஸ் அவனை வியப்போடு பார்த்துக் கொண்டிருந்தான். நெடுநேரமாய்... இ

# அவள் தந்த பரிசு(?)

அவளைச் சந்திக்கக் கிடைக்குதோ இல்லையோ அவள் தந்த பரிசு மட்டும் என்றும் என் கண்களில் படாமல் விடுவதில்லை.

முன்பு அலுவலகத்தில் தினம் காணக் கிடைத்தது. அப்பொழுது சக தோழர், தோழிகள் என்னை கிண்டலடிக்கவும் ஆரம்பித்தனர். தினம் காலையில் "ஹலோ, லக்கி செவன் குட்மோனிங்!" என்று சொல்லும் அளவுக்கும் முன்னேறியது அவர்களது கிண்டல்.

என்ன செய்ய. எல்லாம் அவள் உத்தரவு. விளக்கம் கூறமுடியாத நிலை. அதனால் சிரித்துச் சமாளித்து வந்தேன்.

பின்பு சில வருடங்களில் வேறு அலுவலகம் செல்ல வேண்டி ஏற்பட்டதால், அதை வீட்டிலேயே வைத்துவிட்டேன். கிண்



டல்களில் விடுதலை கிடைத்தது.

"சொல்லாதே யாரும் கேட்டால்" என்று அவள் தந்த பரிசு அது. பல வருடங்கள் கழிந்தும் இதுவரை யாருக்கும் சொல்லாத இரகசியம். இங்கு சொல்கிறேன்.

பரிசை சொல்கிறேன். ஆனால் அவளை மட்டும் யாரென்று கேட்க வேண்டாம்!

இதுகூட அவளின் கண்களில் படலாம். ஆனாலும் என்மீது குற்றம் கூற மாட்டாள். இன்னும் பெருமைப்படுவாள். முடிந்தால் மடல்கூட வரைவாள்- 'தனது சொல்லை இன்னும் காப்பாற்றி வருகிறேனே' என்று.

வழமைபோல் அன்றும் டெலிஃபோனில் அழைத்தாள். "கீழே வரவேற்பறையில் நிற்கிறேன். இறங்கி வாருங்கள்!" என்றாள்.

சென்றேன். வழமையான சம்பாஷனைகள் முடிய சிறிய பை ஒன்றினால் சுற்றிய ஏதோ ஒன்றை நீட்டினாள். "என்ன?" என்றேன். "உங்களுக்காகத்தான் எடுத்து வந்தேன். உள்ளே சென்று பாருங்கள். ஆனால் ஒன்று, யாரும் கேட்டால் நான் தந்தது என்று சொல்ல வேண்டாம்!" என்றாள் மெதுவாக.

அடடா... என்னவாக இருக்கும்..? சாப்பிடுவதற்கு வீட்டில் செய்த எதையாவது எடுத்து வந்தாளோ?' மின்சார லிஃப்டுக்கும் காத்திராமல் படிநெடுகத் தாவினேன்.

சீட்டில் அமர்ந்தேன். பையைப் பிரித்தேன். உள்ளே ஒரு சிறிய பெட்டி. அதன் உறையைப் பிரித்தேன். பெட்டியைத் திறந்தேன்.

அட இதுவா? ம், அழகாகத் தான் இருக்கு. ஒன்று, இரண்டு, மூன்று... ஓ! ஏழு-

இது எதற்கு எனக்கு?

நினைத்தவாறு பெட்டியுடன் மறைவில் வைத்தேன்.

சில மணி நேரம் கடக்க அவளுக்கு டெலிஃபோன் பண்ணினேன். விளக்கம் கேட்க அவள் பதில்கள் உத்தரவுகளாக இருந்தன.

எனது மேசையில் வைக்கட்டாம். தனது கையால் செய்ததாம். ஏழு உண்டே ஏதாவது விளக்கம் உண்டோ?' என்றதற்கு 'மனதில் பட்டதை செய்தேன்; வேறு விஷேசம் இல்லை' என்றாள்.

**தம்பி தவம்**

ஏதோ அழகாகத்தான் உள்ளது. எனது மேசை மீது வைத்தேன். அவள் தந்த "லக்கி செவன்" டேபிள் மலர்ச் செண்டை.

அது- நகைக் கடையில் கை வளையல் வைத்திருக்கும் பெட்டி ஒன்றின் மேல் மூடி, அதனுடன் ஒட்டியபடி ஃபிலிம் ரோல் வெளிமூடி, அதன்மேல் ஏழு சிறிய அழகிய மலர்கள், சில இலைகள் போன்றவற்றால் உருவாக்கப்பட்டிருந்தது. அவளின் கை வண்ணம்தான்.

இதை ஏன் தந்தாள்? அதுதான் அவளே கூறி விட்டாளே, ஏதும் விஷேசம் இல்லை என்று. நம் நட்பின் சின்னம்தான்.

அது சரி, ஏன் "சொல்லாதே யாரும் கேட்டால்" என்றாளே....?

புரியவில்லை எனக்கும்-(புரிந்தவர்கள் கூறுங்கள்.)

# அனாமதேய கடிதம்

தொலைபேசியைக் காதில் வைக்கவே மறுமுனையில் பக்கத்து வீட்டு தணிகாசலத்தின் குரல் சவுதியிலிருந்து கேட்டது,

"அண்ணன் சவூதியில் இருந்து ரவி பேசுறேன், உமாவுடன் பேசலாமா?"

"ஒரு நிமிசம் பொறு தம்பி!" அரை நிமிடத்தில்,

"ஹலோ!" வென உமாவின் குரலோசை கேட்டது. உமா இன்றிரவு பதினொன்றுக்குப் புறப்படுறன். வேறென்ன நேரில் பேசுவம் தொடர்பு துண்டிக்கவே ரிசீவரை கீழே வைத்தான்.

'நான்கு வருடங்களாக இங்கிருந்து எவ்வளவு பணத்தைச் சம்பாதித்தாலும் கூட மனசுக்கு நிம்மதியில்லையே. அப்பா செத்ததுக்குப் போக முடியல்ல. அம்மாவுக்குச் சுகயீனம், மனைவியின் போலிப் பாசம், சீ..... என்ன வாழ்க்கை,' வாழ்க்கையே வெறுத்துவிட்டது ரவிக்கு. விடுமுறைக்காக மூன்று மாத லீவை கொம்பனி ரவிக்கு கொடுத்திருந்தது. முன்கூட்டியே மனைவிக்கு பல கடிதங்களில் நாட்டுக்கு வரவிருக்கும் கதையினைப் பற்றி எழுதியிருந்தான் ரவி. நாட்டுக்கு ரவி திரும்புவதனை விரும்பாதவள் போல் மனைவியின் கடிதங்கள் பதிலளித்தன. நாட்டின் நிலை சீராகவில்லையே, அங்கு குண்டு வெடித்தது, இங்கு மோதல், செலவுக்கும் காசு இல்லை, கடன் வாங்கி கரண்ட் காசு கட்டினேன். புடவைக்கடைக்கு காசு கொடுக்கவேணும்......, நீண்டு இப்படி வரும் அவளது கடிதங்கள்.

சவூதிக்குப் போனதில் இருந்து பல அனாமதேயக் கடிதங்கள் ரவியின் கரங்களுக்குச் சேர்ந்திருந்தன. உனது மனைவி வேறு ஆடவனுடன் சல்லாபம், படமாளிகையில் இருவரையும் கண்டேன்.... உமாவை அவளது கல்லூரி மாணவன் ரமேஸுடன் மோட்டார் சைக்கிளில் போகக் கண்டேன். பஸ் ஸ்டான்டில் ஒருவனுடன் உனது உமாவைப் பார்த்தேன்....' இப்படியான கடிதங்களைக் கண்டதும் 'இடியேறு கேட்ட நாகம்'



போன்று மாறி இறுதியில் மரணித்த மனித ஜடமாகி விடுவான் ரவி. உறவுகள் எதுவுமின்றி உழைக்கவென இங்கு வந்தவனுக்கு மனைவியைப் பற்றிய கதைகள் உயிருடன் தீ மூட்டுவதாக இருக்கும் காதலித்து பெற்றோருக்குத் தெரியாமல் என்னிடம் ஓடி வந்தவள் உமா. நான்கு பேர் எங்களைப் பார்த்து பல்லிளிக்கக் கூடாதென்பதால் கடன்பட்டு சவூதிக்கு உழைக்க வந்தவன் ரவி. 'கடன் கட்டி முடிக்கவில்லை. இப்படியான சோதனையா என்னை வாட்டுகிறது, யாரோ பொறாமையில் எழுதுகிறார்கள்.' தனக்குள் தேற்றிக் கொள்ளுவான் ரவி.

உறவு முறைகளுக்கு அன்பளிப் புச் செய்யவென பல பொருட்களை வாங்கி பெட்டியில் அடைத்துக் கொண்டான். உமாவுக்கு உடைகள், உடமைகள் வாங்குவதா? இல்லையா? என்பதே ரவிக்கு இப்போதுள்ள பிரச்சனை. 'பணத்துக்கு மட்டும் என்னோடு தொடர்பு வைத்துள்ளவளுக்கு என்னை மறந்து வேறொருவனுடன் உல்லாசம் புரிபவளுக்கு.... நான் எதற்கு அவளை இன்னும் சீராட்ட வேண்டும்? மூளை குழம்பிக் கொண்டே இருந்தது ரவிக்கு. கடந்த ஒரு

**வீரமுனை வானவர்கோன்**

வாரமாக அவனுக்கு ஒழுங்கான உணவோ நித்திரையோ இல்லை. "இராவணன் கைபட்டு கறைபடிந்த சீதையை இராமன் வைத்துள்ளானே!" என்று சலவைத் தொழிலாளி சொன்னதுக்காக காட்டுக்குத் துரத்திய இராமனைப் போன்றவனா நான்? நான் ரவியல்லவா?' கடைக்குச் சென்று மனைவிக்குத் தேவையான அனைத்தையும் வாங்கி வேறாகப் பொதி செய்து கொண்டான். கட்டுநாயக்காவில் விமானம் தரித்ததும் அருகில் இருந்த வாடகைக் காரொன்றை அமர்த்தி மத்திய பஸ் நிலையத்துக்கு வந்தடைந்து, அங்கிருந்து இ.போ.ச. பஸ் மூலம் ஊருக்குப் பயணமானான் ரவி. தனக்கு முன்னாலுள்ள இருக்கையில் கணவன்- மனைவியாக இருவர் அமர்ந்திருந்தனர். அவளின் கை அவனின் தோளைப் பற்றி இருந்தது. முன் இருக்கையில் இருப்பவன் அடிக்கடி ரவியையும் அவனது உடமை களையும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருந்தான். அருகில் இருப்பவள் தனது உமாவின் சாயலைப் போலவே இருந்தாள். ஆம் அவளே தான். சந்தேகமே இல்லை. நான்கு வருசங்களுக்கு முன்னர் நான் கண்ட எனது உமாவேதான்.

கோபம் கொண்டான் ரவி. உணர்ச்சிவசப்பட்டு எழும்பினான், உமாவின் கூந்தலைப் பிடித்து இழுத்து, "என்னடி நினைத்துக் கொண்டு நடக்கின்றாய்....?" சத்தமாகக் கத்தினான் ரவி.

சாரதி பஸ்ஸை உடனடியாக நிறுத்தியதும் பயணிகள் திரண்டனர். விசாரணையின் போது, உமாவின் சாயலையுடைய சிங்களப் பெண்ணே அவள் என்பதை உணர்ந்த ரவி, தனது மணிபர்ஸில் இருந்த உமாவின் போட்டோவைக் காட்டி மன்னிப்புக் கேட்டான். பயணம் தொடர்ந்தது. ரவிகளைப் படைந்து இருந்ததால் சற்றுக் கண்ணயர்ந்தான், அடுத்த தரிப்பிடத்தில் உணவுக்காக பஸ் நிறுத்தப்பட்டபோது, திடுக்கிட்டு எழுந்த ரவி, அருகில் இருந்த தனது சூட்கேஸைக் காணாது திகைத்தான். பல மணி நேரத்துக்கு முன்னமே யாரோ முடிச்சு மாறிகள் அதனைத் திருடிக் கொண்டு சென்றுள்ளார்கள். முன்னாலிருந்த ஜோடி ரவிக்கு அனுதாபம் தெரிவிப்பது போன்று புன்சிரிப்புடன் இறங்கி கடைக்குச் சென்று கொண்டிருந்தனர்.

பொருட்களை இழந்து வீட்டுக்குச் சென்றடைந்தான் ரவி. வாசலில் நீண்ட நேரமாக காத்து நின்ற உமா, ரவியைக் கண்டதும் ஓடி வந்து பேக்கை வாங்கி ரவியின் கரத்தைப் பற்றி இழுத்து ஆசை தீர கன்னத்தில் முத்தமிட்டாள். ●



படிப்பகம்

www.padippakam.com

# பொருந்தாத கோலம்

**இலக்கிய நயம்**



சலங்கைகள் குலுங்கின
அவள் வருகிறாள்!
சந்தன வாசம் அடித்தது
அவள் வருகிறாள்!

காற்றும் குளிர்ந்தது
அவள் வருகிறாள்!
கண்ணும் துடித்தது
அவள் வருகிறாள்!

தாகம் எடுத்தது
அவள் வருகிறாள்!
மோகம் வெடித்தது
அவள் வருகிறாள்!

முற்றும் துறந்ததாய்
தவத்தில் இருந்தவன்
சபலம் மிகக் கொண்டான்!

"மோகத்தை கொன்றுவிடு
மோகத்தை கொன்றுவிடு!"
என்று வரம் கேட்டான்!

காலினைக் கொஞ்சும்
சலங்கைகள் சிணுங்க,
மேனியை தழுவும்
துகிலும் நழுவ
மோகப் புயல் வந்தாள்!

"யாரடி நீ மோகினி
ஏனடி என்னை
மோகக் கடலினுள்
மூழ்க வைத்தாய்?"

மோகினி சிரித்தாள்
போதையைத் தெளித்தாள்.

"முற்றும் துறந்தவரே
மோகம் ஏன் அணிந்தீர்?
பற்றுக் கடந்தவரே
பற்ற ஏன் நினைத்தீர்?"

"வாலைக் குமரியடி- நீ
வந்து எதிரில் நின்றால்
கோலூன்றும் கிழவனும்தான்
பந்து என எழுவான்!"

"சித்தர் என்று உம்மை
ஊரார் அழைத்திடுவர்.
வெறும் கட்டை என்றும்
ஊரார் உரைத்திடுவர்."

"சித்தரும் அறிவிழப்பர்
பக்தரும் மூச்சிழப்பர்
கொய்யாக் கனி உன்னை
நேரில் கண்டு விட்டால்!"

"உலகப் பற்றை
உதறியவர்,
அழகில் பற்றை
நிறுத்துவதோ?"

"வாயாட்டம் போடாதே- மனம்
பாம்பாட்டம் ஆடுதடி!
பேயாட்டம் போடுதடி-ஆசை
பேயாட்டம் போடுதடி!"

"ஆண்டவனின் அவதாரம்
நீர் ஆடலாமா?
பேதை என் முன்னால்
புலம்பலாமோ?"

"ஆடுவதும் பெண்ணில்-ஆடி
அடங்குவதும் பெண்ணில்
புலம்புவதில் தவறோ?"

"அணைப்பதும் பெண்தான்
அன்பில் நனைப்பதும் பெண்தான்
பின் ஏன் பெண்ணை
பேய் என்று உரைத்து
சேயையும் வெறுத்து
துறவறம் பூண்டீர்?"

அவளது கேள்வி
கன்னத்தில்
அறைவது போலிருந்தது!

இளம் முனி
அரண்டு போனான்!

"இளம் வயதில்
உம் துணைவி!
தனிமை என்னும்
தீயினிலே
எறிந்துவிட்டீர் அவளை!

செங்கனியைக் கொய்து
பாதியினைக் கடித்துவிட்டு
மீதியினை எறிந்தீர்!

பசியில்லாத உமக்கு
கனி எதற்கு?

ருசில்லாத நாவுக்கு
அறுசுவை எதற்கு?

ஏன் அவளை
அடைந்தீர்?
ஏன் அவளை
துறந்தீர்?

இளமை என்னும்
கனியை
ஏன் கடித்து எறிந்தீர்?

வாழ்க்கை என்னும்
மலரை
ஏன் பறித்து எறிந்தீர்?

பிடிக்கவில்லை என்றால்
ஏன் அவளை புணர்ந்தீர்?
சுவைக்கவில்லை என்றால்
ஏன் அவளை மணந்தீர்?

நீரெல்லாம் ஞானி
நீரெல்லாம் யோகி
நீரெல்லாம் துறவி!

உமக்கெல்லாம் பக்தர்
உமக்கெல்லாம் குடில்
உமக்கெல்லாம் வணக்கம்?

பெண் மனம் அறியா
பேடி நீர்!

பெண்ணும் வாழ்வில்
பாதி என்று அறியா
பாவி நீர்!

பாதியிலே உமக்கு
பசி தீர்ந்ததும்
ஓடியே வந்தீரே!

அவள் பசி தீர்ந்ததா
அறிந்தீரா நீர்?

ஊருக்கு செய்கிறீர்
உபதேசம்.
உம்மவள் அங்கு
உபவாசம்!

உலகுக்கு நீர்
வழிகாட்ட வந்தீரோ?
உம்மவளுக்கு நீர்
காட்டிய வழி என்ன?

பூத்த மலர்க் கொடியை
வாடச் செய்துவிட்டு,
ஜீவ காருண்யத்தை
நீரோ உபதேசிப்பீர்?

நந்தவனம்மீது
தீயை கொட்டிவிட்டு
வெள்ளை மனம் என்று
விரித்தோ காட்டுகிறீர்?

மார்பு குலுங்க வரும்
மங்கையர் முன் வழுக்கி
காமச் சேற்றில் விழுகின்ற
பருவ ஆசைகளை-முனி
உருவத்தால் மறைத்தீரோ?

மொட்டை அடித்தாலும்
மோகம் சாகவில்லை!
சடை வளர்த்தாலும்
ஆசை தீரவில்லை!

மோகக் குட்டையிலே
ஊறிய மட்டை
உமது மனம்!

குடும்பச் சங்கிலியில்
கட்டுண்டு வாழ்வதைத்தான்
நீர் வெறுத்தீர்,
பலரை கட்டியாடத்தான்
நீர் நினைத்தீர்!

நீரோ துறவி?
நீர் ஒரு திருடன்!

நீரோ யோகி?
நீர் ஒரு போகி
சுகபோகி!

நீரோ சாமி?
நீர் ஒரு ஆசாமி
புரட்டு ஆசாமி!

முற்றும் துறக்க வேண்டும்
உம்மைப் போன்றோரை
உத்தமர் என எண்ணுவதை
முற்றும் துறக்க வேண்டும்!

பற்றுத் துறக்க வேண்டும்
உம்மைப் போன்றோரில்
பற்றுத் துறக்க வேண்டும்!

தோற்றத்தை கண்டு-மன
ஏற்றத்தை காணலாகாது!
மொட்டையும், ஜடாமுடியும்
தவக்கோலத்தை காட்டாது.
குணம் கெட்டவர்க்கு
தவக் கோலம் பொருந்தாது!"

காறி உமிழ்ந்தாள்
கடந்து சென்றாள்!

"தவமும் தவமுடையார்க்கு ஆகும்
அவம்- அதனை
அ:திலார் மேற்கொள்வது"
அதிகாரம்-27, குறள்-262.

தருவது **ரசிகன்**

---

ஸ்போர்ட்ஸ்

## 1999 கிரிக்கெட் திருவிழா

### மோதும் அணிகளும் - தினங்களும்

ஏழாவது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டிகள் 1999ம் ஆண்டு மே 14ம் திகதி முதல் ஜூன் 20ம் திகதி வரை இங்கிலாந்தில் நடைபெறவுள்ளன. இப்போட்டியில் டெஸ்ட் விளையாடும் 9 நாடுகளும் பங்களாதேஷ், கென்யா, ஸ்கொட்லாந்து ஆகிய 3 நாடுகளும் கலந்து கொள்கின்றன.

போட்டிகளில் பங்கேற்கும் 12 நாடுகள் ஏ,பி என இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரிவுகளிலும் 6 அணிகள் இருக்கும்.

லீக் போட்டிகளில் இரு பிரிவுகளிலும் முதல் 3 இடங்களைப் பெறும் 3 அணிகள் (மொத்தம் 6) தேர்வு செய்யப்பட்டு சுப்பர் சிக்ஸ் நிலைக்கு அனுப்பப்படும். சுப்பர் சிக்ஸ் நிலையில் ஏ பிரிவில் முதல் 3 இடங்களைப்பெற்ற அணிகள் பி பிரிவில் முதல் 3 இடங்களைப் பெற்ற அணிகளுடன் மோதும்.

இப்போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெறும் 4 அணிகள் தேர்வு செய்யப்பட்டு அரை இறுதிப்போட்டிக்கு அனுப்பப்படும். இதில் வெற்றி பெறும் 2 அணிகள் இறுதிப் போட்டிக்கு வரும்.

மொத்தம் 42 போட்டிகள் நடைபெறுகின்றன. வீரர்கள் வண்ண வண்ண உடைகளை அணிந்து விளையாடுவார்கள். 1975,1979,1983ம் ஆண்டுகளில் இங்கிலாந்தில் நடைபெற்ற போட்டிகள் யாவும் 60 ஓவர்களைக் கொண்டதாக இருந்தன. ஆனால் இம்முறை போட்டிகள் 50 ஓவர்களைக் கொண்டதாக இருக்கும்.

| பிரிவு-A | பிரிவு-B |
|---|---|
| இலங்கை | அவுஸ்திரேலியா |
| இந்தியா | மேற்கிந்தியத்தீவு |
| தென்னாபிரிக்கா | பாகிஸ்தான் |
| இங்கிலாந்து | நியூஸிலாந்து |
| ஸிம்பாப்வே | பங்களாதேஷ் |
| கென்யா | ஸ்கொட்லாந்து |

#### லீக் போட்டிகள்

| திகதி | போட்டி நடைபெறும் இடம் | மோதும் அணிகள் |
|---|---|---|
| மே 14 | லோர்ட்ஸ் | இங்கிலாந்து-இலங்கை |
| மே 15 | ஹோவ் | இந்தியா-தென்னாபிரிக்கா |
| மே 15 | டான்டன் | ஸிம்பாப்வே-கென்யா |
| மே 16 | வோர்செஸ்டர் | அவுஸ்திரேலியா-ஸ்கொட்லாந்து |
| மே 16 | பிரிஸ்டல் | மேற்கிந்தியத்தீவு-பாகிஸ்தான் |
| மே 17 | கெம்ஸ்போர்ட் | நியூஸிலாந்து-பங்களாதேஷ் |
| மே 18 | கண்டர்பரி | இங்கிலாந்து-கென்யா |
| மே 19 | நோர்த்தாம்டன் | இலங்கை-தென்னாபிரிக்கா |
| மே 19 | லீசெஸ்டர் | இந்தியா-ஸிம்பாப்வே |
| மே 20 | கார்டி:ப் | அவுஸ்திரேலியா-நியூஸிலாந்து |
| மே 20 | செஸ்டர்-லி-ஸ்ட்ரீட் | பாகிஸ்தான்-ஸ்கொட்லாந்து |
| மே 21 | அயர்லாந்து | மேற்கிந்தியத்தீவு-பங்களாதேஷ் |
| மே 22 | ஓவல் | இங்கிலாந்து-தென்னாபிரிக்கா |
| மே 22 | வோர்செஸ்டர் | இலங்கை-ஸிம்பாப்வே |
| மே 23 | பிரிஸ்டல் | இந்தியா-கென்யா |
| மே 23 | ஹெட்டிங்லி | அவுஸ்திரேலியா-பாகிஸ்தான் |
| மே 24 | சௌத்தாம்டன் | மேற்கிந்தியத்தீவு-நியூஸிலாந்து |
| மே 24 | எடின்போர்க் | ஸ்கொட்லாந்து-பங்களாதேஷ் |
| மே 25 | ட்ரெண்ட் பிரிட்ஜ் | இங்கிலாந்து-ஸிம்பாப்வே |
| மே 26 | டான்டன் | இந்தியா-இலங்கை |
| மே 26 | ஆம்ஸ்டெல்வின் | தென்னாபிரிக்கா-கென்யா |
| மே 27 | லீசெஸ்டர் | மேற்கிந்தியத்தீவு-ஸ்கொட்லாந்து |
| மே 27 | செஸ்டர்-லீ-ஸ்ட்ரீட் | அவுஸ்திரேலியா-பங்களாதேஷ் |
| மே 28 | டெர்பி | நியூஸிலாந்து-பாகிஸ்தான் |
| மே 29 | எக்பாஸ்டன் | இந்தியா-இங்கிலாந்து |
| மே 29 | கெம்ஸ்போர்ட் | ஸிம்பாப்வே-தென்னாபிரிக்கா |
| மே 30 | சௌத்தாம்டன் | இலங்கை-கென்யா |
| மே 30 | ஓல்ட்-ட்ராபோர்ட் | மேற்கிந்தியத்தீவு-அவுஸ்திரேலியா |
| மே 31 | எடின்போர்க் | ஸ்கொட்லாந்து-நியூஸிலாந்த |
| மே 31 | நோர்த்தாம்டன் | பாகிஸ்தான்-பங்களாதேஷ். |

#### சுப்பர் சிக்ஸ்

| | | |
|---|---|---|
| ஜூன் 04 | ஓவல் | பிரிவு ஏ 2வது இடம்-பிரிவு பி 2வது இடம் |
| ஜூன் 05 | ட்ரெண்ட் பிரிட்ஜ் | பிரிவு ஏ 1வது இடம்-பிரிவு பி 1வது இடம் |
| ஜூன் 06 | ஹெட்டிங்லி | பிரிவு ஏ 3வது இடம்-பிரிவு பி 3வது இடம் |
| ஜூன் 08 | ஓல்ட் ட்ராபோர்ட் | பிரிவு ஏ 2வது இடம்-பிரிவு பி 1வது இடம். |
| ஜூன் 09 | லோர்ட்ஸ் | பிரிவு ஏ 3வது இடம்-பிரிவு பி 2வது இடம் |
| ஜூன் 10 | எக்பாஸ்டன் | பிரிவு ஏ 1வது இடம்-பிரிவு பி 3வது இடம் |
| ஜூன் 11 | ஓவல் | பிரிவு ஏ 3வது இடம்-பிரிவு பி 1வது இடம் |
| ஜூன் 12 | ட்ரெண்ட் பிரிட்ஜ் | பிரிவு ஏ 2வது இடம்-பிரிவு பி 3வது இடம் |
| ஜூன் 13 | ஹெட்டிங்லி | பிரிவு ஏ 1வது இடம்-பிரிவு பி 2வது இடம். |

#### அரை இறுதிகள்

| | | |
|---|---|---|
| ஜூன் 16 | ஓல்ட் ட்ராபோர்ட் | சுப்பர் சிக்ஸில் 1வது இடம்- 4வது இடம் |
| ஜூன் 17 | எக்பாஸ்டன் . | சுப்பர் சிக்ஸில் 2வது இடம்-3வது இடம். |

#### இறுதி

| | | |
|---|---|---|
| ஜூன் 20 | லோர்ட்ஸ் | ??????-?????? |

---

## சிந்தியா பதில்கள்

★ ஒட்டுணுவின் இலங்கை விஜயம் பற்றி என்ன நினைக்கிறீர்?

ஆர். கோபால், கொழும்பு-11.

அமெரிக்க பிரதிநிதிபோல இவரும் புலிகளை வெளுத்துக்கட்டுவார், என்று எதிர்பார்த்தவர்களுக்கு குட்டு வைத்துவிட்டுப் போயிருக்கிறார் ஒட்டுணு! புலிகளை ஆயுதங்களை கைவிடுமாறு உபதேசிப்பார் என்றும் எதிர்பார்க்கப்பட்டதாம்! பயங்கரமான ஏமாற்றம்தான்! அசடு வழிந்தபடிதான் வழியனுப்பி வைத்திருப்பர்!

✉ ✍

★ குட்டி ஜோக் ஒன்று சொல்லுங்கள் பார்க்கலாம்?

செல்வி கவிதா மாணிக்கம், பதுளை.

கண் டாக்டர் நோயாளியைக் கேட்டார்:

"உன்னால் எவ்வளவு தூரம் பார்க்க முடிகிறது?"

நோயாளி பதில் கூறினார்:

"காலையில் நான் எழுந்திருக்கும்போது சூரியனைத் தெளிவாகப் பார்க்க முடிகிறது. சூரியன் உலகிலிருந்து சுமார் 9 கோடி மைல்கள் தூரத்தில் இருப்பதாகச் சொல்கிறார்கள்."

✉ ✍

★ தபால் தந்தி ஊழியர் வேலை நிறுத்தம் முடிந்துவிட்டதே?

எஸ். சிராஜ்தீன், புத்தளம்.

எப்போதோ முடித்திருக்கலாமே! சிவராத்திரி, ஹஜ், நாட்களுக்கு பொதுவிடுமுறை விட்டால் பொருளாதாரம் கவிழ்ந்துவிடும் என்று கூறும் அரசாங்கம், வேலை நிறுத்தத்தை மட்டும் இப்படி இழுத்தடித்து இத்தனை தினங்களை சாப்பிட்டது நியாயமா?!

✉ ✍

★ அவசரகாலச் சட்டத்தை எதிர்த்து புளொட் எம்.பிகள் வாக்களித்துள்ளனரே?

சி. குகன், வவுனியா.

வரவேற்கத்தக்க நிலைப்பாடு! அடுத்து அரசுக்கு வழங்கும் ஆதரவையும் விலக்கிக் கொண்டால் மெச்சலாம்!

✉ ✍

★ யாழ் குடாநாட்டில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இலட்சம் இலட்சமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக செய்திகள் வந்தன, எங்கே அந்தப் பணமெல்லாம்?

சி. ரகுநந்தன், யாழ்ப்பாணம்.

பாதியை அரசு திரும்ப எடுத்துக் கொண்டது. மீதியில் குத்தகைக்காரர்களின் பைநிரம்பியதுபோக கொஞ்சம் தேறும்!

✉ ✍

★ இன்று இலங்கையில் சம்பாதிக்கக்கூடிய துறை ஒன்று கூறும்?

வே. தங்கராசா, மன்னார்.

அரசியல்! மூலதனமும் தேவையில்லை!

✉ ✍

★ மேல் மாகாணசபைத் தேர்தலில் தமிழ்க் கட்சிகள் போட்டியிட்டால் வெற்றி பெறுவார்களா?

ஆர். யேசுராசா, நீர்கொழும்பு.

தண்டிக்கப்படுவார்கள்!

✉ ✍

★ சிந்தியா! தமிழ்க் கட்சிகள் சில "மக்கள் போராடத் தயாரில்லை!" என்று கூறுகின்றனவே?

பி. கஸ்தூரி, மட்டக்களப்பு.

ஆடத்தெரியாதவள் "மேடை சரியில்லை" என்றுதானே சொல்வாள்; அதில் என்ன ஆச்சரியம்!

✉ ✍

★ சிந்தியா! வாடாத பூ எது?

எம். ஹிஸ்புல்லா, மட்டக்களப்பு.

இடைக்கிடையே காணாமல் போகும்; ஆனால் வாடாது, அது சிரிப்பூ!

✉ ✍

★ உங்களைக் கவர்ந்த அரசியல்வாதி?

சி. பாஸ்கரன், திருமலை.

வைகோ! மந்திரிப்பதவி காலடி தேடி வந்தும்கூட, "பாரதிய ஜனதா அரசில் பங்கேற்கமாட்டோம்!" என்று தேர்தல் பிரசாரத்தில் கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றி வருகிறார்! ஜெயலலிதா பல தடவை வற்புறுத்தியும்கூட மனிதர் அசைந்து கொடுக்கவில்லை! மந்திரிப் பதவிக்காக மந்தியாகத் தாவும் இக் காலத்தில் வைகோ வியக்க வைக்கிறார்!

✉ ✍

★ 'முரசு' மீது பொறாமைப்படுபவர்களுக்கு உமது பதில்?

கோ. ராஜ்குமார், கொழும்பு-09.

நான்கு லட்டுகள்! புரியவில்லையா?

**இவர்தான் அவர் - மகாத்மா காந்தி**

குதிரையில் சவாரிபோய்க் கொண்டிருந்தார் மன்னர். அப்போது ஒரு சிறுவன் மரத்தின்மீது எறிந்த கல் அவர்மீது வந்து விழுந்தது.

உடனே மன்னர் தன்னுடன் வந்து கொண்டிருந்த சிப்பாயிடம், "அரண்மனைக்குச் சென்று நான்கு லட்டு உருண்டைகள் கொண்டுவந்து அந்தச் சிறுவனிடம் கொடு!" என்று உத்தரவிட்டார்.

உத்தரவைக் கேட்டு, அருகில் குதிரையில்வந்த அமைச்சர் குழம்பினார். மன்னர் புன்னகைத்தார். காரணத்தைக் கூறினார்.

"மரம் என்பது ஜடம். ஆனால் அதுகூட தன்மேல் கல் எறிந்தவனுக்குப் பழங்களைக் கொடுக்கிறது. அப்படியிருக்க அறிவுபடைத்த நான் ஏன் அந்தச் சிறுவனைக் கோபிக்க வேண்டும்?"

✉ ✍

★ சிந்தியா! கடி ஜோக் சொல்லி பல வாரங்கள் ஆச்சே?

மா. தேவசகாயம், வத்தளை.

"ஒரு வயசு வந்த பெண்ணும், ஒரு வயசு வந்த ஆணும் ஒரு இருட்டு அறையில் இருந்தால் அங்கே என்ன நடக்கும்?"

"அவர்கள்தான் நடப்பார்கள். ஏனென்றால், இரண்டுபேருக்கும் ஒரு வயசு ஆகிவிட்டதல்லவா?"

✉ ✍

★ 'ஜீன்ஸ்' படத்தில் உலக அதிசயங்கள் கண்டீர்களா?

எ:ப். மொகமட், மருதானை.

ஏழு அதிசயங்களைவிட என்னைக் கவர்ந்தது கம்பியூட்டர் கிராபிக்ஸ் அதிசயம் தான். சூப்பர்! ஏழு அதிசயங்கள் பிரமாதமாக கமராவுக்குள் சிக்கவில்லை. குறுகிய நேரத்திற்குள் கச்சிதமாக பிடித்துக் காட்ட முடியாது தானே? அதனால் ஒளிப்பதிவாளர் அசோக்குமாரை மன்னிக்கலாம்! நான் பார்த்த 'வீடியோ' பிரதியில் இரண்டு அதிசயங்களை வேறு 'கட்' பண்ணியிருந்தார்கள்.



ஸ்நேகா

✉ ✍

★ எங்கே ஜோதிமீனா, விசித்ரா? இன்று யாரையுமே சினி விசிட்டில் காணோமே?

சி. ரவி, கொழும்பு-06.

கவர்ச்சிக்கு என்று தனியாகக் கொடுக்கும் சம்பளத்தையும் சேர்த்து கதாநாயகிகளுக்கே கொடுத்துவிடுகிறார்கள்!

✉ ✍

★ 'ஜயசிக்குறுய்' எப்போது முடியும்?

பி.எம். யுவராஜ், கற்பிட்டி.

ஆரம்பித்தவர்களுக்கு அது தெரிந்திருந்தால் அடுத்த பொதுத் தேர்தலுக்கே திகதி குறித்திருப்பார்களே!

✉ ✍

★ இந்தியப் பிரதமர் வாஜ்பேயி படும் பாட்டைப் பார்த்தீரா?

எஸ். ஹுசைன், மாத்தளை.

கட்டைப் பிரமச்சாரி ஒரு பெண்ணிடம் மாட்டிக்கொண்டு முழிக்கிறார்.

✉ ✍



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 9

# எகிப்தில் இஸ்ரயேலர்

எகிப்து நாட்டில் தனது மகன் யோசேப்பு மிக உயர்ந்த நிலையில் இருப்பதையிட்டு தந்தை யாக்கோபு மிக்க மகிழ்ச்சியடைந்தார். தனது பேரன்புக்குரிய மகன் வனவிலங்குக்கு இரையாகிவிட்டான் என்று எண்ணி ஏங்கிக்கொண்டிருந்தவருக்கு, மகன் உயிருடன்தான் இருக்கிறான், அதுவும் அந்நிய நாட்டில் அதி உன்னத நிலையில் இருக்கிறான் என்பதை அறிந்து பூரித்துப் போனார். இச்சிறப்புக்குக் காரணமான ஆண்டவரைத் துதித்து நன்றி கூறினார்.

எகிப்திலும் சுற்றியுள்ள பிரதேசங்களிலும் பஞ்சம் தொடங்கி இரண்டு ஆண்டுகள் சென்ற பின்னரே இஸ்ரயேல் ஆகிய யாக்கோபு தனது வழிமரபினரோடு எகிப்து வந்து சேர்ந்தார். எங்கும் பஞ்சம் வாட்டியபோதும் யோசேப்பின் அரவணைப்பில் அவருடைய உறவினர்கள் எக்குறையுமின்றி வாழ்ந்தார்கள்.

காலஞ் செல்லச்செல்ல எகிப்து நாட்டிலுள்ள பாமரமக்கள் சேகரித்து வைத்திருந்த தானியங்களும் குறைந்துபோயின. ஆனால் மன்னர் பார்வோனின் தானியக் களஞ்சியத்தில் மேலதிகமாக உணவுப்பொருட்கள் தேங்கிக்கிடந்தன. எகிப்து நாட்டு மக்களும் யோசேப்பிடம் வந்து தங்களுக்கு உதவுமாறு கேட்டுக்கொண்டனர். தங்களிடமுள்ள ஆடு, மாடு, கழுதை மற்றும் குதிரைகளை அரண்மனையில் அடமானமாக வைத்துக் கொண்டு தங்களுக்கு வேண்டிய தானியங்களை அளித்து உயிருடன் வாழ வகை செய்யுமாறு கோரினார்கள். மன்னர் பார்வோனிடம் நாட்டு மக்களின் நிலையை எடுத்துக்கூறிய யோசேப்புக்கு, அவர் விருப்பப்படியே செய்யுமாறு மன்னர் கூறிவிட்டார். இதன்படி தினசரி கால்நடைகள் மன்னரின் பண்ணைகளில் வந்து குவிந்தன. இவற்றைப் பராமரிக்கும் பணியினை யோசேப்பின் சகோதரர்கள் சிறப்பாகச் செய்தனர்.

அடுத்த வருடமும் பஞ்சம் தீர்ந்தபாடில்லை. எகிப்தியர்கள் மீண்டும் அரண்மனைக்கு வந்து யோசேப்பைக் கண்டனர். அவர்களிடம் உள்ள பணம், தானியம் அத்தனையும் தீர்ந்ததுடன் கால்நடைகளும் மன்னரின் பண்ணைகளுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டன. தாங்கள் பஞ்சத்தில் உழன்று உயிரிழக்காமலிருப்பதற்கு தானியம் தந்துதவுமாறு வேண்டினர்.

யோசேப்பு, மன்னர் பார்வோனுடன் ஆலோசனை நடத்திவிட்டு மக்களிடம் வந்தார். அவர்களுடைய காணிகளையும் நிலப்புலன்களையும் ஈடாக வைத்துவிட்டு தானியத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்றார். அவ்வாறே மக்களில் பெரும்பான்மையினர் தங்கள் காணிகளையும் அரண்மனைக்கு உரிமையாக்கினர். எகிப்து நாட்டிலுள்ள காணிகளனைத்தும் இவ்வாறு பார்வோன் மன்னரின் உடைமையாக்கப்படுவிட்டன. இதேபோல் கால் நடைகளும் மன்னவனுக்குச் சொந்தமாக்கப்பட்டுவிட்டன.

## புதிய சட்டம்

நைல் நதியில் அவ்வப்போது பெருகி வரும் நீரைப் பயன்படுத்தி விவசாயம் செய்வோரும் தங்களுடைய நிலத்தை மன்னரிடம் ஒப்படைத்தனர். இவர்களுக்கு ஒரு நிபந்தனையுடன் தானியம் வழங்கப்பட்டது. விளைச்சலில் ஐந்தில் ஒரு பங்கு பார்வோன் மன்னனுக்கு அளிக்கப்படவேண்டும். எஞ்சிய நான்கு பாகங்களும் விவசாயிகளின் குடும்பத்துக்கு உணவாகவும் வயல்களுக்கான விதைத்தானியமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே அந்த நிபந்தனை. இதே நிபந்தனை அந்த நாட்டில் சட்டமாக்கப்பட்டு இன்றுவரை அமுலில் இருப்பதாக அறியப்படுகிறது.

இதேவேளை எகிப்து நாட்டின் அர்ச்சகர்களின் காணிகளை அரண்மனை ஏற்கவில்லை. இக்காணிகள் அரசமானியமாக அவர்களுக்கு வழங்கப்பட்டவை. இச்சட்டத்தின் சூத்திரதாரி யோசேப்பே என்பதனால் அவருக்கு மன்னரிடத்தில் மதிப்பு பன்மடங்காக உயர்ந்தது. அரண்மனை அதிகாரிகளும் பெருமதிப்பினை அவருக்கு அளித்தனர்.

**கோ**சேன் பகுதியில் நல்ல செழிப்பான இடத்தில் குடியேறிய யாகோபின் மரபினர் பல்கிப் பெருகினர். இவர்கள் இஸ்ரயேலர் என்றே அழைக்கப்பட்டனர். இஸ்ரயேலரான யாக்கோபு, இங்கு பதினேழு ஆண்டுகள் வாழ்ந்தார். அவருடைய உடல் நன்றாகத் தளர்ந்து விட்டது. தனது வாழ்க்கை முடிவுறும் கட்டம் நெருங்கிவிட்டதை உணர்ந்து கொண்டர். யோசேப்பை தன்னிடம் வருமாறு அழைத்தார். அவர் வந்ததும், "மகனே யோசேப்பு! என்னை ஆண்டவர் தன்னிடம் அழைக்கும் காலம் வந்துவிட்டது. நான் இறந்ததும் என் உடலை எப்படியாவது எகிப்தை விட்டு எடுத்துச் சென்று கானான் தேசத்தில் எனது மூதாதையார் அடக்கம் செய்யப்பட்ட- எப்ரோனிடம் என் பாட்டனரான ஆபிரகாம் பெற்றுக்கொண்ட மக்பெலா குகையிலேயே அடக்கம் செய்ய வேண்டும். மம்ரே என்ற இடத்துக்கு அருகாமையில் மக்பேலா குகை இருக்கிறது. எனது மூதாதையர் அவ்விடத்தி லேயே அடக்கம் செய்யப்பட்டனர்.

கானான் நாட்டிலுள்ள லூசு என்னுமிடத்தில் நான் பீடம் அமைத்து இறைவனைத் துதித்தபோது, அவர் 'இந்நாட்டை உன்னுடைய தாக்குவேன். இந்நாட்டில் உன் மரபு வழியினர் பல்கிப் பெருகவைப்பேன்' என்று ஆசிவழங்கியருளினார். ஆகவே நம் வழி மரபினர் என்றோ ஒருநாள், ஆண்டவரால் எம்மவருக்காக அருளப்பட்ட கானான் தேசத்துக்குச் செல்ல வேண்டும். எம்மவருடைய சடலங்களும் அந்த மண்ணிலேயே அடக்கம் செய்யப்படவேண்டும். எனது உடலை 'கானான் தேசத்தில் கொண்டுபோய் அடக்கம் செய்வேன்' என்று வாக்களிப்பாயா?" என்று கேட்டார். யோசேப்பு விம்மலுடன் தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவதாக வாக்களித்தார்.

## யாக்கோபின் இறுதி

யாக்கோபு தனது புதல்வர்கள் அனைவரையும் தன்னருகே வரவழைத்தார். எல்லோரும் அவரது படுக்கையைச் சுற்றி வளைத்து நின்றனர். அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து அவரவருக்கு ஏற்ற அறிவுரைகளை வழங்கி ஆசீர்வதித்தார்.

யாக்கோபு நூற்றி நாற்பத்தேழு ஆண்டுகள் வாழ்ந்து தனது மக்கள் மற்றும் உறவினர்கள் யாவரும் சூழவிருந்தபோதே உயிர் துறந்தார். தந்தையார் மறைந்த துயரம் தாங்காமல் யோசேப்பு சிறு குழந்தைபோல் தேம்பித் தேம்பி அழுதார். அவரைப் போலவே அவருடைய சகோதரர்களும் அழுது புரண்டனர்.

தனது தந்தையின் வேண்டுகோள்படி அவரது சடலத்தை கானான் தேசத்துக்குக் கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகளை யோசேப்பு செய்யலானார். எகிப்து நாட்டு மருத்துவ நிபுணர்கள் பலர் ஒன்று சேர்ந்து யாக்கோபின் சடலம் கெட்டுப் போகாதபடி மருத்துவ முறைப்படி பாதுகாக்க உரியவற்றைச் செய்தனர். இதற்கு மட்டும் நாற்பது நாட்கள் சென்றன.

எகிப்து நாட்டின் மன்னர் மட்டுமல்லாமல் அதிகாரிகள் மற்றும் பாமரமக்கள் மத்தியிலும் மிகவும் செல்வாக்குப் பெற்றவராக யோசேப்பு விளங்கியமையினால், அவருடைய தந்தையின் மறைவையொட்டி எகிப்து நாட்டில் எழுபது நாட்கள் துக்கம் கொண்டாடப்பட்டது. துக்கதினம் முடிவடைந்ததும் யோசேப்பு மன்னர் பார்வோனிடம் சென்று தனது தந்தையின் சடலத்தை கானான் தேசம் கொண்டு சென்று அடக்கம் செய்து விட்டுத் திரும்புவதற்கு அனுமதி கோரினார். பார்வோன் அதற்கான உத்தரவை வழங்கியதுடன் சகல இராஜ மரியாதையுடன் ஊர் வலமாக சடலம்கொண்டு செல்லப்படுவதற்கும் ஆணை பிறப்பித்தார்.

## இறுதி யாத்திரை

கானான் தேசத்திலிருந்து பதினேழு வருடங்களுக்கு முன்னர் எகிப்து நாட்டுக்கு வந்து குடியேறிய இஸ்ரயேலரின் மரபினர் அனைவரும் யாக்கோபின் சடலத்துடன் புறப்பட்டனர். எகிப்து நாட்டின் அரசாங்க அதிகாரிகள், படைகளின் தளபதிகள் ஆகியோரும் மற்றும் பொது மக்கள் பலரும் கூட ஆயிரக்கணக்கில் சென்றனர். யோர்தான் நதியைக் கடந்து அப்பாலுள்ள கோரேன் அத்தம் என்ற ஊரில் வைத்து இஸ்ரயேலியர் மரபுப்படி எல்லோரும் ஒப்பாரி வைத்து ஏழு நாட்கள் புலம்பி அழுதனர். அதன் பின்னர் புறப்பட்டுச் சென்று மம்ரேக்கு அருகிலுள்ள மக்பேலா குகையில் யாக்கோபின் சடலத்தை உரிய முறைப்படி அடக்கம் செய்தனர்.



காரியங்களை முடித்துக்கொண்டு எகிப்து திரும்புவதற்கான ஆயத்தங்களில் யோசேப்பு கவனம் செலுத்தினார். ஆனால் அவருடைய சகோதரர்கள் சற்றுத் தயக்கம் காட்டினர். அவர்களில் ஒருவர் மட்டும் யோசேப்பை அணுகினார். சகோதரர்கள் மீண்டும் எகிப்து திரும்புவதற்குத் தயங்குவதற்கான காரணத்தை அவர் யோசேப்பிடம் விவரித்தார்.

சகோதரர்கள் ஒன்று சேர்ந்து இளமைக் காலத்தில் யோசேப்புக்குத் தீங்கு இழைத்தமையினால் மீண்டும் எகிப்து சென்றால், பழிவாங்கப்படுவார்களோ என்ற சந்தேகம் சகோதரர்களிடம் தோன்றிருப்பதாக அவர் யோசேப்பிடம் தெரிவித்தார். தந்தையார் யாக்போபு உயிருடன் இருந்தால் அத்தகைய பழிவாங்கலுக்கு இடம் இருக்காது. அவர் இல்லாமையினால்தான் இயல்பாக அத்தகைய சந்தேகம் எழுந்திருக்கிறது என்பதனையும் யோசேப்பு கண்டு கொண்டார்.

இக்கதையைக் கேட்டதும் யோசேப்பு பதறிப் போனார். தனது சகோதரர்கள் அனைவரையும் தன்னிடம் வருமாறு யோசேப்பு அழைத்தார். பழைய சம்பவங்களைத் தான் எப்போதோ மறந்துவிட்டதாக அழுதழுது கூறினார். அன்று தன்னை வர்த்தகர்களிடம் ஒப்படைத்தமையினாலேயே இலட்சோப இலட்சம் மக்களைப் பட்டினியிலிருந்து பாதுகாக்கும் சந்தர்ப்பம் தனக்குக் கிடைத்ததைச் சுட்டிக்காட்டினார். "இறைவனின் ஆணைப்படியே எல்லாம் நடந்திருப்பதனால், தீயவை செய்துவிட்டோமே என்று எவரும் ஏங்கவேண்டிய அவசியமில்லை. எல்லோரும் எகிப்துக்கு என்னுடனேயே வாருங்கள். எல்லோரையும் எத்துன்பமும் தீண்டாமல் பாதுகாப்பது என் பொறுப்பு!" என்று யோசேப்பு கூறினார். இதனைத் தொடர்ந்து எல்லோரும் புறப்பட்டு மீண்டும் எகிப்தை வந்தடைந்தனர்.

**யோ**சேப்பு நூற்றுப்பத்து வருடங்கள் உயிர் வாழ்ந்தார். தனது மகன்காளான- எப்ராயிம் மற்றும் மனாசே ஆகியோரின் பிள்ளைகளும் அவர்களுடைய பிள்ளைகளும் தன் மடியில் விளையாடியபோது ஏற்படும் மகிழ்ச்சிப் பேறையும் பெற்றார். அவருடைய உயிர் பிரியும் வேளை வந்தது. அப்போது உயிருடன் எஞ்சியிருந்த தனது சகோதரர்களையும் அவர்தம் பிள்ளைகள் மற்றும் உறவினர்களையும் தன் அருகே அழைத்து உரையாடினார். "இஸ்ரயேலர் வழித்தோன்றல்களாகிய உங்களுக்கோர் வார்த்தை கூற விரும்புகிறேன். எமது மூதாதையரான ஆபிரகாம், ஈசாக்கு, எமது தந்தை ஆகியோருக்கு இறைவன் அளித்த வாக்குறுதியின்படி குறிப்பிட்ட வேளையில் உங்களனை வரையும் எமக்காக, அவரால் உறுதி செய்யப்பட்ட தேசத்துக்கு நிச்சயம் அழைத்துச் செல்வார். ஆகவே எத்தகைய அச்சமுமின்றி அக்காலம் வரை இங்கேயே வாழுங்கள்!" என்று கூறித் தன் கண்களை மூடிக் கொண்டார்.

எகிப்து நாட்டை பஞ்சம் பசிப்பிணியிலிருந்து பாதுகாத்த பெரும் புகழுக்குப் பாத்திரரான யோசேப்பு மறைந்ததும் எகிப்து நாடே பெரும் துக்கத்திலாழ்ந்தது.

(தொடர்ந்து வரும்)

**திருமறை ⑦ விடை: ☛ பென்யமின்**

**பரிசு பெறுவோர்:**

1. க. மருதநாயகம் சசிகலா, கோணமுட்டாவ, அப்புத்தளை.
2. எஸ். பெனடிக்ட், வட்டகொட கீ.பி., வட்டகொட.
3. ஐ.எம். சிஃபான், 134/B,அம்-நூர்புர, பனகமுவ,கருநாகல்
4. எஸ்.எல். நூர்தீன், சேர் ராசீக் ஃபரீட் வீதி, அட்டாளைச்சேனை-06.
5. செல்வி லதா சிவகுரு, 37/4, நீதி மன்ற வீதி, மனையாவெளி, திருகோணமலை.

**திருமறை 09 வினா:-** இஸ்ரயேலர் இறக்கும்போது அவருடைய வயதென்ன?

மே. 23க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 09 – தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

## தமிழ்க் கட்சிகள் கூட்டறிக்கை

இன்றைய ஆட்சியின்
ஆயுட்காலம் முடியப்போகிறது
என்று எப்போது தெரிகிறதோ
அப்போதிருந்து, அந்த நொடியிலிருந்து
எங்கள் ஆதரவை விலக்கிக்கொண்டு
தமிழ் மக்களின் சார்பாக
எங்கள் எதிர்ப்பைக் காட்ட
தயங்குமளவுக்கு
மானம், வெட்கம்,
சூடு, சொரணை
இல்லாதவர்களல்ல நாங்கள்!

# கொள்கை விளக்கம்

**தமிழ்க் கட்சிகள் இன்றைய சூழ்நிலை கருதி கூட்டாக வெளியிட்ட கொள்கை (?!) விளக்க அறிக்கை.**

யாழ்ப்பாணத்தில் அறுநூறுபேர் காணாமல் போனதற்காக ஆத்திரப்படுகிறவர்கள், அநீதி என்று ஆவேசப்படுபவர்கள் உலக நிலவரம் அறியாதவர்கள்.

நீண்டகாலம் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்துவிட்டதால், யாழ்ப்பாண மக்களுக்கு உலக அனுபவம் போதாமல் உள்ளது.

வியட்நாம் போரில் பல்லாயிரம்பேர் பலியாகினர். பொஸ்னியா போரில் பல இலட்சம்பேர் பலியாகினர். பொல் பொட் ஆட்சியில் பலபல இலட்சம்பேர் பலியாகினர். ஆயிரம், இலட்சம் போன்றவற்றோடு ஒப்பிடாமல்,சில நூறுகளை பெரிதாக எண்ணுவதை நினைத்து, அறிவில்லாத தமிழர்கள் வெட்கப்படவேண்டும்.



ஆக, அறுநூறுபேர்தான் காணாமல் போயினர். இதுவே பல ஆயிரமாகுமானால் நாங்கள் பார்த்துக்கொண்டிருப்போமோ, படுத்துக் கொண்டிருப்போமோ? என்று எங்களுக்கே தெரியாது. எப்படியோ துடித்துக்கொண்டுதான் இருப்போம்.

பாலியல் வல்லுறவாம்... அறிந்தும் மௌனமாக இருக்கிறோமாம். ஐயகோ... இந்தளவு தூரத்திற்கு எங்கள் மக்களை அப்பாவிகளாகவும், சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் தேவை இல்லாமல் கோபப்படும் கெட்ட பழக்கம் உள்ளவர்களாகவும் புலிகள் மாற்றி வைத்திருக்கிறார்களே... கடவுளே நல்லவேளையாக நாம் வந்து சேர்ந்தோம்.

பாலியல் பலாத்காரம் என்பது உலகெங்கும் நடைபெறும் ஒரு விடயமாகும்! இங்கு மட்டும்தான் நடப்பதுபோல சில விஷமிகளும், தமிழ மக்களை தவறாக வழி நடத்தும் பத்திரிகைகளும் வதந்தி பரப்பி வருகின்றன.

பொஸ்னியாவில் பல ஆயிரம் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானார்கள். இங்கே ஒரு நூறைக்கூட தாண்டவில்லை. ப்பூ... இதைப்போய் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருப்பது புத்திஜீவித்தனமல்ல. பத்தாம் பசலித்தனம்.

யாழ்ப்பாணத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்த புலிகள், இங்குள்ள மக்களை சுடும் தோசைக்கல்லுப்போல சூடாக வைத்திருந்து கெடுத்துவிட்டனர். அதற்காக புலிகளை வன்மையாக கண்டிக்க கடமைப்பட்டுள்ளோம்.

. உங்களை ஐஸ்பெட்டியில் எப்போதும் குளிர்நிலையில் வைத்திருக்கவே நாம் வந்திருக்கிறோம்.

புலிகள் படையினரைச் சுட்டால் அவர்கள் மக்களைச் சுடுவது தவிர்க்க முடியாதது. ஏனெனில் திருப்பிச் சுடத்தான் துப்பாக்கி வைத்திருக்கிறார்கள். அப்படிச் சுடும்போது எதிரே நின்று சூடு வாங்காமல், புலிகள் தப்பியோடுவதால்தான், வேறு வழியின்றி மக்களை நோக்கிச் சுடவேண்டி இருக்கிறது. ஏனெனில் துப்பாக்கி வைத்திருப்பது சுடுவதற்கே.

எனவே, பத்திரிகைகள் சமூக நன்மை மற்றும் இன அமைதி கருதி பாலியல் வல்லுறவு, சிறு கொலைகள், குட்டியளவான கைதுகளை பெரிதுபடுத்தக்கூடாது.

அதையும்மீறி செய்திகள் வருமானால் மக்களே! சினம் தவிருங்கள்! அல்லது எங்களிடம் முறையிட்டால், நாம் மேலே முறையிட்டு சாந்திக்காகவும், சௌஜன்யத்துக்காகவும் அறிக்கையிட்டு பிரார்த்திப்போம்.



## நன்றி நன்றி

**அ**ண்ணர் ஆறுமுகத்தின் பெருமை அறிந்து சமாதான ஆதரவாளர் பட்டம் பறந்து வந்துள்ளது.

அன்னார் சங்கக் கடைகளில் சுருட்டியதாகவும், பலரிடம் கடன்வாங்கிக் கொண்டு ஏமாற்றியதாகவும் முன்பு கூறப்பட்ட கதைகள் எல்லாம் கட்டுக்கதைகள் என்பதை நிரூபிக்கும் வகையில், பட்டம் கொடுத்த அமைச்சையும், பெற்றுக் கொடுத்த தமிழ்க் கட்சியையும் வாழ்த்துகிறோம்.

நன்றி. நன்றி. நன்றி.

இது நாமாகவே நமது சுயபுத்தியுடன் கொடுத்த விளம்பரமாகும். அண்ணர் ஆறுமுகம் பலமுறை வீடுதேடிவந்து நச்சரித்ததால் கொடுத்த விளம்பரமல்ல.

காந்தி மன்றம், யாழ்ப்பாணம்.

## வருகிறது ரி.வி ரெலி:.போன்

**தொ**லைபேசியுடன் கூடிய தொலைக் காட்சியில் பேசுமளவுக்கு தகுதியும், வசதியும் உள்ளவர் எமது தலைவர். அதனை மறந்து இரண்டு கட்சிகள் பெருமை பேசியுள்ளன.

விரைவில் நவீனரக ரி.வி. ரெலிஃபோன் இறக்குமதி செய்யப்படவுள்ளது. அதன்பின்னர் தமிழ் மக்களின் துன்ப துயரங்களை அதற்கேற்ற முகபாவனைகளுடன், எங்கள் தலைவர் விளக்குவதை, ஆட்சித் தலைவர்கள் கண்டு களிக்கத்தான் போகிறார்கள்.

**காதிலை பூ கந்தசாமி**

## இண்டர் நெட் மூலம் விடுத்த அறிக்கை

ஏனைய தமிழ்க் கட்சிகள் வெறும் தந்தி மூலமும், வெறும் ஃபக்ஸ் மூலமுமே தமிழ் மக்களின் குறைகளை ஜனாதிபதிக்கு தெரிவித்து வந்தன.

எமது கட்சித் தலைவர் மட்டுமே முதன் முதலாக இண்டர் நெட் மூலமாக ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

தமிழர்கள் முதன் முதலாக விஞ்ஞான பூர்வமான, தொழில் நுட்ப தேர்ச்சிபெற்ற, கம்பியூட்டர் யுகத் தலைமையைப் பெற்றுள்ளனர் என்று சர்வதேச இராஜதந்திரிகள் பாராட்டியுள்ளனர்.

## செல்:.போனில் பேச்சு

'இண்டர் நெட்டில்' தங்கள் தலைவர் கடிதம் அனுப்பியதாக சக தமிழ்க் கட்சி ஒன்று தெரிவித்திருக்கிறது.

எங்கள் தலைவர் செல்:.போனிலேயே எடுத்துக்கூறக்கூடியளவுக்கு ஆட்சிபீடத்தில் உள்ளோருடன் நெருக்கம் உள்ளவர். அதனால் இண்டர்நெட்டில் தாமதிக்காமல், நேரடியாகவே செல்:.போனிலேயே தரையில் இருந்தபடியோ, வானில் பறந்தபடியோ, நீரில் நீச்சலிட்டபடியோ தொடர்பு கொண்டு பொன்னான நேரத்தை மிச்சப்படுத்தி, தமிழ மக்களை எங்கோ கொண்டு போய் நிறுத்த அயராது உழைக்கிறார்.

சேர் பொன் இராமநாதன், அருணாசலம் போன்றோர்கூட ஜனாதிபதியுடன் செல்:.போனில் பேசியதில்லை என்று வரலாற்று பேராசிரியர்கள் எங்கள் தலைவரை வாழ்த்தியுள்ளனர் என்பதை மிகுந்த அடக்கத்துடன் கூறிக்கொள்கிறோம். இதனை எதிர்காலத் தேர்தல் காலங்களில் தமிழ் மக்கள் மறவாதிருக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.




படிப்பகம்

www.padippakam.com




பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.
கிளை: 105. காலி வீதி.வெள்ளவத்தை.கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

# முதன் முதலாக



➡ நவீன உலகில் நவநவமான மோட்டார் சைக்கிள்கள் பட்டி தொட்டிகளிலும் பவனி வருவதைப் பார்க்கிறோம். சாதாரணமாக அன்றாடப் பணிகளுக்குச் செல்லும் பாமரர்களும் பயன்படுத்துமளவுக்கு மோட்டார் சைக்கிள்கள் மலிந்துவிட்டன.

படத்தில் காணப்படுவதுதான் முதன் முதலில் உருவான மோட்டார் சைக்கிள். ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த பொறியியலாளரான கொட்டிலெப் டெய்ம்லர்- 1885ம் ஆண்டு இதனை வடிவமைத்தார்.

அக்காலத்தில் தயாரிக்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்ட மரத்தாலான கட்டுமானம் கொண்ட பைசிக்கிளின் மீது பின்டன் இயந்திரத்தினைப் பொருத்தி இதனை ஓடவிட்டார்.

இதனை ஓர் ஆதரமாகக் கொண்டே பல்வேறு மாற்றங்களைக் கொண்ட மோட்டோர் சைக்கிள்கள் உருவெடுத்தன. இன்றைய மோட்டார் சைக்கிளின் இதனை தமது மூதாதை என்று அழைக்கலாம். சிரிக்காதீர்கள். மனிதர்கள் குரங்குகளை முதாதையர்களாக அழைப்பதை விட இது பரவாயில்லை. அழகாக, அம்சமாக இருக்கிறது.




புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657

# செம்மலை

➘ அவுஸ்திரேலியாவின் வட பிராந்தியத்தின் மத்தியில் உல்லாசப் பயணம் மேற்கொள்வோர் அங்குள்ள 'செம் மையம்' என்ற இடத்துக்குச் செல்லாமல் திரும்ப மாட்டார்கள். அழகும் புதுமையும் இணைந்த இயற்கைக் காட்சிகள் பார்போரைப் பரவசப்படுத்தும்.

ஒரு பரந்த வெட்டவெளியில் பல யானைகள் முட்டி மோதிக்கொண்டு படுத்திருப்பது போல ஒரு பிரமாண்டமான குன்று தென்படுகிறது.

சூரியோதயத்துக்குமுன் இருளடைந்த குன்றாகக் காட்சிதரும் இது கதிரவனின் பொற்கிரணங்கள் மெல்ல மெல்லத் தழுவும்போது பற்பல வர்ணங்களில் காட்சி தருகிறது.

சூரியனின் ஒளி நன்றாகத் தழுவியதும் பட்டதும்-படத்தில் தெரிவதுபோல்- செங்குன்றாகக் காட்சி தருகிறது. குன்று மட்டும் செந்நிறமாக இல்லாமல் அதன்மீது ஒளிபட்டுத் தெறிக்குமிடமெல்லாம் செந்நிறமாக தெரிகின்ற அபூர்வ காட்சியையே இங்கு காண்கிறார்கள்.

பயணிகள் முதல் நாளிரவே அப்பிரதேசத்துக்குச் சென்று கூடாரம் அடித்துத் தங்கி, அடுத்தநாள் சூரியோதயத்தில் இந்த அபூர்வக் குன்றின் வேடிக்கை விநோதங்களைப் பார்த்துவிட்டுத் திரும்புவார்கள்.

அவுஸ்திரேலியப் பூர்வீகக் குடிகள் இக்குன்றுக்கு 'உலுறு' என்று பெயரிட்டுள்ளனர். ஆங்கிலத்தில் இதனை 'அயேர்ஸ் ரொக்' என்கின்றனர்.

'உலுறு' என்றால் பெருங்கல்லு என்று அர்த்தம். இந்த குன்றின் நீளம் 2.41 கிலோ மீட்டர். அகலம் 1.6 கிலோமீட்டர். யாமறிந்த மலைகளிலே இதுபோல வேறெங்கும் அறிந்ததில்லை அல்லவா.




# அடடே...



⬅ வண்ணத்துப்பூச்சிபோல் அழகாக வட்டமிட்டுப் பறந்து திரியும் அந்துப் பூச்சிகளைப் பார்த்திருப்பீர்கள். அந்துப் பூச்சியின் புழுத் தோற்றம்தான் இது. இப்புழு பல்தரப்பட்ட வண்ணங்களில் காணப்படும்.

வண்ணத்துப் பூச்சியைப்போல் அந்துப் பூச்சியும் இலைகளின் மீது முட்டையிட்டுப் பொரித்ததும் இப் புழுக்கள் தோன்றுகின்றன. இவற்றை அளவைப் புழுக்கள் என்றும் கூறுவார்கள்.

இவை ஊர்ந்து திரியும் முறையைக் கொண்டு இடப்பட்ட காரணப் பெயர்தான் அளவைப் புழு. முதலில் பின்புறத்தை முன்னே இழுத்து நடுப்பகுதியை- படத்திலுள்ளதைப் போன்று மேலே உயர்த்தி வளைத்து பின் முன் பகுதியை முன் நோக்கி நகர்த்தும். இத்தகைய ஊரும் முறை பார்ப்பதற்கு விசித்திரமாக இருக்கும்.

அளவைப் புழுக்கள் உலகனைத்தும் 4000 இனங்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இப்புழுக்களைப் பற்றிய பண்டைய நம்பிக்கையும் ஒன்றுண்டு. 'இப்புழு ஒரு மனிதனின் உடலில் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஊர்ந்து முடிக்குமானால் அந்த மனிதன் இறந்து விடுவான்,' என்கிறது அக்கதை. ஜாக்கிரதை.


# வர்ணப்பாம்பு

➘ சில பிராணிகள் தங்கள் உடலின் சில பகுதிகளை காலத்துக்குக் காலம் களைந்துவிட்டு புதிய பகுதிளை உருவாக்கிக் கொள்ளுகின்றன. பூச்சி புழுக்களுக்கும் இப்பழக்கமுண்டு. பறவைகள் அடிக்கடி தங்கள் இறகுகளை உதிர்த்து விட்டு புதிய இறகுகளை முளைக்கச் செய்கின்றன. இதேபோல் பாம்புகளும் தமது செட்டைகளைக் காலதுக்குக்காலம் நீக்கிவிட்டு புதிய செட்டைகளை உருவாக்குகின்றன.

செட்டை கழற்றும் காலம் வந்ததும் கரடு முரடான ஒரு கல் அல்லது மரம் போன்றவற்றில் முதலில் தனது முகத்தை உரசுகிறது. அப்போது பழைய செட்டையில் பிளவு ஏற்படுகிறது.

இதேபோல் உடலின் ஒவ்வொரு பாகத்தையும் உரசியதும் சில நிமிடங்களில் பழைய செட்டை முற்றாகக் கழன்று விடுகிறது.

அவ்வாறு செட்டை கழன்று விழும் நொடியில் பாம்பின் உடல் இப்படி வர்ண நிறத்தில் தெரியும். செட்டை கழன்று கொண்டிருக்கையில் கிளிக் செய்யப்பட்ட படமே இது.



# பணம்

➘ பண்டைக்கால மனிதர்கள் பண்டமாற்று முறையில் தேவையான பொருட்களை வாங்கினர். விற்றனர். பின்னர் தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கள் பயன்படுத்தப்பட்டன.

வர்த்தகத்துறையில் நாணயங்கள் பயன்படுத்தும்முறை மேற்குத் துருக்கியிலுள்ள லிடியா என்ற இடத்தில் கிறிஸ்துவுக்கு முன் 600ம் ஆண்டளவில் தான் தொடங்கியதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.


அக்கால கட்டத்தில் இந்தியாவிலும் சீனாவிலும் நாணயம் பயன்படுத்தப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

கடதாசியில் பணம் அச்சிடப்படும்முறை சீனாவில்தான் ஆரம்பிக்கப்பட்டதாக அறியப்படுகிறது. 13ம் நூற்றாண்டில் மார்கோ போலோ சீனா சென்றிருந்தபோது ஆட்சி புரிந்த குப்ளை கான் மன்னன் காலத்தில் கடதாசியில் பொறித்த பணம் புழக்கத்தில் இருந்ததாக தனது பயண நூலில் எழுதியுள்ளார்.

ஐரோப்பிய நாடுகளில் கி.பி. 1600களில்தான் கடதாசிப் பணம் புழக்கத்துக்கு வந்தது. அதுவும் வங்கிகளில் அடமானமாக வைக்கப்படும் தங்கம், வெள்ளி போன்றவற்றுக்காக அவ்வங்கிகளே கடதாசி பணத்தை ஈடாகக் கொடுத்தன. இம்முறை பின்னர் அரசாங்கங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டன.

இப்படத்தில் காணப்படுவது சாதாரண சீட்டாட்டத்துக்கான சீட்டல்ல. இதுவும் பண நோட்டுத்தான்.

கனடாவில் ஃபிரெஞ்சுக்குடியேற்றம் நிலை பெற்றபோது, அங்கு பாதுகாப்புக் கடமைகளுக்காகச் சென்ற ஃபிரெஞ்சுப் படைவீரர்களுக்கு வழங்கப்பட்ட பணம்தான் இது. இச் சீட்டில் பணத்தின் பெறுமதியைக் குறிப்பிட்டு, அங்கிருந்த குடியேற்றத் தேசாதிபதி பின்புறத்தில் கையொப்பமிட்டுக் கொடுத்துவிட்டால் அது செல்லுபடியாகும். இத்தகைய கடதாசிப் பணச் சீட்டு கி.பி. 1685 முதல் 70 வருடங்கள் வரை கனடாவில் புழக்கத்தில் இருந்தது.




# அம்மாடியோவ்

⬇ கிறிஸ்துக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நடைமுறையிலிருந்த ஒரு கலைதான் கண்கட்டி வித்தை. மஜிக் என்றும் பொதுவாக கூறுகிறோம்.

பார்வையாளர்களின் கண்களையும் கருத்தையும் தன்னுடைய ஆற்றலால் ஈர்த்து வித்தைக்காரன் சில சாகசங்களைப் புரிகிறான். நடக்க முடியாததொன்றை நடத்திக் காட்டி- அது உண்மையானது என்று நம்பவைக்கிறான்.

பிரபல வித்தைக்காரர்கள் புரியும் மயிர்க்கூச்செறியும் சாகசச் செயல் ஒன்றையே இங்கு காண்கிறீர்கள்.

மிகக் கூரான வாளின் முனையை ஒரு பெண்ணின் பிடறியில் செருகி அந்தரத்தில்- வேறு எதுவிதமான தொடர்புமில்லாமல் உடலை மிதக்க வைக்கிறார்.

கனடாவைச் சேர்ந்த டௌங் ஹென்னிங் என்னும் வித்தைக்காரர், தன்னுடைய உதவியாளரை இவ்வாறு மிதக்க வைத்திருக்கிறார்.


உலகனைத்தும் பலதரப்பட்ட மஜிக் வித்தைக்காரர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் பரம்பரை பரம்பரையாக தகப்பனிடமிருந்து மகன் கற்றுக் கொள்வது போல் வித்தைகளைக் கற்று அதனையே தமது வருவாய்க்கான தொழிலாக ஏற்றுள்ளனர்.


குரு-சீடர் முறையிலும் இக்கலை பயிலப்பட்டு வருகிறது. தமது ஆற்றலினால் புதுப்புது உத்திகளும் இக்கலைக்கு மெருகேற்றி வருகின்றன.

மஜிக்காரர்களுக்கு என்று சர்வதேச மட்டத்தில் சங்கங்களும் உள்ளன. அடிக்கடி போட்டிகளும் வைத்து 'உலகில் சிறந்த மஜிக்காரர்கள்' விருதுகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

எச்சரிக்கை: போலிச்சாமியார்களும் மஜிக் வித்தைகளை தெரிந்துகொண்டு தங்களைக் கடவுள் அவதாரங்களாக காண்பிக்க பயன் படுத்துகிறார்கள். நம்மில் பலர் காதில் பூ வைத்துக் கொண்டு அவர்கள் காலில் விழுகிறோம்.



# 1 வது பிறந்தநாள் வாழ்த்து



## தனுஷன் (சுஜன்) 03.05.1998

சங்கரன்-புஸ்பமாலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் தனுஷன் (சுஜன்) தனது முதலாவது பிறந்த நாளை 03.05.1998 அன்று வெகு விமரிசையாக தனது இல்லத்தில் கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா, வவுனியாவில் உள்ள அப்பம்மா, அப்பப்பா-பெரியப்பாமார், பெரியம்மாமார், சித்தப்பா, சித்தி, அண்ணன்மார், அக்காமார், மச்சாள்மார், மற்றும் திருகோணமலை கப்பல்துறையில் உள்ள தாத்தா, பாட்டி, மாமா, மாமி, மற்றும் சித்தி ஆகியோர் திருகோணமலை காளியம்மாள் அருள் பெற்று நீடுழி வாழ வாழ்த்துகிறார்கள்.



படிப்பகம்